# திருக்கோயில்


"என் கடன் பணி செய்து கிடப்பதே"



ஸ்ரீ நரசிம்மர் திருவுருவம், திருவரங்கம்.

மாலை 10]  பிலவங்க - மாசி - மார்ச்சு, 1968  [மணி 6

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



திருநெல்வேலியில் நடைபெற்ற பாவை மாநாட்டில்,
அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் அவர்களும்,
மதுரைத் துணை ஆணையர் திரு. கே. இர்ராஜா அவர்களும்,
கலந்து கொண்டு சிறப்பித்தல். (9—1—68)

## பொருளடக்கம்


1. சிவராத்திரி விழா
2. திருவள்ளுவரும் திருமூலரும்
3. திருப்பாவைச் செழும்பொருள்
4. மகாபாரதம்
5. ஸ்ரீராமாயண ரஸப்ரவாகம்
6. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
7. அர்ச்சையுருவத்தின் சிறப்பு
8. ஞானசித்தர்களும் சித்தமருந்தும்
9. திருக்குறட் சிறப்புரை நயம்
10. மாய நன்னுடன்
11. பக்தி யுணர்வு


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** — **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 10] பிலவங்க - மாசி - மார்ச், 1968 [மணி 6


## சிவராத்திரி விழா

**முன்னுரை :**

இந்திய நாடு முழுவதிலும், அதன் சார்பு பெற்ற பிற சில நாட்டுப் பகுதிகளிலும், சிறப்பாகக் கொண்டாடப்பெறும் விழாக்கள் அல்லது விரதங்கள் பலவற்றுள், சிவராத்திரியும் ஒன்றாகும்.

'விழா' என்னும் சொல்லை 'விழி' என்னும் பகுதியினின்று தோன்றியதாகக்கொண்டு, 'விழித்திருந்து கொண்டாடப் பெறுவது, என அதற்குப் பொருள் கூறுவர் சிலர். (Tendentious Etymology). "முட்டுவயிற் கழறல்" என்னும் அகப்பொருளின் துறைக்கு மேற்கோளாக எடுத்துக் காட்டப்பெறும் நிலையில்,

> " இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்
> விழவு இன்றாயினும் துஞ்சா தாகும்."

எனவரும் அகநானூற்றுச் செய்யுள் (122) வரிகள், ஓராற்றால் இவ்வுண்மையை உணர்த்தி நிற்கும்.

இப்பொருளுக்கு முழுவதும் ஏற்ற வகையில், விழித்திருந்தே அநுட்டிக்கப் பெறுவது, சிவராத்திரி விரதமாகும்.

> "..............சிவராத்திரிப்
> போது துயிலோம் என்ற விரதியரும்
> **அறிதுயில் போலே இருந்து துயில்வார்"**

எனவரும் தாயுமான சுவாமிகள் பாடலும், சிவராத்திரி விரதமானது இரவில் துயிலாமல் இருந்து கடைப்பிடிக்கப் பெறுதலைக் குறிப்பிடுதல் காணலாம்.

**சிவராத்திரிச் சிறப்பு :**

சிவராத்திரி வழிபாட்டின் மேன்மை செப்புதற்கு அரிய பெருஞ்சிறப்பு உடையது. வேதங்களிற் சாமமும், யாகங்களில் அசுவமேதமும், மலைகளில் மகமேருவும், நதிகளிற் கங்கையும், பூதங்களில் ஆகாயமும், தேவர்களில் இந்திரனும் முதன்மைபெற்று விளங்குதல் போல, சிவபெருமானுக்குரிய விரதங்களில் முதன்மையும் பெருமையும் மிக்குத் திகழ்வது சிவராத்திரி விரதமாகும்.

> " மறைகளிற் சாமம்; மகங்களிற் புரவி
> மகம்; மலை களில்மக மேரு;
> நிறைபுனல் நதியிற் கங்கை; ஓர் ஐந்தாய்
> நிகழ்ந்தபூ தத்தின் ஆகாயம்;
> முறைதெரி சுரரிற் கருமுகில் ஊர்தி
> முதன்மைபெற் றுயர்ந்ததே போல,
> அறைதரு விரதம் அனைத்தினும் உரைக்கும்
> **அரன்இரவு அதிகம்என்று அறிமின் "**

**ஜோதிர் லிங்கங்கள் :**

இந்திய நாட்டுப் பண்பாட்டின் ஒருமைப்பாட்டினை விளக்கி வலியுறுத்தும் வகையில், இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும்

உள்ள மக்களால்,சிவராத்திரி விழாவானது மிகவும் சிறப்பாகத் தொன்றுதொட்டு, எத்துணையோ பல நூற்றுண்டுகளாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது. சிவ ராத்திரி வழிபாட்டிற்குப் பெரிதும் சிறப் புடையனவாகப் பாராட்டப்பெறும் 'ஜோதிர் லிங்கங்கள்' பன்னிரண்டும், இந்தியாவின் பலவேறு பகுதிகளில் அமைந்து சிறப்புற விளங்கி வருகின்றன.

1. சௌராட்டிரத்துச் சோமநாதர்
2. ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சுனர்
3. உஜ்ஜயினி மகாகாளர்
4. ஓங்காரத்துப் பரமேசுவரர்
5. கேதாரநாதத்துக் கேதாரேசுவரர்
6. கோதாவரி நதிக்கரையில் டாகினி என்னும் தலத்திலுள்ள பீமசங்கரர்
7. சித்தபூமில் திசமும் வைததியநாதர்
8. தாருகவனத்து நாகேசர்
9. நாசிக் அருகில் கௌதமியாற்றின் கரையில் விளங்கும் திரியம்பகேசுவரர்
10. இராமேசுவரம் இராமநாதர்
11. காசி விசுவநாதர்
12. சிவாலயத்துக் குசுமேசர்.

என்னும் ஜோதிர் லிங்கங்கள் பன்னி ரண்டும், சிவராத்திரி விரதத்தின்போது தரிசனம் செய்து வழிபடுவதற்குப் பெரிதும் சிறப்புடையனவாக விளங்கி வருகின்றன. இத்தலங்களிற் சிவராத்திரியின்போது பெருந்திரளான பக்தர்கள் சென்று வழி பட்டு மகிழ்கின்றனர்.

### சிவராத்திரி வரலாறுகள் :

(1) சிவராத்திரி விரதத்தின் வரலாற் றினைப்பற்றி நூல்கள் பலவகைகளில் விளக்கிக் கூறுகின்றன. ஒரு சமயம் சிவ பிரான் திருவண்ணுமலையிற் பேரொளிப் பிழம்பாகத் தோன்றி வெளிப்பட்டு அருளினன். அங்ஙனம் வெளிப்பட்டு அருளிய இரவே சிவராத்திரி எனப் பெறு வதாயிற்று. அச்சிவராத்திரியில் இறை வனைப் பரவிப் பலரும் உய்ந்தனர் எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

"அரியும் யானும் முன் தேடும்அவ்
அனற்கிரி, அனல
கிரிஎ னும்படி நின்றதால்!
அவ்வொளி கிளர்ந்த
இரவ தேசிவ ராத்திரி
ஆயினது! இறைவற்
பரவி உய்ந்தனர் அன்னதோர்
வைகலிற் பலரும்"

(2) ஒருகால் உலகங்கள் எல்லாம பிரளயத்தில் அழுந்தி, உயிர்களனைத்தும் மடிந்து மறைந்தன. அக் கற்ப முடிவின் இரவில் நான்கு யாமத்தும் உமையம்மை யார், இறைவனை ஆகம விதிப்படி அருச்சனை புரிந்து வழிபட்டு மகிழ்ந்தனர். அன்றியும், அதுபோது அம்மையார், உயிர்களெல்லாம் உய்யும் பொருட்டு ஐந் தொழில்களைத் தொடங்கி இயற்றியருளு மாறு இறைவனைப் பணிந்து வேண்டிக் கொண்டார். அவ்விரவே சிவராத்திரி ஆயிற்று என்பர். மற்றும் சிலர்,

"மலைமடந்தை விளையாடி
வளையாடு கரத்தால்
மகிழ்ந்தவள்கண் புதைத்தலுமே
வல்லிருளாய் எல்லா
உலகுடன்தான் மூடஇருள்
ஓடும்வகை நெற்றி
ஒற்றைக்கண் படைத்துகந்த
உத்தமன்......"

எனச் சுந்தரரும்,

"நாயகன் கண்ந யப்பால்
நாயகி புதைப்ப எங்கும்
பாய்இருள் ஆகி மூடப்
பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னுலே
சுடர்ஒளி கொடுத்த பண்பில்
தேயமார் ஒளிகள் எல்லாம்
சிவன்உருத் தேசது என்னர்"

எனச் சிவஞான சித்தியாரில் அருள்நந்தி சிவமும் குறிப்பிடுதல் போல, தாம் இறை வனின் திருக்கண்களை மூடி உலகுயிர்கள் இருளில் அழுந்தி வருந்துமாறு செய்த பிழை தீரும்படி, அம்பிகை சிவராத்திரியின் நான்கு யாமங்களிலும் ஆகம விதிப்படி சிவபிரானைப் பூசித்து அருள் பெற்றனர் எனவும் கூறுவதுண்டு.

(3) இனி, வேறொரு வகையாகவும் சிவ ராத்திரியின் வரலாறு இயம்பப்படும். திருப் பாற் கடலில் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சு தோன்றியபோது, அதன் வெம் மைக்கு ஆற்றாது அஞ்சி நடுங்கிய தேவர்கள், அதனை உண்டு தமது மிடற்றில் அடக்கியருளிய சிவபெருமானைப் பேரன் புடன் வழிபட்டு உய்ந்த இரவே சிவராத்திரி யாகும் எனவும், பிறவாறும் பெரியோர்கள் கூறுவர்.

### வழிபட்டுப் பயன் அடைந்தோர்:

இச்சிவராத்திரி விரதத்தினைச் சூரியன் சந்திரன் முருகன் இயமன் மன்மதன் இந்திரன் அக்கினி குபேரன் முதலிய வர்கள் கடைப்பிடித்து, அப்புனிதப் பெரு நாளில் இறைவனை வழிபட்டுத் தத்தம் மனத்தில் விரும்பிய நன்மைகளை அடைந்து மகிழ்ந்தனர் என நூல்கள் கூறுகின்றன.

"இந்தநல் விரதந் தனைச்சிவன் நந்திக்கு
இசைத்திட உணர்ந்து, செங் கதிரோன்
கந்தவேள், கதைக்கைக் காலன், விற் காமன்
கடவுளர், கண்ணொர்ஆ யிரத்தோன்,
செந்தழற் கடவுள், மதி, நிதிக் குபேரன்
செப்பிய வரன்முறை நோற்றுத்
தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத்
தகைபெறு தலைவர் ஆயினரால்!"

### முசுகுந்தன்:

பண்டொரு காலத்தில் வானை அளாவிய ஒரு பூங்காவில், ஒரு வில்வ மரத்தின் அடியில் சிவபெருமான் உமாதேவி யாரொடு எழுந்தருளி யிருந்தார். அப் பொழுது மரங்களில் வாழும் இயல்புடைய தாகிய முசுக்கலை (குரங்கு) ஒன்று, அவ் வில்வ மரத்தில் ஏறியிருந்துகொண்டு அதன் இலைகளைப் பறித்துக் கீழே வீசிக் கொண்டிருந்தது. அவ் வில்வ இலைகள் தற்செயலாக அம்மையப்பர் திருமேனியின் மீது வந்து விழுந்து கொண்டிருந்தன. அந்நாள சிவராத்திரியாக விளங்கியது. சிவபிரான் தனது பெருங்கருணைத் திறத் தால், அக்குரங்கைச் சினவாமல், அது தம்மைச் சிவராத்திரி நாளில் வில்வத் தளிர்களாற் பூசித்ததாகக் கொண்டு மகிழ்ந்து, அதற்குப் பேரருள் புரிந்தார். அதன் பயனாக, அம் முசுக்கலையானது முசுகுந்தன் என்னும் சோழவேந்தனாகப் பிறக்கும் பேறு பெற்றது. முசுகுந்தன் என்னும் சோழ மன்னனின் புகழ், சிலப் பதிகாரம் – மணிமேகலை – கந்தபுராணம் – கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களிற் சிறப்புறக் குறிப்பிடப் பெற்றுள்ளது. இம் முசுகுந்தனே, தேவேந்திரனிடம் இருந்து தான் பெற்றுக்கொண்டு வந்த தியாகராசர் திருவுருவங்கள் ஏழினையும்,

"சீரார் திருவாரூர் தென்நாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காருயில் - பேராக
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்"

என்ற வெண்பாவாற் குறிக்கப்படும் ஏழு தலங்களிலும், எழுந்தருளச் செய்து மகிழ்ந்தனன் என்பர் பெரியோர். ஆதலின், முசுகுந்தச்சோழனின்வரலாறும்சிவராத்திரி விழாச் சிறப்பினை விளக்குவதாகும் எனலாம்.

### சிவராத்திரி பற்றிய நூல்கள்:

இங்ஙனமே சுகுமாரன் – அங்குலன் – சவுமினி–கன்மாடபாதன் முதலியவர்களும், சிவராத்திரி விரதம் கடைப்பிடித்துப் பேறு பெற்றமையினை, யாழ்ப்பாணம் காசி. அ. வரதராச பண்டிதர் என்னு ( புலவர் பெரு மகனார் இயற்றிய "சிவராத்திரிப் புராணம்" விரிவாக விளக்கும். வரதுங்கராம பாண் டியர் இயற்றிய பிரமோத்தர காண்டம், வயலூர் ஞானவரோதயர் பாடிய உபதேச காண்டம் முதலிய நூல்களும், சிவராத்திரி யின் சிறப்பைக் கூறும்.

### மாக சிவராத்திரி:

சிவராத்திரியானது மாக சிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி என ஐந்து வகைப்படும். அவற்றுள் மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மாக சிவராததிரியாம் (மாகம்–மாசி மாதம்). இதுவே வருஷ சிவராத்திரி என்றும், மகாசிவராத்திரி என்றும் வழங்கப் படும். திரயோதசியும் சதுர்த்தசியும் கூடிய இரவு சிவலிங்க சொருபமாம. அத்

தகைய சிவராத்திரியிற் சிவபூசை செய்தால், பன்னிரண்டு கோடிச் சிவலிங்கங்களை ஒருங்கே வழிபட்ட பலனை எய்தலாம் என நூல்கள் கூறும்.

"....................பன்னிரு கோடி
மூல மாம்இலிங் கங்களை
முறைமையிற் சென்று
சீல மோடுகண் டுறுபயன்
சிறப்புறச் செறியும்."

**அநுட்டிக்கும் முறை :**

சிவராத்திரி விரதம் அநுட்டிக்க விரும்புபவர்கள், அதற்கு முன்னாள் ஒரு வேளையே யுண்டு, தூய்மையும் ஒழுக்கமும் பேணி அன்றிரவு துயின்று, மறுநாள் சிவராத்திரி தினத்தன்று வைகறைப்பொழுதில் துயில் எழுந்து, புண்ணிய தீர்த்தத்தில் நீராடுக. சூரியோதய வேளையிற் காலை அநுட்டானங்களை இயற்றித் திருக்கோயிலுக்குச் சென்று சிவபிரானை விதிப்படி பணிந்து வழிபடுக. அன்று பகல் முழுதும் சிவ சிந்தனையோடும் சிவத்தியானத்தோடும் தூய்மையாக இருக்க! சிவபூசைக்குரிய பொருள்களை யெல்லாம் கருத்துடன் தொகுத்து வைத்துக்கொள்க. அவற்றில் இயன்றனவற்றைச் சிவாலயத்திற்கும் கொடுத்துஅங்குஅர்ச்சனைமுதலியன நிகழ ஏற்பாடு செய்க. வீட்டிற் பூசையறையைக் கோமயத்தால் மெழுகித் தூய்மை செய்து கோலமிட்டு அழகுபடுத்துக. மாலையிற் சிவாலயம் சென்று தரிசனம் செய்து மீள்க. மீண்டதற்பின் சிறிது நேரம் கழித்து நீராடி அநுட்டானங்களை முடித்துக் கொண்டு சிவபூசை செய்யத் தொடங்குக. அதனை ஆகம விதிப்படி முறை தவறுமற் பக்தி சிரத்தையுடன், யாமத்திற்கு ஒரு முறையாக நான்கு யாமங்களிலும் செய்தல் நலம் பயக்கும்.

**அபிடேகம் :**

அங்ஙனம் சிவபூசை செய்யுங்கால் பால் தயிர் தேன் சர்க்கரை இளநீர் பன்னீர் எலுமிச்சம்பழம் சந்தனம் விபூதி முதலியவைகளைக் கொண்டு நான்கு யாமங்களிலும் வழிபாடு நிகழ்த்துக. பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் தேன் கருப்பஞ்சாறு என்பன கொண்டு முறையே அபிடேகம் செய்க.

**அலங்காரம் :**

நான்கு யாமங்களிலும் முறையே அகிற் குழம்பு, வில்வத்தளிர், சந்தனம், தாமரை மலர், பச்சைக் கற்பூரம், முல்லை மலர், குங்குமப்பூ, நந்தியாவர்த்த மலர் என்பனவற்றைக் கொண்டு இறைவனுக்கு அலங்காரம் செய்க.

**அர்ச்சனை :**

நான்கு யாமங்களிலும் முறையே தாமரை மலர், துளசி இலை, வில்வதளம், நீலோற்பல மலர் என்பன கொண்டு அர்ச்சனை புரிக.

**நிவேதனம் :**

நான்கு யாமங்களிலும் முறையே பயற்றம்பருப்புச் சேர்த்த பொங்கல், பாயசம், எள்ளன்னம், சுத்தான்னம் என்பனவற்றை இறைவனுக்கு நிவேதனம் செய்க. நிவேதிக்குங்கால், ஒவ்வொரு யாமத்தும் தூபதீப ஆராதனைகளைச் சிறப்புற விதிப்படி இயற்றுக.

**பாரணை :**

இங்ஙனம் நான்கு யாமங்களிலும் சிவபூசை செய்யுங்கால், தேவார திருவாசகத் திருமுறைத் தெய்வப் பாடல்களை மனமுருகிப் பாடுக. இங்ஙனம் இரவு முழுதும் துயிலை நீக்கிப் பூசை செய்து, மறுநாள் வைகறையில் நீராடிக் காலை அநுட்டானங்களை முடித்துச் சூரியன் உதித்து ஆறு நாழிக்குள் பாரணை செய்க.

**முடிவுரை :**

இங்ஙனமெல்லாம் முறைப்படி செய்ய இயலாத முதுமையாளர் நோயாளர் முதலானோர், தியானம் ஜெபம் சிவபுராண படனம் திருமுறைப் பாராயணம் சிவாலய தரிசனம் முதலியவற்றில் ஈடுபட்டு நின்று, இவ்விரதத்தினை அன்புடன் இயன்ற அளவு அநுட்டிக்கலாம். இவ்வாறு சிவராத்திரி விரதத்தினை முறைப்படி அநுட்டிப்பவர்,

"மூவேழ் சுறறம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி"

என மணிவாசகர் அருளிச் செய்தபடி, தாமும் இறையருள் பெற்றுத் தமக்குரிய மூவேழு தலைமுறைச் சுற்றத்தினரையும் உய்வித்து, நலம் எய்தி இன்புறுவர்.

"மாசி மகத்திற் சிவநிசியின்
மழுமான் ஏந்தி மலர்ப்பாதம்
பூசை புரிவோர் தாம்வேட்ட
போகம் முழுதும் கைக்கொள்வார்"

—(ஆசிரியர்.)



ஸ்ரீ வீரராகவப் பெருமாள்,
திருவள்ளூர்.

அன்பளிப்பு:
திரு. என். கிருஷ்ணசுவாமி,
சென்னை-17.

# திருவள்ளுவரும், திருமூலரும்

**முன்னுரை :**

திருவள்ளுவரும் திருமூலரும், தமிழ் வானில் இணையின்றிச் சிறந்துயர்ந்து திகழ்ந்தொளிரும், இருபெருந் தெய்விகச் சுடர்கள் ஆவர். இவ்விருவரையும் நம் செந்தமிழ்த் தாயின் "புண்ணியக் கண்கள் இரண்டு" எனப் புகழ்தலும் பொருந்தும். திருவள்ளுவர் ஒப்புயர்வற்ற சிறந்த தெய்வப்புலவர்; திருமூலர் தன்னிகர் அற்றுத் தலைசிறந்த சித்தர் பெருந்தகை! திருவள்ளுவரை இன்று வெளிநாட்டவரும் ஓரளவேனும் தெரிந்துகொண்டு போற்றத் தலைப்பட்டுள்ளனர்; ஆனால் திருமூலரைக் குறித்து நம்மிலேயே பலர் போதிய அளவு தெரிந்துகொள்ளவில்லை. எனினும், திருவள்ளுவரைப்போலவே, திருமூலரும்கூட, உலகம் வியந்து போற்றி உய்தற்குரிய பெருஞ் சிறப்புடையவராவர் என்பதில் ஐயம் இல்லை. திருவள்ளுவர்க்கும் திருமூலர்க்கும், பெரிதும் நெருங்கிய தொடர்பு உண்டு.

**திருவள்ளுவர் :**

திருவள்ளுவர் தமிழகத்தில் தோன்றியருளிய சான்றோர்கள் பலருள்ளும் தலைசிறந்த ஒருவர். அவர் அருளிச்செய்த திருக்குறளின் கருத்துக்களையும், சொற்பொருள்களையும், அவருக்குப்பின்னர் வந்த சான்றோர்கள் அனைவருமே, மிகவும் வியந்து போற்றி உவந்து தழுவிக்கொண்டுள்ளனர். அருளியற் சான்றோர்களாகிய ஆழ்வார்களும் நாயன்மார்களும்கூட, திருவள்ளுவரின் கருத்துக்களை ஆங்காங்குத் தத்தம் பாடல்களில் எடுத்துப் போற்றியுள்ளனர்.

திருவள்ளுவர் சிறந்த பெருங்கவிஞர்; நீதி நூலாசிரியர்; மெய்ப்பொருளியற் சான்றோர்; இலக்கியப் பேராசிரியர்; அரசியல் அறிஞர்; பொருளியல் மேதை; பல்கலைக் குரிசில்; உலகுக்கே பெரும் வழிகாட்டி! காலமும் இடமும் கடந்து சாலவும் நிலைபெற்று, ஞாலமே புகழ்ந்து வியக்கும் திருக்குறள் என்னும் செந்தமிழ்ப் பெருநூலை இயற்றி அளித்த பெருவள்ளல் அவர்! பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும், அவர்தம் அருளுரைகள் அமைந்து பொலிந்து விளங்குகின்றன.

**திருக்குறள் :**

உலகப் பெரும் சமயத் தலைவர்களும் சான்றோர்களும் கூறியுள்ள சிறந்த கருத்துக்களெல்லாம், திருவள்ளுவரின் திருக்குறளில் செறிந்து கிடக்கக் காண்கின்றோம். எல்லாச் சமயத்தவரும் இனிது உவந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் உயர்வற உயர்ந்த உண்மைகளை, நடுநிலை பிறழாமல், திருவள்ளுவர் சுவைமிக நன்கினிது விளக்கியருள்கின்றார். அவர்தம் நூல், நவில்தோறும் நயம் பயக்கின்றது. தொட்டனைத் தூறும் மணற்கேணி போல, நாம் கற்றனைத் தூறும் நற்கருத்துக்களை உடையதாகத் திருக்குறள் மிளிர்கின்றது. ஒருநாடு ஒருகாலம் ஒருமொழி ஓர் இனம் என்பனவற்றிற்கே உரியதாகிவிடாமல், எல்லாக் காலமும் நாடும் மொழியும் இனமும் ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள் அனைவருக்குமே உரிய, மாபெரும் பொது மறை நூலாகத் திருவள்ளுவரின் திருக்குறள் திகழ்கின்றது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுபற்றியே, நூல்கள் பலவும் பொதுவாக விளக்கும். வாழ்க்கையின் பலதிறக் கூறுகளையும், முழுவதாகவும் ஒருசேரவும், முன்னொடுபின் முரண்படாமல் விளக்கும் திறனில், திருக்குறளுக்கு இணையான ஒரு நூலும் இல்லை எனத் துணிந்து கூறலாம். இல்லறத்தான் துறவறத்தான், அரசன் அமைச்சன், நண்பன் பகைவன், கள்ளுண்பான் சூதாடுவான், இரவலன் புரவலன், உழவன் வணிகன், ஆண் பெண் முதலிய அனைவருக்குமே, அறிவுரைகள் பகர்கின்ற அரிய இனிய சமுதாயப் பெரு நூலாகத் திருக்குறள் சிறந்து திகழ்கின்றது.

## திருமூலர் :

திருமூலர் ஒப்புயர்வற்ற ஒருசிறந்த யோகியும் (Mystic), ஞானியும் (Saint) ஆவார். "மிகச் சிறந்த—மிக மேலான இன்பக் களிப்பின் எல்லையில், இன்பம் நிறைந்த சிறந்த பெரு ஞானிகளின் திருவுள்ளத்தினின்று, இனிய அழகிய கவிதைகள் வெளிப்படுகின்றன."[1] "நிறைந் துயர்ந்த அனுபவத்தின் வெளிப்பாடே சிறந்த அழகிய கவிதையாக அமைகின்றது" என்பர் அறிஞர்.[2] அம்முறையில், யோக சித்தி கைவந்த ஒப்பற்ற சிவஞானப் பெருஞ்செல்வராகிய திருமூலர், தமது யோக ஞான அருள் அனுபவங்களையெல்லாம் திருமந்திரம் என்னும் கவிதை நூலாக வெளியிட்டருளினர். ஓராண்டுக்கு ஒன்றாக, அவர் தமது திருமந்திரம் மூவாயிரம் பாடல்களையும் அருளிச் செய்ததாகச் சேக்கிழார் சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

"பிறருக்குக் கூறத்தக்க பயன் நிரம்பிய செய்தி எதனையேனும் ஒருவன் உண்மையிற் பெற்றிருப்பானாயின், ஒவ்வோர் உயிரும் தனக்கெனத் தனியே ஓர் இல்லத்தை அமைத்துக் கொள்வதுபோல, அச்செய்தியைக் கூறுவதற்கு ஏற்ற முறையைக் கண்டுணர்ந்து அமைத்துக் கொள்ளுதலிலும் கூட, அவன் வல்லவனாக இருப்பான்" என்பது ஆராய்ச்சியறிஞர் கூறும் உண்மை[3]. அதற்கு இசைய, நம் திருமூலர் பெருமானும், தாம் உலகுக்கு உணர்த்துதற்குரிய கருத்துக்களை வெளியிடுவதிலும், தமக்கென ஒரு புதிய முறையையும் நடையினையும் வகுத்துக் கொண்டுள்ளார். "கலை என்பது கலையை மறைத்தலிலேயே அடங்கி இருக்கின்றது. கலைஞனின் கலைத்திறன் அக்கலையை மறைத்து வைத்தலும், ஆராய்ச்சியறிஞனின் வேலை அதனைத்தேடி மீண்டும் கண்டு பிடித்தலுமே யாகும்" என்பர் அறிஞர்[4]. அதற்கு ஏற்ப, அரிய பெரிய கருத்துக்களை அழகுற மறைத்து வைக்கும் மாட்சி மிக்க நெறிமுறையில், நம் திருமூலரும் தமக்கே யுரிய ஒருவகைப் புதுமை மிக்க புதிர் போன்ற நடையில் (Enigmatic Style), கலைத்திறம் கவினத் தம்முடைய திருமந்திர நூலை அருளிச் செய்துள்ளார்

## திருமந்திரம் :

இம்மை மறுமைக்கு உரிய மறை பொருள் நுட்பங்கள் அனைத்தையும், ஒருங்கெடுத்துத் தெளிவித்து உரைப்பதில் திருமந்திரம் போல்வதொரு சிறந்த முழு நூலை, உலகின் கண் வேறு எந்த மொழியிலும் நாம் காண்டல் அரிது. முடிவான மந்திரங்களும், அவற்றை உருவேற்றும் முறைகளும், அவற்றை அமைக்கும் சக்கரங்களும், அம்மந்திரங்களுக்குரிய மாபெருந் தெய்வங்களும், அத்தெய்வங்களுக்கெல்லாம் முழுமுதற் கடவுளான சிவ பரம்பொருளின் ஆணை வழி நின்று தம்மை வழிபடுவார்க்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் வகைகளும், தவ ஒழுக்கத்தின் பாகுபாடுகளும், அவற்றை மேற்கொண்டு ஒழுகுமாறும், அழிவிலாப் பேரின்பப் பேறும் முடிந்த நிலையும் ஆகியவற்றை, முற்ற எடுத்து முடியக் கூறும் முழுமுதல் நூல், திருமூலர் திருமந்திரமே யாதும் என்பது, உண்மை; வெறும் புகழ்ச்சி அன்று.

## திருவள்ளுவரும் திருமூலரும் :

(1) திருவள்ளுவர் உலகியலை வகுத்தருளிய பெரியார்; திருமூலர் அருளியலைத் தெளிவுறுத்திய சான்றோர்!

(2) திருவள்ளுவரின் திருக்குறள்போலவே, திருமூலரின் திருமந்திரமும் உலகுக்கு ஒரு பெரும் பொது நூலாக ஒளிவிட்டு மிளிர்வதற்குரிய மேம்பாடு மிக்கது!

(3) திருக்குறள் போலவே திருமந்திரமும், 'ஓதற்கெளியதாய் உணர்தற்கு அரியதாய்' மாட்சியுற்று இலங்குவது!

(4) திருக்குறள் இம்மை வாழ்க்கைக்கு உரியது; திருமந்திரமோ மறுமை வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

(5) திருவள்ளுவர் உலகுக்குப் பொது நூல் உதவினர்; திருமூலர் உலகுக்குச் சிறப்பு நூல் வழங்கினர். திருக்குறள் உலகர்க்கு உரியது; திருமந்திரம் 'சத்தி நிபாதர்க்கு' உரியது.

(6) திருவள்ளுவர் உலகியற் பொதுமை ஒழுக்க நெறியை உணர்த்தினர்; திருமூலர் அருளியற் சிறப்பு ஒழுக்க நெறிகளை வகுத்து விளக்கினர்.

(7) திருக்குறள் தமிழ் வேதம்; திருமந்திரம் தமிழ் ஆகமம்.

(8) திருக்குறள் இல்லறம் துறவறம் என்னும் நெறிகளை (அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை) இனிது விளக்குகின்றது; திருமந்திரமோ 'சரியை கிரியை யோகம் ஞானம்' என்னும் மெய்ப் பொருட்டிறங்களையும், இயமம் நியமம் ஆசனம் பிராணுயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் அட்டாங்க யோகப் பயிற்சி நெறிமுறைகளையும் செவ்விதின் தெளிவுற உணர்த்துகின்றது.

(9) திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில் அருளிய லுண்மைகள் பாலில் நெய்போல மறைந்து நிற்கின்றன; திருமூலர் அருளிய திருமந்திரத்திலோ தயிரில் நெய்போலத் திரண்டு சிறந்து விளங்கித் திகழ்கின்றன.

(10) "உலகியல் வாழ்வில் ஒழுக்கம் நிலைபெறக் கடவுளுணர்ச்சியும் நம்பிக்கையும் மிகமிக இன்றியமையாது வேண்டப்படும். அங்ஙனமே அருளியல் வாழ்க்கை ஆக்கம் பெறுதற்கு உலகியல் ஒழுக்கம் விழுமிய முறையில் உயிரினும் சிறப்புற ஓம்பப் பெறுதல் வேண்டும்"[5].

இவ்வுண்மையை வற்புறுத்துதற் பொருட்டே, ஒழுக்க நெறி வகுக்கப் போந்த திருவள்ளுவர் அதற்கு அடிப்படையாகக் கடவுள் வாழ்த்துக் கூறினர். கடவுளியலை விளக்கத் தலைப்பட்ட திருமூலர் ஒரு சில உலகியல் ஒழுக்கங்களையும் தமது நூலின் தொடக்கத்தே முதற்கண் வற்புறுத்த முற்படுகின்றார்.

(11) திருக்குறள் செந்தமிழ்த்தாய் தந்த நன்கொடை! திருமந்திரம் சிவநெறித் தந்தை வழங்கிய கலைப்பெரும் பொருட் களஞ்சியம்.

(12) வாழ்வின் அடிப்படையான பொதுமை முதன்மைக் கருத்துக்களை விளக்கிய திறனால் திருவள்ளுரை "இளம் பாலாசிரியர்" எனவும், வாழ்வின் முடிந்த முடிபான யோக ஞான அனுபவ உண்மைகளை வகுத்துணர்த்திய மாட்சிமையால் திருமூலரைப் "பெரும் பேராசிரியர்" எனவும், நாம் ஒருவகையில் குறிப்பிட்டு மகிழலாம்.

(13) கற்பவை கற்பிப்பது திருக்குறள் கற்பன கற்று நிற்கும் நெறி நிற்கப் பழக்கிப் பயிற்றுவிப்பது திருமந்திரம்.

(14) திருக்குறள் 'நூலார்க்கு' உரியது; திருமந்திரம் 'நூலாருள் நூல் வல்லார்க்கு' உரியது.

(15) திருவள்ளுவர்க்கும் திருமூலருக்கும் இடையேயுள்ள பலதிற இயைபு ஒப்புமையியல்புகளும், அவ்விருவரும் முறையே அருளிச் செய்துள்ள திருக்குறள் திருமந்திரம் என்னும் இருபெரும் நூல்களிலும், நிழலாடித் திகழ்தல் காணலாம்.

கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, அன்புடைமை, கல்லாமை, கல்வி, கள்ளுண்ணுமை, கொல்லாமை, நடுவுநிலைமை, புலான் மறுத்தல், பிறன்மனை நயவாமை, பொறையுடைமை, தவம், துறவு, கூடா. ஒழுக்கம், வாய்மை, நல்குரவு, அவாவறுத்தல், புறங்கூறுமை, பெரியாரைத் துணைக் கோடல் முதலிய தலைப்புக்கள், திருக்குற

ளிற்போலவே திருமந்திரத்திலும் சிறப்புற வந்துள்ளன.

திருவள்ளுவர் திருக்குறளில் 'நிலையாமை' என்னும் ஒரு தலைப்பிற் கூறிய தனையே, திருமூலர் யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை என்னும் நான்கு தலைப்புக்களாக விளக்கியருள்கின்றார். திருக்குறளின் நீத்தார் பெருமையை அடியார் பெருமை என்றும், வரைவின் மகளிர் இயல்பை மகளிர் இழிவு என்றும், திருமூலர் தமது திருமந்திரத்தின் விளக்கியதாகக் கொள்ளலாம்.

(16) திருவள்ளுவர்க்கும் திருமூலர்க்கும் இடையே உள்ள சிறந்த பல ஒப்புமைப் பண்பு நலங்களைத் திறந்தெரிந்த உணர்ந்தே, ஔவைப் பிராட்டியார்

" தேவர் குறளும் திருநான் மறைமுடிவாம்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர் "

எனத் தெளிவுற வற்புறுத்தி அருளிச் செய்துள்ளார். இவ்வினிய பாடலின்கண், ஔவைப் பெருமாட்டியார் தேவர் குறளைத் தொடக்கத்திலும். திருமூலர் சொல்லை முடிவிலும் வைத்துக் கூறியருளிய நுட்பமும், ஊன்றி நோக்கி யுணரற்பாலது.

முடிவுரை :

இதுகாறும் கூறியவாற்றால், திருவள்ளுவருக்கும் திருமூலருக்கும் இடையே உள்ள பல பண்பொப்புமை நலங்கள் பற்றி யாவரும் இனிதுணரலாம். தமிழகத்தின் தலைசிறந்த சான்றோர்கள் பலருள், மிகப் பெருஞ் சிறப்புக்குரிய இவ்விருவரையும், நாம பெரிதும் போற்றி வழிபட்டு மகிழ்வதுடன், இவ்விருவரும் முறையே இயற்றியருளி யுள்ள திருக்குறள் திருமந்திரம் என்னும் சிறந்த செந்தமிழ்ப் பெருநூல்களையும் நன்கினிது பயின்று, நலம்பலவும் எய்த முயலுவோமாக !

[திருவாவடுதுறை ஆதீனத்தில் நடைபெற்ற "திருமந்திர மாநாட்டில்" (15), நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது.

(29-1-68). —ஆசிரியர்]

---

(1) "Poetry is the expression of the best and happiest moment of the happiest and best minds"—P. B. Shelley, A Defence of Poetry

(2) " Poetry is the translation of experience into language." —Prof. L. Abercrombie,

*The Idea of Great Poetry, p. 23.*

(3) " A man who has something really profound to say will seldom fail to find a way in which to say it...Every spirit builds its own house. —W. H. Hudson,

*An Introduction to the Study of Literature, p. 28*

(4) " The art of the artist is to hide the art, and the business of the critic is to find it again." —W. H. Hudson, P. 62

(5) " Without religious root there can be no real sincere morality, just as without roots there can be no real flowers."

—Count Leo Tolstoy,

*Essays and Letters, p. 154*

# திருப்பாவைச் செழும்பொருள்

(முற்றொடர்ச்சி)

நாயகனாய் நின்ற
நந்தகோப னுடைய
கோயில் காப்பானே !
கொடித் தோன்றுந் தோரண
வாசல் காப்பானே !
மணிக்கதவம் தாள்திறவாய் !
ஆயர் சிறுமியரோ
முக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன்
நென்னலே வாய்நேர்ந்தான் !
தூயோமாய் வந்தோம் !
துயிலெழப் பாடுவான் !
வாயால் முன்னம்முன்னம்
மாற்றாதே ! அம்மா நீ !
நேசநிலைக் கதவம்
நீக்கேலோ ரெம்பாவாய் !

### நாயகனாய் நின்ற :

'நாயகனாய்' என்கிற நாயகத்துவம், திருவாசல் காக்கும் முதலிகளுக்கு விசேஷணம் ஆகவும் ஆம்; ஸ்ரீ நந்தகோபற்கு விசேஷணம் ஆகவும் ஆம். கடகரைச் சேஷி என்று இருக்குமவர்கள் இறே.

ஆளவந்தார், எம்பெருமானை ஸ்தோத்திரம் பண்ண என்று புக்கு, ஆசார்ய ஸ்தோத்திரத்திலே இழிந்தார். கர்மஞான பக்திகள், பேற்றுக்குச் சாதனம் ஆக மாட்டா, பகவத் சம்பந்திகளை முன்னிட்டுக் கொண்டு அவனையே உபாயமாகப் பற்று மது பேற்றுக்கு உடல் என்று ஸ்வப்ர பந்தத்திலே முதலிலும் முடிவிலும் பரமாசாரியரான பெரிய முதலியாரைப் பற்றினார். பலஸித்தி ஆசாரியனாலே ஆகையாலே உபகாரகனை 'நாயகன்' என்கிறார்கள்.

ப்ரதான சேஷியைக் காட்டில் த்வார சேஷிகளே எங்களுக்கு சேஷிகள் என்கிறார்கள். பட்டர் நஞ்சீயரை நோக்கி, 'பெரிய பெருமாள் தஞ்சம் என்று இருக்கும் அவரைத் தஞ்சம் என்று இரும்' என்று அருளிச் செய்தார்.

### நந்தகோபன் :

உபய விபூதி நாயகனாகிய கிருஷ்ணனுக்கும் நாயகர் ஆகையாலே, ஸ்ரீ நந்தகோபரை 'நாயகனாய் நின்ற நந்தகோபன்' என்கிறார்கள்.

### நந்தகோபனுடைய கோயில் :

க்ருஷ்ணனுகப்பது பாரதந்த்ரியம் ஆகையாலே, ஸ்ரீ வைகுண்டத்திலிழவு தீர ஸ்ரீ நந்தகோபற்குப் பிள்ளையாய் "நந்தகோபன் மகன்" என்று அவரையிட்டுத் தன்னைச் சொல்லும்படி தான் பரதந்த்ரனாய் க்ருதார்த்தனான இடமாகையாலே, அவர் அபிமானத்திலே இவன் ஒதுங்கினான் என்னுமிடந் தோற்ற க்ருஷ்ணனுடைய கோயிலென்னாதே "நந்தகோபனுடைய கோயில்" என்கிறது.

### கோயில் காப்பானே :

தங்களுடைய மௌக்த்யத்தாலும் அவன் உகக்குமதாகையாலும் அவன் தொழிலையிட்டுச் சொல்லுகிறார்கள். ஆர் விக்னம் பண்ணுகிறார்களோ என்று பயப்பட்டு எல்லார் கால்களிலும் விழுகிறார்கள்.

### கொடித் தோன்றும் தோரணவாசல் :

தண்ணீர்ப் பந்தல்கள் தடாகங்கள் சமைத்தவர்கள், நீர்விடாயருக்குத் தூரத்திலே தோற்றவேணும் என்று, கொடியும்

தோரணமும் இட்டுக்கடையையும் கட்டுமா போலே, ஆர்த்த ரட்சணத்துக்குக் கொடி கட்டித் தோரணமும் இட்டுக் கடையையும் கட்டுமா போலே, ஆர்ந்த ரட்சணத்துக்குக் கொடி கட்டித் தோரணமும் நட்டுவைத்த வாசல்.

**வாசல் காப்பானே :**

கொடியும் தோரணமும் அசேதனம் ஆகையாலே அழைக்கமாட்டா; உள்ளே கொண்டு புகா; நீ சேதனன் ஆன வாசி நாங்கள் பெறவேண்டும், 'அர்ச்சுனன் சுபத்திரையைக் கொண்டு போகக் கடவன்' என்று அனுமதிபண்ணி இருங்கோள் என்று, வாசல் காக்கும் முதலிகளுக்கு க்ருஷ்ணன் அருளிச் செய்து வைத்ததை இங்கு நினைவு கூருகின்றார்கள்.

**மணிக்கதவம் :**

'மாமான் மகளே மணிக்கதவம்' என்று பெண்கள் மாளிகை எல்லாம் சாதர்மியம் கொடுக்கிற க்ருஷ்ணனின் மாளிகைவாசல் மணிக்கதவம் ஆகச் சொல்லவும் வேண் டுமோ ?

**தாள் திறவாய் :**

புகுவாரைத் தன் அழகாலே காற்கட்டும் கதவினுடைய தாளைத் திறவாய். திரு வாசலுக்குள் புகுவாரைக் காற்கட்டும் இது; அவன் புக்காரைப் புறப்படாதபடி காற்கட்டும் தன் அழகாலே.

**ஆயர் சிறுமியரோம் :**

இவனுக்கு என் வருகிறதோ என்று வயிறு துடிக்கும் இடையர்க்குப் பிறந்த, வஞ்சகம் அறியாத இளம் பெண்கள்; எட்டும் இரண்டும் அறியாத இளம் வரு வத்தினர். பூதனையைப்போல் தனித்து வராமல் அஞ்சு லட்சம் குடியில் பெண்கள் எல்லோரும் கூடியன்றோ வந்தோம் என் கிறார்கள்.

**அறை பறை :**

நோன்புக்குப் பறைவேண்டி வந்தோம்.

**மாயன் :**

பெண்கள் கோஷ்டியில் தாழ நின்று கையைக் காலைப் பிடித்துப் பரிமாறுபவன்; பெண்களுக்கு இஷ்ட விநியோகார்ஹன் ஆனவன்.

**மணி வண்ணன் :**

தாழநில்லாதே அபௌவ்யனாய்க் காது கன் ஆனாலும், விடவொண்ணாத வடி வழகை உடையவன்.

**நென்னலே :**

நிவாரகர் இன்றிக்கே கிட்டி அனுமதி கொள்ளப்பெற்ற நேற்றை முன்னாளி லேயே.

**வாய் நேர்ந்தான் :**

ஓலக்கத்திலே ஒருவார்த்தை அருளிச் செய்தான். எங்களுக்கு ஸர்வஸ்வதானம் பண்ணினான். சொல்லாதொழிந்தவன் செய்யலாவதில்லை. இத்தனை சொன்ன பின்பு அவன் வார்த்தையிற் பழுதுண்டோ? செய்ய நினைத்திலனாகிற் சொல்லான், சொன்னானாகில் தப்பாது.

**தூயோமாய் வந்தோம் :**

அவனுடைய ரட்சையும் ப்ரயோஜனமும் ஒழிய ஸ்வயத்தனமாதல், ஸ்வப்ரயோஜன மாதல் கருதி வந்தோம் அல்லோம்; உபா யாந்தரங்களைக் கொண்டு பெறுவார்களும் அல்லோம், ப்ரயோஜனாந்தரம் கொண்டு அகல்வாரும் அல்லோம்.

தூய்மையாவது தான் சிலவற்றை ஏறிட் டுக் கொள்ளாதே நம்முடைய ரட்சை அவனாலே என்றிருக்கை. இராவண பவ னத்தை விட்டுப் போந்த விபீஷணன் வழி யிலே முழுகி வந்தான் என்றில்லையே; தூசி ஏறின படை நடுவே நின்றிறே அர்ச்சுனன் பரம ரகசியம் கேட்டது.

**வந்தோம் :**

எங்கள் ஒத்த ஆர்த்தி உடையார் இருந்த இடத்திலே, அவன் சென்று காரி யம் செய்ய வேண்டியிருக்க, நாங்களல் லவோ வந்துகொடு நின்றோம்.

**துயிலெழப் பாடுவான் :**

அவன் உணர்ந்தருளும் போதை அழகுக்கும் மங்களாசாஸனம் பண்ண அன்றோ நாங்கள் வந்தது. ப்ரயோஜநாந்தர பரரிறே ஓலக்கத்தில் புகுவார், அநந்ய ப்ரயோஜநர் இறே கண்வளர்ந்தருளுகிற இடத்தில் புகுரப் பெறுவார்.

பிராட்டி பெருமாள் உறங்குகிறபடி கண்டு உகந்தாள்; இவர்கள் உணரும்படி காண ஆசைப்படுகிறார்கள்.

"உறகல் உறகல்" என்று உணர்ந்திருப்பாரையும் உணர்த்தி அசிர்க்கும் பெரியாழ்வார் பெண் பிள்ளைகள்; உன்னையும் அசிர்ப்போம் சிலர். "மதியாது இன்றே நீ துயில் மேவி மகிழ்ந்ததுதான்" என்றும், "அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே" என்றும் எழும்புமவர்களோட்டை வாசனையாலே, இப்பள்ளி யுணர்த்த வந்தோம்.

**வாயால் முன்னம் மாற்றாதே :**

நெஞ்சாலே சில நினைத்தாயாகிலும், வாயாலே நெருப்பைச் சொரிந்தாற்போலே நிஷேதியாது ஒழியவேணும்; இவர்களுக்கு இவன் வாயதிறே வாணாள்.

**அம்மா :**

ப்ரதாந சேஷிகளை நாங்கள் அறிந்தோமா, த்வார சேஷிகள் அன்றோ எங்களுக்குக் கடவர்கள்; அவன் வாய் நேர்ந்தாலும் கார்யம் தலைக்கட்டித் தருவாய் நீயன்றோ ? நீ புகவிட்டால் அன்றோ, உகப்பது ! 'அம்மா' என்று பச்சை யிடுகிறார்கள்.

**நேச நிலைக் கதவம் நீக்கு :**

அது உன்னிலும் பரிவுடைத்தான கதவு, எங்களால் தள்ளப்போகாது, நீயே திறக்கவேணும் என்கிறார்கள். கம்ஸன் படை வீட்டில் எல்லாம் ப்ரதிகூலமாய் இருக்குமாபோலே, திருவாய்ப்பாடியில் சேதநா சேதந விபாகம் அன்றியிலே எல்லாம் அநுகூலமாய் ஆயிற்றிருப்பது. 'நிலையும் கதவும் பொருந்தின பொருத்தம்' எனினும் ஆம் (16)

அம்பரமே தண்ணீரே
சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்த
கோபாலா! எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாங்
கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி!
யசோதாய் அறிவுறாய்!
அம்பரம் ஊடறுத்து
ஓங்கி உலகளந்த
உம்பர் கோமானே!
உறங்கா தெழுந்திராய்!
செம்பொற் கழலடிச்
செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும்
உறங்கேலோ ரெம்பாவாய்!

**அம்பரமே தண்ணீரே சோறே :**

அர்த்தித்தவர்களுக்கு ரூப சாதனமான வஸ்திரம், தாரகமானதண்ணீர், போஷகமானசோறு, வேண்டுவார்க்கு வேண்டுவதெல்லாம் கொடுக்கிற உமக்கு.

"அம்பரமே" என்கிற அவதாரணத்தாலே ஓரொன்றேயோ இவர் கொடுக்கத் தக்கது என்னும்படி யிருக்கையும், அது தான் நிரம்பக்கொடுக்கையும்! ஏவகாரத்தாலே இதுவோ இவன் கற்றது என்னும்படி கொடுக்கை.

**அறஞ் செய்யும் :**

புகழுக்காகக் கொடுக்கை யன்றிக்கே, கைம்மாறு கருதாமற் கொடுக்கையும், தன்பேறாகக் கருதியுவந்து இரக்கத்தினாற் கொடுக்கையும்.

**எம்பெருமான் :**

எங்களுக்குக் கிருஷ்ணனைப் பெற்றுத் தந்த பெருமை உடையவனே!

**நந்தகோபாலா :**

'நந்தகோபன் குமரன்' என்று உம்முடைய கருணை மிகுதியைக் கொண்டு உம்முடைய பிள்ளை என்றன்றோ நாங்கள் ஆசைப்பட்டது.

பெருமாள்பிராட்டியை உவப்பது உத்தம குலமுடைமையாலும் அழகாலும் குணத்தாலும் அல்ல, ஐயர் விவாகம் பண்ணுவித்தவள் என்று.

**எழுந்திராய் :**

உதாரர்க்கும் உறங்க விரகுண்டோ.

**கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே :**

வஞ்சிக் கொம்புபோல உள்ள பெண்களுக்கெல்லாம் தலையானவளே; பெண்களுக்கெல்லாம் ஒரு குறைவரில் உன் முகம் அன்றோ வாடுவது.

**குலவிளக்கே :**

விளக்கானது பிற பொருள்களையும் காட்டித் தன்னையும் காட்டுமாறு போல, எங்களுக்கும் உன்னுடைய குலத்துக்கும் மங்கள விளக்காகஅமைந்து ஒளியைப் பரப்புபவளே!

**எம்பெருமாட்டி :**

கிருஷ்ணனைப் பெற்றுத் தந்து எங்களுக்கு ஸ்வாமிநியானவளே. பிரதான மகிஷிகளும் கும்பிடும்படி யன்றோ உன்னுடைய ஏற்றம் இருப்பது.

**யசோதாய் :**

ஸ்ரீ நந்தகோபரைப் போல அன்றியே ஸஜாதீயை யாகையாலே எங்கள் நோய் அறியுமவளே.

**அறிவுறாய் :**

நீ அறிந்தால் எங்களுக்கு ஒருகுறை யுண்டோ என்கை. ஸ்ரீநந்தகோபரை 'எழுந்திராய்' என்றும், இவளை 'அறிவுறாய்' என்றும் சொல்லுகையாலே, இவள் நெஞ்சிலே உணர்ச்சி யுண்டானால் நமக்குக் கிருஷ்ணனைப் பெறல் எளிது என்று குவாலாக விண்ணப்பிக்கிறார்கள்.

**அம்பரம் ஊடு அறுத்து :**

திருக்கையிலே நீர்விழுந்தவாறே ஆகாச அவகாசம் அடைய விம்ம வளர்ந்து,

**உலகு அளந்த :**

உறங்குகின்ற குழந்தையைத் தழுவிக் கொண்டுகிடக்கும் தாயைப் போலே, இருந்ததே குடியாக எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்தபடி.

**உம்பர்கோமானே :**

இச் செயலாலே தேவசாதியை எழுதிக் கொண்டவனே! நிருபாதிக ராட்சகனுகை யாலே, ரட்சகத்வமே விளைநீராக வளர்ந்தபடி.

**உறங்காது எழுந்திராய் :**

ரட்சகராய் இருப்பவர்க்கு உறங்கவிரகு உண்டோ? இங்கு இருக்கவும் அளக்கவும் வேண்டா, அவ்வடிவை அநுபவிப்பிக்க அமையும், உலகளந்த இளைப்பாலே உறங்குகிறாய் என்கிற எங்கள் வயிற்றெரிச்சலைத் தீர்க்க அமையும்.

**செம்பொற்கழல் அடிச் செல்வா பலதேவா :**

பிள்ளை பிறக்கைக்குப் பொற்கால் பொலியப் பிறந்த சீமானே.

**உம்பியும் நீயும் உறங்கேல் :**

உனக்குப் பவ்யனான தம்பியும், அவனுக்குப் பவ்யனான நீயும் உறங்காது ஒழிய வேணும். எங்களையும் அவனையும் பொருந்த விடுமவள் அல்லையோ நீ!

உந்து மதகளிற்றன்
  ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன்
  மருமகளே! நப்பின்னாய்!
கந்தங் கமழுங்
  குழலீ! கடை திறவாய்!
வந்தெங்குங் கோழி
  அழைத்தன காண்! மாதவிப்
பந்தர்மேல் பல்கால்
  குயிலினங்கள் கூவினகாண்!
பந்தார்விரலி! உன்
  மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால்
  சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய்!
  மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்!

**உந்து மத களிற்றன் :**

மதத்தை உந்தாநின்றுள்ள களிறுகளை யுடையவன். மத்தகஜம் போலே இருக்கும் பலத்தை யுடையவன்; ஆனைகளோடே பெரும்படியான மிடுக்கை யுடையவன்.

**ஓடாத தோள்வலியன் :**

எதிரிகளைக் கண்டால் பிற்காலியாத தோள்வலியை உடையவன்; நாட்டில் நடையாடாத தோள்வலியன் என்னவுமாம்.

இப்போது இவருடைய மிடுக்குச் சொல்லிற்று, தங்களுக்குத் தரமான இம்மிதுநத்துக்குக் காவல் உண்டென்று தங்கள் பயம் நீங்குகைக்காக.

**நந்தகோபாலன் :**

ஐச்வர்யத்தாலும் தோள்வலியினாலும் உண்டான மேம்பாடு மிக்கவனாயினும் 'நந்தகோபாலா எழுந்திராய்' என்று பெண்களோடு ஒக்க எழுப்பலாம்படி, தாழ்ந்தாருடைய ரட்சணத்திலே மிகவும் ஈடுபட்டுத் தன்னை அமைத்துக்கொண்ட நீர்மையுடையவன்.

**மருமகளே :**

முக்தனுக்கு உலகியல் வாழ்வுபோலே, இவளுக்குப் பிறந்தகம். 'ஸ்ரீகும்பர்மகளே' என்றால் அறியாள்; ஸ்ரீநந்தகோபர் ஸம்பந்தமே யாய்த்து அறிந்திருப்பது. புருஷகாரம் ஆவார்க்குக் கிருபைவேணுமிறே, மனிச்சர் நோவறிந்து கார்யஞ் செய்யுமிடத்தில், 'அறஞ்செய்யும் நந்தகோபருக்கு மருமகள்' என்னலாயிருக்கும்.

**நப்பின்னாய் :**

தங்களுடைய கிலேசம் தீர்க்கைக்காகவும், தங்களுடைய ஆர்த்தி இவளுடைய நெஞ்சிலே படுத்துகைக்காகவும், 'நப்பின்னாய்' என்று பேரைச் சொல்லுகிறார்கள்' 'ஹே கிருஷ்ணா' என்று அருச்சுனன் கிருஷ்ணனை அஸத்கரித்து வார்த்தை சொல்லுமாறு போலே, 'நப்பின்னாய்' என்று சிவட்கென்கிறார்கள்.

எம்பெருமானைப் பற்றுகைக்குப் பிராட்டி புருஷகாரம் ஆகவேணும். இவள் திருவடிகளைப் பற்றுவார்க்கு அவன் தன்னுடைய நிர்ஹேதுக கிருபையே அமையும். நெருப்பை ஆற்றுகைக்கு நீர் வேணும். நீரை ஆற்றுகைக்கு நீர்தானே அமையும்.

அவள் புருஷகாரமாக, அவனைப் பற்றுவதே பலவ்யாப்தமாவது. இதுதான் காகவிபீஷணாதிகள் பக்கலிலே காணலாம். காகம் அபராதத்தினுடைய எல்லையிலே நின்று வைத்து, பிராட்டி ஸந்நிதி யுண்டாகையாலே ப்ரபந்நர் பெறும் பேற்றைப் பெற்றது. பிராட்டியை அநாதரித்து இராமனைப் பற்றிய சூர்ப்பணகை அநர்த்தப் பட்டாள்இறே. பெருமானை ஒழியப் பிராட்டியை முறைதப்பிப் பற்றின இராவணன் அநர்த்தப் பட்டான். இருவரையும் சேரப் பற்றின விபீஷணன் அல்லல் தீர்ந்து வாழ்ந்துபோனான்.

"மாசதிர் இது பெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றனவா" என்றார் இறே ஆழ்வார். தன்னுடைய கர்மஞானாதி உபாயங்களாலே எம்பெருமானைப் பெற இருக்குமது இளிம்பு. அவற்றை விட்டு எம்பெருமானுடைய கிருபையாலே பெறுகை சதிர்; அந்தக் கிருபைக்கு அடியான பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு பெறுகை மாசதிர்.

பரத்வநிலையில் நாச்சிமார் மூவரையும், வியூகநிலையில் நாச்சிமார் இருவரையும் முன்னிடக்கடவது; இராமாவதாரத்தில் பெரிய பிராட்டியார் ஒருவரையும்,ஸ்ரீவராகாவதாரத்தில் பூமிப் பிராட்டியாரையும் முன்னிடுவர். கிருஷ்ணாவதாரத்துக்குப் பிரதான மகிஷி யாகையாலே, நப்பின்னைப் பிராட்டியை இவர்கள் முன்னிடுகிறார்கள்.

**கந்தம் கமழும் குழலீ :**

நீ இல்லையாகில் உள்ளே இப்படி யாமோ? நீ பதில் வார்த்தை பகராதொழி யினும், உன் கூந்தலில் வாசனை எம்மை மகிழ்விக்கின்றது காண். பரிமளம்தான் நிறம்பெறுவது இவள் குழலிலே சேர்ந்த பின்பு.

**கோழி அழைத்தனகாண் :**

தொடைதட்டி ஒழுப்புவாரைப் போல எல்லா இடங்களிலும் கோழி கூவா நின்றது.

**மாதவிப் பந்தர் மேல், பல்காற் குயிலினங் கள் கூவினகாண் :**

மாதவி மலர்ப் பந்தர் ஆகிய படுக்கை யினின்றும் துயில் எழுந்து குயில்கள் கூவின. ஒருகால் அன்றிப் பலகால் கூவின. ஓரொரு குயிலாக அன்றித் திரள் திரளாகச் சேர்ந்து கூவின. இதுதான் போது விடிவுக்கு அறிகுறியன்றோ?

**பந்தார் விரலி :**

கிருஷ்ணனோடே பந்தடித்து, அவனைத் தோற்பித்து, அவனை ஒருகையாலும் பந்தை ஒருகையாலும் அணைத்துக் கிடப் பவளே.

இவளுக்குப் போகோபகரணம் கிருஷ்ணன்; லீலோபகரணம் பந்து. ஒரு கையில் நாரம், மற்றொரு கையில் நாரா யணன். ஒரு கையில் விபூதி, மற்றொரு கையில் விபூதி மான். இங்ஙனம் உபய ஸம்பந்தத்தால் வந்த புருஷகாரபலம் தோன்ற இருப்பவளே என்றபடி.

**உன் மைத்துனன் பேர்பாட :**

தமக்கு ஒரு பேறு கருதியன்றி, அவனு டைய நலனையே தாம் விரும்பி நிற்பதாகக் குறிப்பிடுகின்றனர். ஆதலின் 'உன் மைத்துனன்' என்று உரிமை ஏறிட்டுச் சொல்கின்றனர். 'அவர் மாட்டு இசையும் இனிய செவிக்கு' என்னக் கடவதிறே.

**செந்தாமரைக் கையால், சீரார் வளை ஒலிப்ப :**

கிருஷ்ணனும் ஆசைப்படும் கை; மங் கல முடைமைக்கு அறிகுறியாக வளையல் அணிந்தகை. காரியம் நிறைவேறுகைக் காகப் புகழ்ந்துரைக்கின்றார்கள் எனினு மாம். கலியர் சோற்றை வர்ணிக்குமா போலே, வளையைக் கொண்டாடுகிறார்கள். வளைக்குச் சீர்மையாவது, கையில் நின்றும் கழலாதொழிகை. 'சீரார்வளை' பிரிவாற்ரு மைத் துன்பம் அறியாத வளை எனினுமாம்.

**வந்து, மகிழ்ந்து, திறவாய் :**

இயந்திரத்தினாலே திறக்க ஒண்ணாது, உன்னுடைய நடையழகு காணும்படி வந்து திற, தர்மத்துக்குத் திறக்கை யன்றிக்கே, பேறும் உன்னதாகக் கொண்டு திற. கிருஷ்ணனின் சேர்க்கையாலே வந்த மகிழ்ச்சிப் பெருக்கு முகத்திலே தோற்றும்படி வந்து திற என்கிறார்கள்.

இது "ஸ்ரீ ராமாநுஜர் உகந்த திருப் பாட்டு" என்பர் பெரியோர். "திருப்பாவை ஜீயர்" என்பது ஸ்ரீராமாநுஜருக்கு ஒரு சிறப்புப் பெயர். (18)

(தொடரும்)

—ஆசிரியர்.

# மகாபாரதம்

அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

**முன்னுரை :**

மகாபாரதம் இதிகாசம் மூன்றனுள் ஒன்று. எல்லா அறங்களும் மகாபாரதத்துள் அடங்கும். யானையடியில் எல்லா அடிகளும் அடங்குவதுபோல் என அறிக.

இது வியாச முனிவர் வட மொழியில் பாட, விநாயகப் பெருமானால் மேரு மலையில் எழுதப்பெற்றது. மிகப் புனிதமானது. ஐந்தாம் வேதம் என்றும், ஜயம் என்றும் சொல்லப்பெறும். இதனைக் கற்போர் எல்லா வகை நலன்களும் எளிதில் பெறுவர். எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர்.

இவ்வரலாறு துவாபர கலியுக சந்தியில் நடந்தது. "அர்ச்சுனர்க்குப் பாசுபதங் கொடுத்தானை" என்று அப்பர் பெருமான் தேவாரத்திலே கூறியுள்ளார். பல இடங்களிலும் தேவாரத்தில் பாரத வரலாறு பயிலப் பெறுகின்றது. ஆதலால் உண்மையும் நீதியும் பொருந்திய இப்புண்ணிய சரிதையை வானோரும் போற்றுகின்றனர்.

> "பாரதத்தை மேரு வெளீ வெளீதிகழ்
> கோடொடித்த நாளில் வரைஇ வரைஇபவர்
> பால்நிறக் கணேசர் குவாகு வாகனர்—
> இளையோனே"
>
> —அருணகிரிநாதர்.

**சூதர் :**

சூதர் என்பவர் சிறந்த சொல்வன்மையுள்ளவர். ரோமஹர்ஷணர் என்பவருடைய புதல்வர். புராணப் பிரசங்கத்தால் கேட்பவர்கட்கு மயிர் சிலிர்க்கச் செய்பவர். அதனால் ரோமஹர்ஷணர் எனப்பட்டார்.

சூத புராணிகர் நைமிசாரணியம் சென்றார். அங்கு சௌனகர் என்ற முனிவர் பன்னீராயிரம் முனிவர்களுடன் பன்னிரண்டு ஆண்டுகள் செய்யத்தக்க சத்திர யாகம் புரிந்து கொண்டிருந்தார்.

சௌனகாதி முனிவர்கள் சூதபுராணிகரை அன்புடன் வரவேற்று நன்கு உபசரித்தார்கள். அவரை மகாபாரதத்தைக் கூறுமாறு விரும்பிக் கேட்டார்கள்.

முனிவர்களே! வியாசபகவான் அருளிய இம் மகாபாரதத்தை விரிவாகக் கூறுவேன். ஒருமுகமாக இருந்து கேளுங்கள் என்றார்.

**பாரதத்தின் பெருமை :**

பெருந்தவ முனிவராகிய வியாச முனிவர் இமய மலையில் ஒரு குகையில் சிந்தையை யடக்கித் தவ நிலையில் நின்றார். அத்தவக் காட்சியில் மகாபாரத நிகழ்ச்சியை யுணர்ந்தார். அதனைக் காவியமாகப் பாடவேண்டும் என்று எண்ணினார்.

அப்போது பிரமதேவர் அவர் முன் தோன்றி, அவருக்கு அருள் புரிந்தார். "மைந்தனே! உன்னால் செய்யப்போகும் இம் மகாபாரதம் உலகுக்கு உய்வுதரும். இதன் ஒளி அறியாமையாகிய இருளை யகற்றும்.

பாரதம் என்பது ஒரு மரம். அதற்கு அனுக்கிரமணிகாபர்வம் சிகை. பௌலோமம் ஆஸ்தீகம் என்ற பர்வங்கள் வேர்கள்; சம்பவபர்வம் அடிமரம்; சபாபர்வம் பறவைகள் தங்குமிடம்; அரணிய பர்வம் மரத்தின் சிறு கிளை; விராடபர்வமும் உத்யோக

பர்வமும் சாரம்; பீஷ்ம பர்வம் பெருங்கிளை; துரோண பர்வம் இலைகள்; கர்ணபர்வம் வெண்மலர்; சல்லிய பர்வம் அதன் மணம்; ஸ்த்ரீ பர்வமும் ஐஷீக பர்வமும் நுனி, சாந்தி பர்வம் பெரும் பழம்; அசுவமேத பர்வம் அமுதத்துக்கு ஒப்பான பழரசம்; ஆச்ரமவாச பர்வம் பறவைகளுக்கு ஆதார மான இடம்; மௌஸல பர்வம் பறவை களின் ஒலி; நற்குண சீலர்கள் இம்மரம் காத்த பறவைகள்; மக்களுக்கு மேகம் ஆதாரமாக இருப்பதுபோல் புலவர்கட்கு இம்மகாபாரதம் உதவியாக இருக்கும்.

ஆதலால் வியாச! இம்மகாபாரதத்தைப் பாடி ஞானக் கொழுந்தாகிய விநாயகரை எழுதச் செய் என்று கூறி மறைந்தார்.

**விநாயகர் எழுதுதல் :**

வியாசமுனிவர் விநாயகப் பெருமானை வேண்டித் துதி செய்தார். ஐங்கரமும் ஆனை முகமும் உடைய கணபதி அவருக்குக் காட்சியளித்தார்.

வியாசர் அப்பெருமானைப் பன்முறை வணங்கி, "ஐயனே! அடியேன் உலக நன்மைக்காக மகாபாரதத்தைப் பாடுகின் றேன். நீர் மேரு மலையில் அதனை எழுத வேண்டும்" என்றார்.

விநாயகர் "என் எழுதுகோல் ஒரு கணப் பொழுதாயினும் நில்லாவண்ணம் பாடுவா யானால் யான் எழுதுதற்கு இசைகின்றேன்" என்றருளினார்.

வியாசர் "பெருமானே! அப்படியே தங் கள் எழுதுகோல் தாமதிக்காதவண்ணம் பாடுவேன். பொருள் தெரிந்தே நீர் எழுத வேண்டும்" என்றார்.

விநாயகர் அதற்கு இசைந்து எழுதத் தொடங்கினார். வியாசர் விநாயகருடைய எழுத்தாணியைத் தாமதிக்கச் செய்யும் பொருட்டுச் சிந்தித்தாலன்றிப் பொருள் விளங்காத கடின பதங்களை யமைத்து ஒரு சுலோகம் பாடுவார். இதற்கு என்ன பொருள் என்று விநாயகர் சற்றே சிந்திப் பதற்குள் பல்லாயிரம் சுலோகங்களை மன தில் பாடிக்கொள்வார். இப்படி விநாயக ருடைய எழுத்தாணியைத் தாமதிக்கச் செய்ய இடையிடையே கடினமான முடிச் சாக எண்ணாயிரத் தெண்ணூறு சுலோகங் களைப்பாடினார். "இந்த எண்ணாயிரத்தெண் ணூறு சுலோகங்கட்குப் பொருள் எனக் குத் தெரியும்; சுகருக்குத் தெரியும்; சஞ்சய னுக்குத் தெரியுமோ தெரியாதோ" என்று வியாசர் கூறியுள்ளார்.

அறுபது லட்சம் கிரந்தங்கள் பாடினார். இதில் முப்பது லட்சம் கிரந்தங்கள் தேவ லோகத்தில் நின்றன; பதினைந்து லட்சம் பிதிர் லோகத்திலும், பதினான்கு லட்சம் கிரந்தங்கள் அசுரர் யட்சர்கள் உலகத் திலும் நின்றன; ஒரு லட்சம் கிரந்தங்கள் மனித வுலகத்திற்கு வந்தன.

பாரதத்தை நாரதர் தேவர்களுக்குச் சொன்னார். அஸிதரும் தேவலரும் பிதிர் களுக்குச் சொன்னார்கள். சுகர் கந்தர்வர் களுக்கும் அசுரர்கட்கும் சொன்னார். வியாச ருடைய சீடரும் தருமத்தை நன்கு அறிந் தவரும் ஆகிய வைசம்பாயனர் இந்த மனித வுலகில் கூறினார்.

**கோப மரம் :**

துரியோதனன் கோபமே உருக்கொண்ட ஒரு பெரிய மரம். இதற்குக் கர்ணன் அடி மரம்; சகுனி கவடு; துச்சாசனன் நிறைந்த மலரும் கனியும்; மன வடக்கமில்லாத திருத ராட்டிரன் வேர்.

**தரும மரம் :**

யுதிட்டிரர் தருமமே உருக்கொண்ட ஒரு பெரிய மரம்; இதற்கு அர்ச்சுனன் அடி மரம்; பீமன் கிளைகள்; நகுல சகாதேவர்கள் மலரும் கனியும்; கண்ணபிரானும் வேதமும் வேதியரும் வேர்கள்.

**சமந்த பஞ்சகம் :**

திரேதாயுகமும், துவாபர யுகமும் சந் தித்தபோது பரசுராமர் க்ஷத்திரியர்களைப் பல முறை வதைத்து ஐந்து உதிர மடுக்களை உண்டாக்கினார். அதற்குச் சமந்தபஞ்சகம் என்று பெயர். உதிரத்தி னாலேயே பிதிர்களுக்கு அவர் தர்ப்பணஞ் செய்தார். ரிசீகர் முதலிய பிதிர்கள் அவ

ருக்கு முன் தோன்றி, "ராமா! உன்னுடைய பிதிர் பக்திக்கு நாங்கள் மகிழ்ச்சியுற்ரேம்; உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்ருர்கள்.

பரசுராமர் "நான் சினத்தால் மூடப்பட்டுப் பல முறை மன்னர்களே அழித்தேன். அந்தப் பாவம் எனக்குச் சேராமல் இருக்கவும், இம்மடுவில் முழுகினேர் பாவத்திலிருந்து விடுபடவும் வரங் கொடுங்கள்" என்ருர். அவர்கள் "அவ்வண்ணமே யாகுக; நீ இனி சாந்தத்தை அடை" என்ருர்கள். முனிவர்களே! அந்த சமந்த பஞ்சகத்தின் கரையில்தான் துவாபரயுகமும் கலியுகமும் சந்தித்தபோது கௌரவ பாண்டவ யுத்தம் நடைபெற்றது. அங்கு 18 அக்ரோணி சேனைகள் 18 நாட்களில் மாண்டன.

**அக்ரோணி :**

தேர் 1, யானே 1, குதிரை 3, காலாள் 5, இவைகள் சேர்ந்தது ஒரு பத்தி. பத்தி மூன்று கொண்டது ஸேனுமுகம். ஸேனுமுகம் மூன்று கொண்டது குல்மம்; குல்மம் மூன்று கொண்டது கணம். கணம் மூன்று கொண்டது வாகினி. வாகினி மூன்று கொண்டது பிருதனே. பிருதனே மூன்று கொண்டது சமு. சமு மூன்று கொண்டது அனீகினி. அனீகினி பத்து கொண்டது அக்ரோணி.

ஒரு அக்ரோணியின் எண்ணிக்கை 2,18,700 (இரண்டு லட்சத்துப் பதினெண்ணுயிரத்து எழு நூறு), பதினெட்டு அக்ரோணியின் எண்ணிக்கை 39,36,600 (முப்பத்தொன்பது லட்சத்து முப்பத்தாருயிரத்து ஆறு நூறு), அந்தப் பதினெட்டு அக்ரோணிகளும் 18 நாட்களில் அழிந்தன. இதில் பத்துப் பேர்தான் தப்பிப் பிழைத்து உய்ந்தார்கள்.

பாண்டவர்கள் 5: கண்ணன், சாத்தகி; ஆக 7.

அசுவத்தாமா, கிருபாச்சாரி, கிருதவர்மா; ஆக 3.

காலத்தால் தூண்டப்பட்டு இந்தப் பெரும் போர் நடந்தது. மன்னர் மரபு அழிந்தது.

பரதவம்சத்தாருடைய வரலாறு. ஆதலால் பாரதம் எனப் பேர் பெற்றது. அன்றியும் நான்கு வேதங்களே ஒரு தட்டிலும், பாரதத்தை ஒரு தட்டிலும் வைத்துத் துலாக்கோலில் நிறுத்தார்கள். பாரதம் அதிகபாரமாக இருந்தது. அதனுலும் பாரதம் எனப்பட்டது. இதனைப் படிக்கின்றவர்கள் கேட்கின்றவர்கள் பாவங்களிலிருந்து விடு பட்டு நற்கதியடைவார்கள்.

## ஜனமே ஜயன் சர்ப்பயாகம்.

**ஜனமேஜயர் :**

குரு நாட்டின் தலைநகரமாகிய அத்தின புரத்தில் அரியணையில் அமர்ந்து, பரிட்சித்து மன்னருடைய திருமைந்தர் ஜனமேஜயர் அரசு புரிந்தார். அவர் அறநெறி வழுவாதவர்.

> அந்தமாநகர் புரப்பவன் அரசருக்கரசன்
> சந்திரன் வழித்தோன்றல் செந்தாமரை முகத்தோன்
> வந்த மாற்றலர் நிணங்கமழ் கதிர்வடி வேலோன்
> விந்தை தங்கிய அலங்கல்தாழ் விலங்கலம் புயத்தோன்
> கற்றவர்க்கெலாம்காரெனநிதிசொரிகரத்தான்
> உற்றவர்க்கெலாம் உடற்புனே கவசமா வுறுவான்
> அற்றவர்க் கெலாம் அரிய நல்வினே யெனலாவான்
> நற்றவப் பரிச்சித்து முன்னளித்த நற்புதல்வன்

சந்திரகுலத்தில் வந்த இவருடைய மனைவி வபுட்டாதேவி; ஜனமேஜயருடைய தம்பியர் சுருதசேனன், உக்கிரசேனன், பீமசேனன் என்ற மூவர். இவர் ஒரு சமயம் நெடுநாள் புரியக்கூடிய சத்திர யாகத்தைச் செய்து கொண்டிருந்தார்.

**சரமை :**

சரமை என்ற தேவலோகத்து நாயின் மைந்தன் சாரமேயன் என்ற பேருள்ள நாய்க்குட்டி, யாகசாலைக்குள் நுழைந்தது. ஜனமேஜயருடைய தம்பியர் அதனை அடித்து விரட்டினுர்கள். அது அழுது கொண்டு தாயிடஞ் சென்றது. தாய் "ஏன் அழுகின்ருய்?" என்று கேட்டது.

"ஜனமேஜயருடைய தம்பியர் என்னை அடித்தார்கள்" என்று கூறியது. "நீ என்ன பிழை செய்தாய்?" என்று தாய் கேட்டது. "அம்மா! நான் சிறிதும் பிழை செய்யவில்லை. ஓமப் பொருள்களைப் பார்க்கவுமில்லை. நாவினுல் தீண்டவுமில்லை." என்றது. சரமை மனம் இரங்கி ஜனமேஜயர் தீர்க்க சத்திரம் புரிந்துகொண்டிருந்த இடத்திற்கு வந்து, கோபத்துடன் ஜனமேஜயரைப் பார்த்து "இந்த என் பிள்ளை ஒரு சிறிதும் பிழை செய்யவில்லை; அவிசுகளைப் பார்க்கவுமில்லை, நாவினுல் தீண்டவுமில்லை. எதற்காக இதனை அடித்தீர்கள்?" என்று வினுவியது. ஜனமேஜயர் தம்பியர் செய்த பிழைக்காக வருந்திச் சும்மா இருந்தார். "குற்றஞ் செய்யாத என் குழந்தையை அடித்த பாவத்தினுல் உங்களுக்குத் தெரியாமலேயே ஒரு ஆபத்து வரும்" என்று கூறிச் சரமை மறைந்தது.

ஜனமேஜயர் மிகவும் வருந்தினுர், "இந்தப் பாவத்தைப் போக்கவல்லவர் யார்?" என்று தேடினுர். வேட்டையாடச் சென்ருர். கானகத்தில் ஒரு ஆச்ரமத்தில் சுருதசிரவசு என்பவர் இருந்தார். அவருடைய புதல்வர் சோமசிரவசு, மிக்க தவசீலர். ஜனமேஜயர் சுருதசிரவசுவை வணங்கித் "தங்கள் புதல்வரை எனக்குப் புரோகிதராகக் கொடும்" என்று வேண்டினுர்.

சுருதசிரவசு, "ஜனமேஜயரே! என் மகன் சிறந்த தவமுள்ளவன். வேதம் முழுவதும் ஓதினவன். பெண் நாகத்தினிடம் பிறந்தவன். சிவபெருமானுல் ஏவப்பட்ட பூதத்தைத் தவிர மற்ற பாவப் பேய்கள் அனைத்தையும் போக்கவல்லவன். ஆனுல் இவனுக்கு இரகசியத்தில் ஒரு விரதம் உண்டு. அந்தணன் ஒருவன் இவனிடம் ஒரு பயனை விரும்புவானுயின் இவன் கொடுத்துவிடுவான். இதற்கு நீ இணங்குவாயானுல் அழைத்துக்கொண்டு போ" என்ருர்.

ஜனமேஜயர் அதற்கு இசைந்து, சோமசிரவசுவை அழைத்துக்கொண்டு, அத்தினபுரம் சென்ருர். தம்பியரை நோக்கி "இவர் நம் புரோகிதர்; இவர் விருப்பப்படி நடவுங்கள்" என்ருர். பிறகு தட்சசிலா நகரை வென்று தனக்கு உரிமையாக்கினுர்.

**அயோத தௌமியர் :**

இந்தச் சமயத்தில் அயோதர் என்ற பெயர் பெற்ற தௌமிய முனிவர் சிறந்தவராக விளங்கினுர். இரும்பு போன்ற பல்லை யுடையவர் ஆதலால் அயோதர் என்ற பேர் அவருக்கு அமைந்தது.

அயோத தௌமியருக்கு ஆருணி, உபமன்யு, பைதன் என்று மூன்று சீடர்கள் இருந்தார்கள். இவர்கள் குருநாதரிடம் ஒழுக்கத்துடனும் ஊக்கத்துடனும் கல்வி பயின்ருர்கள்.

குருநாதர் பாஞ்சால தேசத்து மன்னர் மகனுகிய ஆருணியைப் பார்த்து "வயலின் மடையை அடைத்து வா" என்று கட்டளையிட்டார்.

**ஆருணி:**

ஆருணி வயலிடம் போய்க் காலை முதல் மாலைவரை மடையை அடைக்க முயன்ருன். மடையை அடைக்குந்தோறும் தண்ணீர்வேகமாக வந்துமடையை உடைத்துக் கொண்டே யிருந்தது. ஆருணி வருந்தினுன். குருவின் கட்டளையை நிறைவேற்ருமல் திரும்ப அவன் விரும்பவில்லை. மண்வெட்டியை மடை மேல் இட்டு மடையில் அவன் படுத்துவிட்டான். தன்னையே தியாகஞ் செய்தான். அவனுடைய குருபக்தியைக் கண்டு, நீர் அவனைத் தாண்ட அஞ்சி நின்றது. இரவு வந்ததும் அயோத தௌமியர் "ஆருணி எங்கே?" என்று மற்றச் சீடர்களைக் கேட்டார். "சுவாமி! அவன் காலையில் தங்கள் கட்டளைப்படி மடையடைக்கச் சென்ருன்" என்ருர்கள்.

"மடையடைக்கச் சென்றவன் இன்னும் வரவில்லையா?" என்று குருநாதர் வயல் பக்கஞ் சென்ருர். "குழந்தாய்! ஆருணி!" என்று கூவி அழைத்தார். ஆருணி, "குருநாதா! அடியேன் தண்ணீருக்குள் மடையில் படுத்திருக்கின்றேன். மடை அடைபடவில்லை. அதனுல் இந்த உடம்பையே

இந்தப் பணிக்கு அர்ப்பணித்துவிட்டேன்'' என்ருன். "கண்ணே! எழுந்து வா'' என்ருர். அவன் தண்ணீரைப் பிளந்து கொண்டு வந்தான். அதனுல் 'உத்தாலகன்' என்ற பேரையும் பெற்ருன்.

"மகனே! உன் குரு பக்திக்கு உள்ளம் உவகையுறுகின்றேன். நீரைப் பிளந்து வந்தபடியால் உன்னே உத்தாலகன் என்று உலகம் புகலும். உனக்குச் சகல கலேகளும் விளங்கும். உன் தேசத்துக்குச் செல். எல்லா நலன்களும் உண்டாகும்'' என்று குருநாதர் ஆசி கூறி யனுப்பினுர்.

உபமன்யு :

அயோத தௌமியர் இரண்டாவது சீடனுகிய உபமன்யுவைப் பார்த்துக் "குழந்தாய்! நீ பகலில் பசுக்களே மேய்ப்பாய்'' என்று பணித்தருளினுர். அதுபடியே அவன் பகலில் பசுக்களேக் கொண்டு போய்க் கானகத்தில் மேய்த்து மாலேயில் ஆச்ரமத்துக்கு வருவான். அவனுக்கு இரவில் ஆச்ரமத்தில் உணவு தரக்கூடாது என்று கட்டளே யிட்டிருந்தார். அதனுல் உபமன்யு ஆசிரமத்தில் உணவுகொள்ள இயலவில்லே. சில தினங்கள் சென்றன. உபமன்யுவின் உடம்பு செழுமையாக இருந்தது. தௌமியர், "உபமன்யுவே! நீ உணவு உட்கொள்ளுகின்றனேயோ?'' என்று கேட்டார். "சுவாமி! ஆச்ரமத்தில் எனக்கு உணவு தருவதில்லே. அடியேன் பிட்சை எடுத்துப் பசியாறுகிறேன் என்ருன்.

"நான் உன்னேப் பிட்சை எடுக்கச் சொன்னேனு?''

"எடுக்காதே என்றும் சொல்லவில்லேயே?''

"சரி பிட்சை எடுக்கும் அன்னத்தை என் எதிரில் வைத்துவிட்டுப்போ''

அதுபடியே உபமன்யு, தினந்தோறும் பிட்சை எடுக்கும் அன்னத்தை ஆசார்யர் முன் வைத்துவிட்டுப் போவானுயினன்.

சில நாட்கள் சென்றன. அவன் உடம்பு வாடவில்லே. குருநாதர் நோக்கினுர். 'மகனே! கொண்டுவருகின்ற அன்னத்தை என்முன் வைத்துவிடுகின்ருய். உன் உடம்பு நன்ருக இருக்கின்றதே? காரணம் யாது?'' என்று கேட்டார்.

"குருமூர்த்தி! மறுமுறை பிட்சையெடுத்துக் கொள்ளுகின்றேன்''

நீயே திரும்பத் திரும்பப் பிட்சை யெடுப்பது மற்ற பிட்சை யெடுப்பவர்க்கு இடையூருகும். மறுமுறை பிட்சை யெடுப்பது முறையன்று.''

அதுமுதல் உபமன்யு பிட்சை யெடுத்த அன்னத்தைக் குருவுக்கு முன்வைத்துச் சென்ருன். சில நாட்களுக்குப் பின்பும், அவன் உடம்பு நன்ருகவே இருந்ததைக் கண்டார் ஆசிரியர்.

"மகனே! மறுமுறை பிட்சை யெடுப்பதில்லேயே? உன் உடம்பு நன்ருக இருக்கின்றதே; என்ன காரணம்?''

"பெருமானே! பசுக்கள் கன்று பால் குடித்தபின் மடியில் எஞ்சிய பாலேத் தாமே கீழே சொரிகின்றன. அதனேக் கரத்தில் ஏற்றுக் குடிக்கின்றேன்''.

அப்படியா? பசுக்கள் உன்மீதுள்ள பட்சத்தால் பால் சொரிகின்றன. நீ இனி அதனேயும் பருகாதே'' என்ருர்.

சில நாட்கள் சென்றன. "உபமன்யுவே! இப்போதும் உன் உடம்பு செழுமையாகவே இருக்கின்றது. உனக்கு உணவு ஆச்ரமத்தில் தருவதில்லே. ஐயம் எடுத்த உணவை என்முன் வைத்துவிடுகின்ருய். மறுமுறையும் ஏற்பதில்லே; பாலேயும் பருகுவதில்லே; அப்படியும் உன் உடம்பு இளேக்காமல் இருக்கின்றதே, என்ன காரணம்?

"சுவாமீ! கன்றுகள் பால் குடித்தபின் அசை போடுகின்றபோது நுரை வழியும். அந்த நுரையை வழித்து உண்கின்றேன்''

"கன்றுகள் உன்மீதுள்ள கருணேயால் பாலே நுரையாகத் தருகின்றன. அவற்றின் வயிற்றுக்கு அது துரோகமாகும். நீ அதையும் உண்ணுதே. வேறு உணவு எதையும் உண்ணுதே''

இந்தக் கடுமையான உத்தரவுஇடப்பட்ட உபமன்யு சிறிதும் மனம்வருந்திஞனில்லே.

குருநாதரை வெறுக்கவுமில்லை. மகிழ்ச்சி யுடன் அவரை வணங்கினான்.

ஒன்றுமே யுண்ணாது பசுக்களை மேய்ப் பான். ஒருநாள் அவன் பசியால் வாடி னான். "உணவு எதையும் உண்ணாதே'' என்றுதானே குருவின் கட்டளை. "எருக் கிலை உணவுப் பொருள் அல்லவே'' என்று கருதித் தாங்க முடியாத பசியின் வேதனையால் எருக்கிலைகளை ஒடித்து ஒடித்து உண்டான். அதன் வெப்பத்தினால் கண்கெட்டுக் குருடனாகிவிட்டான்.

வழியுங்குழியுந் தெரியாமல் தடுமாறி னான். மிக்க வருத்தமுற்றான். வழி நடக் கும்போது ஒரு கிணற்றில் வீழ்ந்தான். தண்ணீரில் தத்தளித்தான். அக்கிணற்றில் முளைத்திருந்த செடியைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

பொழுது போயிற்று. பசுக்கள் ஆச்ர மத்தை யடைந்தன. உபமன்யு சேரவில்லை. அயோததௌமியர் பைதனைப் பார்த்து "உபமன்யு எங்கே?'' என்று கேட்டார். "காலையில் பசுக்களுடன் வனம் போனான்'' என்றான் பைதன்.

"நான் அவனை அளவுக்குமேல் சோதித்துவிட்டேன். அவன் கோபித்துக் கொண்டானோ?'' என்று கூறி, கருணை நிறைந்த அவர் தீவட்டியை ஏத்திக் கொண்டு காடெல்லாந் திரிந்தார். 'உபமன்யூ; உபமன்யூ;' என்று உரத்த குரலில் கூவி யழைத்தார்.

"குருநாதா! அடியேன் கிணற்றில் விழுந்திருக்கிறேன்'' என்றான் உபமன்யு.

"என் அன்புள்ள குழந்தாய்! நீ ஏன் கிணற்றில் விழுந்தாய்'' என்றார் குரு.

"சுவாமீ! பசி பொறுக்க முடியாமல் எருக்கிலையை யுண்டேன். கண் கெட்டு விட்டது. கிணற்றில் விழுந்துவிட்டேன்'' என்றான் உபமன்யு.

"கண்ணே! தேவ வைத்தியர்கள் அச்வினி தேவர்கள், அவர்கள் உனக்குக் கண் தருவார்கள். அவர்களைத் துதிசெய்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

உபமன்யு தண்ணீரில் இருந்து கொண்டே அச்வினி தேவர்களை இனிய மொழிகளால் பலவாறு துதி செய்தான். அச்வினீ தேவர்கள் அவனைத் தூக்கிக் கரையில் விடுத்து, "மைந்தா! இந்தத் தட்டில் இனிய பட்சணங்கள் இருக் கின்றன; உண்டு பசியாறுக'' என்றார்கள்.

"வணக்கம், என்னை மன்னிக்க வேண்டும். குருநாதருடைய அநுமதி யின்றி இதனை நான் அருந்தமாட்டேன்''.

"அப்பா! இதை உண்டால்தான் உனக்குக் கண் கிடைக்கும். உன் குருவும் முன்னொரு சமயம் அவருடைய குருவின் அநுமதியின்றியுண்டார். ஆதலால் அது போல் நீயும் உண்ணுக'' என்றார்கள்.

"என் ஆச்சாரியருடைய அனுமதியின்றி அடியேன் உண்ணமாட்டேன்'' என்று உறுதியாக வுரைத்தான் உபமன்யு. அச்வினீ தேவர்கள் அவனுடைய குருபக்தி யைக் கண்டு பெரிதும் மனம் மகிழ்ந்தார் கள். உன் குருநாதருக்கு எஃகுப் பல் அமைந்துள்ளது. உனக்குப் பொன் பல்லைத் தந்தோம். பொன்போன்ற அழகிய கண் களைத் தந்தோம், நடந்ததும், நடக்கின்ற தும், நடக்கப்போவதும் இக்கண்ணால் நீ காண்பாய். அருள் புரிந்தோம். உனக்கு ஞானம் பூரணமாக உண்டாகும். போய் வா'' என்று கருணை புரிந்தார்கள்.

உபமன்யு குருநாதரிடம் வந்து பணிந் தான். நடந்ததை நவின்றான். அவர் அவனுக்கு ஆசிகூறி "உனக்கு எல்லா வேதங்களும் எல்லாத் தரும நூல்களும் சித்தியாகும். மங்களம் உண்டாகும் போய்வா'' என்று அருள் புரிந்து அனுப் பினார்.

பைதன் குருவின் கட்டளையால் ஆச்ரம வேலைகளையெல்லாம் செய்தான். எருது போல் சுமப்பான். பசி தாகம் வெயில் மழை இவைகளைப் பொறுத்துக்கொண்டு நெடுநாள் உழைத்தான். குருநாதர் அவனுடைய குருபக்தியைக் கண்டு மகிழ்ந் தார். அவனுக்கு ஞானத்தை வழங்கினார். பைதன் குருகுல வாசத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டு இல்லறத்தை மேற் கொண்டான்.

(தொடரும்)

# ஸ்ரீராமாயண ரஸப்ரவாகம்

(மகாவித்துவான். பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

இராமபிரானுடைய ஸத்யவாதித்வப் பெருமையை இரண்டு வகையாக மூதலிக்க விரும்புகிறோமிங்கு. இன்னின்ன சரிதைகளினால் இராமனுடைய ஸத்யவாதித்வம் விசதமாகத் தெரிகின்றதென்று நிரூபணஞ் செய்தல் முதல்வகை. இன்னின்ன கதைகளினால் இராமனுடைய ஸத்யவாதித்வத்திற்குக் குறைகாண்கிறதேயென்று க்ஷேபித்துச் சொல்வாருடைய ஆக்ஷேப வார்த்தைகளை யெடுத்துக்காட்டி அவற்றுக்குப் பரிஹார முணர்த்தும் முகத்தால் அந்த ஸத்யவாதித்வத்தை நிலை நாட்டுவது இரண்டாம் வகை.

ஸத்யேந லோகாந் ஜயதி விவரணம் :

முதல் வகையில் நிரூபணம் கேண்மின். இராமபிரானுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் நடைபெறப்போகிறதென்பதை யுணர்ந்த கைகேயி மந்தரையினால் மனம் கலக்கப் பெற்றுக் கோபாவேசங்கொண்டு, சக்ரவர்த்தி பக்கலிலே இராமனுடைய வனவாஸத்தையும், பரதாபிஷேகத்தையும் பிரஸ்தாவித்தபோது, சக்ரவர்த்தி மூர்ச்சித்துக் கிடந்து பிறகு மூர்ச்சை தெளிந்து அக் கைகேயியை நோக்கிப் பல கூறுகின்றான்; (அயோத்தியாகாண்டம்-பன்னிரண்டாவது ஸர்க்கம்.)

"அடி கொடியவளே! இந்த வமிசத்தைக் கெடுக்கவந்த பாவியே! இராமனாவது நானாவது உனக்குச் செய்த தீங்கு ஏதேனுமுண்டோ? இராமன் பெற்றதாய்க்குப் போலவே உனக்கும் பணிவிடை செய்து கொண்டிருக்கின்றானே! அன்னவன்மீது நீ கடினமனம் கொண்டனையே! இந்த துர்ப்புத்தி உனக்கு எங்ஙனம் உண்டாயிற்று? உன் தன்மையறியாது உன்னை இவ்வீட்டினுள் கொணர்ந்து சேர்த்துக் கொண்ட எனது புத்தியையன்றோ நிந்திக்க வேண்டும். பறவைகள் விலங்குகள் முதற்கொண்டு ஸகல பிராணிவர்க்கங்களும் புகழும்படி நற்குண நற்செய்கைகள் வாய்ந்த இராமனை எங்ஙனம் நான் வனம் போகவிடுவேன்? இராமனைவிட்டு ஒரு நொடிப் பொழுதாயினும் என்னுடலில் உயிர் தங்கியிருக்குமோ? அடிபாவி! நீ கொண்ட கொள்கை என்னுயிரையே மாய்க்க வல்லதாக வன்றோ இருக்கிறது; இக் கொடிய கருத்தைக் கூசாது நீ என்னிடம் கூறின அளவே போதும்; இவ்வளவோடு இக்கருத்தை விட்டுத் தொலைப்பாயாக; உனக்கு நான் கணவனாக இருந்தாலும் உன் பாதங்களில் என் தலையை மடுத்து வணங்கி வேண்டிக்கொள்ளவும் கூச்சமற்றிருக்கின்றேன். கலக்கந் தீர்ந்து என்மேல் அருள் புரிவாயாக; என்றினைய வார்த்தைகளைச் சொல்லி வரும்போது இராமனுடைய நற்குணங்களை நாலைந்து சுலோகங்களினால் கல்லும் உருகக் கூறுகின்றான் தயரத மன்னவன்; அவற்றுள் தலையான சுலோகம் இது;

"ஸத்யேந லோகாந் ஜயதி
தீநாந் தாநேந ராகவ:,
குரூந் சுச்ரூஷயா தீரோ
தநுஷா யுதி சாத்ரவாந்:"

(இதன் பொருளாவது) இராமன் ஸத்ய வாக்கின் பெருமையினால் சகல லோகங்களையும் தானிட்ட வழக்காகக் கொண்டிருக்கிறான்; ஏழைகளைக் கொடையினால் கவர்கின்றான்; ஆசிரியர்களைப் பணிவிடையினால் கவர்கின்றான்; போர்க்களத்தில் வில்லினால் பகைவர்களைக் கவர்கின்றான்; என்பது. இவற்றுள் 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்பது தலைமைபெற்ற விஷயம். இதற்கு அடுத்த சுலோகத்திலும் ஸத்யம் என்று தொடங்கி இராமனுடைய மெய்ம்மைப் பெருவார்த்தையின் மேன்மை புகழப்படுகின்றது. இங்ஙனே பலர் பலவிடங்களில் இராமபிரானது ஸத்யத்தைப் பற்றிப்

புகழ்ந்து பேசியிருந்தாலும் மேலே குறித்த சுலோகத்தில் 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்றிருப்பது விலையுயர்ந்த ரத்னமாகக் குலாவப்படுகின்றது. பகவத்விஷயப் பேராசிரியரான நம்பிள்ளையினுடைய வைபவத்தில் 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்கிற இந்த ச்லோகத்தின் சார்பான சொற்பெருமை தலைசிறந்து விளங்குகின்றது. அதனைச் சிறிது விவரிப்போம்.

நம்பிள்ளை நிர்வாக விவரணம் :

பட்டருடைய ஸந்ததியில் தோன்றி மகாவித்வானாயிருந்த நடுவில் திருவீதிப் பிள்ளைபட்ட ரென்பவர், நம்பிள்ளைகாலத்தில் திருவரங்கம் பெருநகரில் வாழ்ந்து வந்தவர். இவரும் ஓரிடத்திலே சொரூப கிரந்தங்களைப் பிரவசனம் செய்து வந்தார். ஆனாலும் பெரும்பாலோர் நம்பிள்ளை கோஷ்டியிலேயே அந்வயித்து இவருடைய கோஷ்டியில் மிகச்சிலரே சேர்ந்திருந்தனர். அதனால் இவர்க்கு நம்பிள்ளையிடத்தில் பொருமையுண்டாகியிருந்தது. இவர் ஒரு நாள் ராஜஸபைக்குச் சென்றிருந்தார். அவ்வரசன் மகாவிவேகியுமாய், தன்னிடம் வருகிற பண்டிதர்களையெல்லாம் ஸ்ரீ ராமாயணம் முதலிய நூல்களில் கேள்வி கேட்பவனுமாயிருந்தபடியால், இந்தப் பட்டரையும் ஸ்ரீ ராமாயணத்தில் ஒருகேள்வி கேட்டான். அதாவது:—

"ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே இராமபிரானாக வந்து திருவவதாரம் செய்திருந்தும், ஸ்ரீராமன் நாராயணத்வ ப்ரயுக்தமான பெருமையையறவே மறைத்துக்கொண்டு, மநுஷ்ய பாவனையையே பூர்த்தியாக ஏறிட்டுக்கொண்டு அஜ்ஞரைப்போலவும் அசக்தரைப்போலவுமிருந்தான் என்று தெரியவருகின்றது; ஸ்வாமிகளே! இப்படி நான் கிரகித்திருப்பது யுக்தமானதுதானே, பிசகல்லவே" என்று கைகூப்பிக்கொண்டு சொன்னான். அதுகேட்ட பட்டர் "ஆமாம், நீங்கள் கிரகித்திருப்பது யுக்தமே; நாராயணத்வப்ரயுக்தமான பரத்வத்தைக் கழற்றிவைத்துவிட்டு மநுஷ்யபாவனையில் தான் நடனம் செய்திருக்கிறார் ஸ்ரீ ராமமூர்த்தி; இதில் என்ன சந்தேகம்? இப்படிக்கு இசைந்தால்தான் ஸ்ரீராமாயண கதைகள் பொருந்தும்" என்று விடை கூறினர். இதைக்கேட்ட அரசன் "ஸ்வாமிகளே! அப்படியானால் இராமன் 'மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாந் அநுத்தமாந்' என்று சொல்லி ஜடாயுவுக்கு முத்தியளித்ததாகக் கதை காண்கிறதே, இது பொருந்துமாறு என்? அப்போது இராமன் தன்னுடைய மனைவியான பிராட்டி சென்ற விடம் அறியாமல் "மரமே! பார்த்தாயா? மயிலே! நீ கண்டாயா? குயிலே! நீ அறிவாயா?" என்றிப்படி, அஃறிணைப் பொருள்களையும் கேட்டுத்தளர்கின்ற நிலையாயிரா நின்றது; அந்நிலையில் ஜடாயுவை நோக்கி, 'நான் உனக்குக் கட்டளையிடுகிறேன், மோக்ஷம் போவாயாக' என்று சொன்னார் பெருமாள் என்றால், இது பொருத்தமாக இல்லையே? ஸ்வாமிகள் இதனைப் பொருந்தவிட்டு என் மனம் த்ருப்தியடையும்படி சமாதானம் சொல்ல முடியுமோ?" என்றான்.

கேள்வியோ வலிதாயிருந்தது. பட்டருக்கு சமாதானம் ஸ்புரிக்கவில்லை. கூரத்தாழ்வான் அருளிச் செய்த அதிமாநுஷஸ்தவத்தில் "ப்ருச்சாமி கிஞ்சந யதா கில ராகவத்வே" "அக்ஷுண்ண யோகபதம்" என்று தொடங்கியுள்ள இரண்டு ச்லோகங்களிலும் இதே கேள்வியுள்ளது என்பதை நினைத்துக்கொண்டாரேயல்லது, கேள்விக்கு த்ருப்திகரமான ஸமாதானம் சொல்ல விரகறிந்திலர். இவருடைய அத்ருஷ்டவசத்தால் அப்போது அவ்வரசனுக்கு வேறொரு பணியில் மனவூக்கம் ஏற்பட்டது; அன்றியும், நம்பிள்ளை திருவடிகளில் பழுக்கக் கேட்டவொரு பெரியார் யாத்ருச்சிகமாக அவ்வரசசபையில் தென்பட்டார். அவரைக் கண்டவுடனே பெருமகிழ்ச்சி கொண்டு பட்டர் அவரிடத்தில் அரசனுடைய கேள்வியை யெடுத்துரைத்து 'இவ்விஷயம் நம் பிள்ளை கோஷ்டியில் விசாரத்திற்கு வந்திருக்குமே, நம்பிள்ளை நிர்வகிக்கும் விதம் யாது?' என்று செவியோடு செவியாகக் கேட்டார். கேட்டவுடனே அவர் "ஸத்யேந லோகாந் ஜயதி" என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தைக் கொண்டு நம்பிள்ளை நிர்வஹிக்கக் கேட்டிருந்ததுண்டு" என்று கூற, பட்டர் அதைத் தம் திருவுள்ளத்திலே கொண்டு 'இதுதான் பொருத்தமான ஸமாதானம்' என்று அறுதியிட்டுக்கொண்டார்.

வேறு பணியில் இருந்த அரசனும் அபிமுகனாகி 'ஸ்வாமிகளே! என் கேள்விக்கு ஸமாதானமொன்றும் ஸ்புரிக்கவில்லையோ' என்றான். அதற்குப் பட்டர், 'மஹாப்ரபோ!

ஸ்புரிக்காமலென்ன? அப்போதே சொல்ல ஸஜ்ஜனுயிருந்தேன்', தாங்கள் அந்ய பரராய் இருந்தபடியாலே நானும் சமயம் எதிர்பார்த்திருந்தேன்', இப்போது கேளுங்கள்' என்று பீடிகையிட்டுக் கொண்டு நம்பிள்ளை சிஷ்யரிடம் கேட்ட நிர்வாஹத்தைப் பன்னியுரைத்தார்; அதாவது, இராகவன் 'ஸத்யவாக்கின் பெருமையினுல் ஸகலலோகங்களையும் ஸ்வாதீனமாகவுடையவன்' என்று தசரத சக்ரவர்த்தி சொல்லியிருப்பதனுல் அந்த ஸத்யவாக்கின் பெருமையே ஜடாயுவுக்கு முத்தியளித்ததாம். நாராயணத்வ ப்ரயுக்தமான பரத்வத்தினுல் முத்தியளித்த படியன்று' என்று.

ராஜஸன்மான விசேஷங்கள் :

பட்டர் அரசனுக்கு இதை விரிவாக உணர்த்த, அரசன் மேதாவியாகையாலே மிகவுகந்து, இங்ஙனேயல்லது வேறுவகையாக ஸமாதானம் சொல்லப் பொருந்தாதென்று துணிந்து உள்குழைந்து பட்டரை விசேஷமாக ஸன்மானித்துப் போகவிட்டான். பட்டர் ப்ராமாணிகராகையாலே அந்த ஸத்காரத்தைத் தம்முடைய க்ருஹத்திற்குக் கொண்டு போக மனங்கொள்ளாமல், 'நம்பிள்ளையின் ஸ்ரீ ஸூக்தி ரத்நாகரத்தில் ஒரு சிறு திவலைக்குப் பெற்ற ஸத்காரமன்றோ இது' என்று உள்ளமுருகி அதை நம்பிள்ளை திருவடிவாரத்திலே கொண்டு ஸமர்ப்பித்து "தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளில் சிந்திப்போன ஒரு சொல்லுக்குப் பெற்ற ஸத்காரமிது; இதுகாறும் அடியேன் அகன்றிருந்து அனர்த்தப்பட்டது போதும்; இனி நிழலுமடிதாறுமாக அங்கீகரித்து அடியேனை வாழ்வித்தருளவேணும்" என்று வேரற்ற மரம் போல விழுந்துவேண்டி அடிபணிந்து உய்ந்தாரென்பது வரலாறு.

இதனுல், இராமபிரானுடைய 'ஸத்ய வாக்கின் பெருமையை நம் முன்னேர்கள் நிரூபிக்கும் திறம் அறியலாகும். இனி இரண்டாவது வகையில் நிரூபணம் கேண்மின்; ஸ்ரீ ராமனுடைய ஸத்யவாதித்வத்திற்கு ஸ்ரீராமாயண கதையைக் கொண்டே குறை சங்கித்து, அதற்குப் பரிஹார முணர்த்துகிறோம்.

ஸ்ரீராமனுடைய ஸத்யவாதித்வத்தில் சங்கா பரிஹாரங்கள் :

இராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வதாகச் சக்ரவர்த்தி நிச்சயித்து நியமனம் தந்து அதற்குப் பூர்வாங்கமாக ஆக வேண்டிய சடங்குகளும் முடிவுபெற்று அபிஷேகமாக வேண்டிய ஸமயத்தில் கைகேயியின் வாக்குக்குக் கட்டுப்பட்ட மன்னவன் இராமனுக்கு வனவாசத்தை நியமிக்கவேண்டிவந்ததென்கிற கதா சந்தர்ப்பம் யாவரும் அறிந்ததே. மகுடாபிஷேகம் கொண்டருள ஸித்தனுயிருந்த இராமனுக்கு, முடிதவிர்ந்து சடைபுனைந்து மரவுரியுடுத்து நல்லுணவுகளை யொழித்துக் காய்கிழங்குகளைப் புசித்துக் கல்லும் முள்ளுமான காட்டு வழிகளிலே திரிந்து பதினன்கு வருஷகாலம் வனவாஸஞ் செய்ய நேர்ந்ததென்றால், உண்மையில் இது வருத்தமாக இருக்கக்கூடுமா? ஆனந்தமாக இருக்கக்கூடுமா? என்று நாம் ஆலோசிக்குமளவில் தலைவிதியென்று ஒப்புக்கொள்ள வேண்டியதாக நேர்ந்த இவ்விஷயத்தில் ஆனந்தம் எப்படியிருக்கக்கூடும்? உள்ளபடி வருத்தந்தானிருக்கும், என்றே பலரும் நினைக்கத்தக்கதும் சொல்லத்தக்கதுமாம். ஆனால், இது தவருன அபிப்பிராயமேயாகும். ராஜ்யாபிஷேகத்திற் காட்டிலும் வனவாஸத்தில் இராமபிரானுக்கு மிக்க மகிழ்ச்சியே யென்று அவன்றனது வாக்கினின்று நன்கு தெரிகின்றது. (அயோத்யா காண்டம் 22—29)

இளையோனை நோக்கிக் கூறிய அவ்வார்த்தையில் "நமக்கு ராஜ்யமானுலென்ன? வனவாஸமானுலென்ன?' என்று முதலிற் சொல்லி உடனே "வநவாஸோ மஹோதய:" என்று வனவாஸந்தான் பேரின்பமென்று கூறின இராமபிரான் பொய்யாகக் கூறுமவனல்லனே; நெஞ்சிலுள்ளதை உள்ளபடி யுரைப்பவனன்றோ இராமன்!

கம்பர் வாக்கைக் காட்டுதல் :

இவ்விஷயத்தைக் கம்பர் கூறுமிடத்து வெகு ஆச்சரியமாகக் கூறுகின்றூர். "இராமன் திருமுகச் செவ்விநோக்கின், அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா" என்று, கலக்கிய மாமனத்தனளாய்க் கைகேசி வரம்வேண்ட, மலக்கிய மாமனத்தனுய் மன்னவனும் மரு

தொழிய, குலக்குமரா! காடுறையப்போ வென்று விடை கொடுத்தவளவிலே இராம பிரானுக்குண்டான மனமகிழ்ச்சி, "இப் பொழுது எம்மனோரால் இயம்புதற் கெளி தோ?" அப்போது அத்திருமுக மண்ட லத்தை நேராகச் சேவிக்கப் பெற்றவர்கள் பேசத் தக்கதேயல்லது, அதனைக் கண்ணுற் காணுத நான் எனது புல்லிய சொல்லைக் கொண்டு அறிவிக்கப் பார்ப்பது பேதைமை யன்ருே என்று கையொழிந்து நின்ற கம்பர், மீண்டும் அதனைச் சொல்லுவதா கத் தொடங்கி "வனவாஸ நியமனம் பெறு தற்கு முன்னே இராமபிரானது திருமுக மண்டலம் தாமரையோ டொத்ததாக மாத் திரம் சொல்லலாம்படி யிருந்ததென்றும்; வனவாஸ நியமனம் பெற்றபின்போ வென் னில் அப்போதலர்ந்த செந்தாமரைப் பூவின் செவ்வியிற் காட்டிலும் பன்மடங்கு மேம்பட்ட செவ்வியைப் பெற்றதென்றும் கூறி முடித்தனர்.

ஸ்ரீராமன் அஸத்யவாதியென்கிற

பூர்வபக்ஷம்:

இங்ஙனே அதிசயமாகக் கூறுதற்குக் காரணம் "வநவாஸோ மஹோதய:"என்று இராமபிரானருளிய சொல்லேயாகும். நன்கு ஆராய்ந்து பார்க்குமிடத்து இது அஸத்தியமாகச் சொன்னதேயல்லது ஸத்யமாகச் சொன்ன 'தன்றென்றும், மகுடாபிஷேக மங்களம் தவறிப்போயிற்றே யென்கிற துக்கமே இராமனது அடிவயிற் றில் குடிகொண்டிருந்ததென்றும் கண்டறி யும் படியாகவுள்ளது. எங்ஙனே யென் னில்; இராமன் பஞ்சவடியில் ஸீதையைப் பிரிந்த வருத்தத்தினுல் புலம்புகையில் (ஆரண்ய காண். 66—25),

"கிடைக்கவேண்டிய ராஜ்யம் அந்தோ! கிடைக்காமற்போயிற்று; ராஜ்யம் கிடைக் காமற்போனுலென்ன? நகரத்திலேயே ஒரு மூலையில் வஸிக்கப்பெற்றிருக்கலாமே; அதுவுமில்லாமல் காட்டில் வந்து திண்டாட வேண்டியதாயிற்றே; இப்படிப்பட்ட தன்ருே என் தரித்திரம்!" என்று புலம்பி யுள்ளான்.

இங்ஙனே புலம்புகின்றபடியை நோக்கி னுல் ராஜ்யமிழந்து வனவாஸம் பெற்றது பெருந்துயராகவே பெருமாளுடைய அடி வயிற்றில் உறைந்து கிடக்கிற தென்று தெரியவில்லையா? உண்மை இப்படியிருக்க 'வநவாஸோ மஹோதய:' என்று அப் போது சொன்ன வார்த்தை அஸத்ய மென்றே கொள்ளவேண்டியதாகிற தன்ருே! இங்ஙனே பலர் சங்கிக்க இட முள்ளது.

மேலேகாட்டிய பூர்வபக்ஷத்திற்குப் பரிஹாரம்:

இனி இதற்குப் பரிஹாரம் கூறுவோம்; "ராஜ்யாத் ப்ரம்சோவநே வாஸ!" என்று பரிதபித்துச் சொன்னஇது எந்த ஸமயத் தில்? எதனுலே? என்று நன்கு ஆலோ சிக்க வேண்டும். பிராட்டியைப் பிரிந்தும், பரமபாகவதோத்தமரான ஜடாயுமஹா ராஜரை இழந்தும், பரிதாபம் பொறுக் கொணுதிருந்த ஸமயத்தில் வெளிவந்த வார்த்தையிது. வநவாஸக் கட்டளை கிடைத்தபோது "வநவாஸோ மஹோ தய:" என்று சொன்னது என்ன திருவுள் ளத்தாலென்னில், கேண்மின்; ஜநகசக்ர வர்த்தி ஸீதாபிராட்டியைத் தாரை வார்த் துக் கொடுக்கும்போது "இயம்ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ" என்று சொல் லிக் கொடுத்தார். ஸ்ரீராமபிரான் தான் செய்யக்கடவதான தருமத்திற்கு அவளைத் துணையாகக் கைப்பற்றினது இதனுல் விளங்கிற்று. இராமன் தான் செய்யக் கடவதான தருமம் எதுவென்னில்; சரணு கத பரித்ராணமேயாகும். (இவ்விஷயம் 'க: தர்மஜ்ஞ:?' என்ற மூன்ரும் வினுவின் விவரணத்தில்விரித்துரைக்கப்பட்டுள்ளது). பிராட்டியுடன் காட்டுக் கெழுந்தருளினது சரணுகத ஸம்ரக்ஷணமாகிற பரமதர்மத்தை நிறைவேற்றுதற்குப் பாங்காகுமென்ற குதூகலத்தாலேயாயிற்று. காகாசுர பரித் ராணம் முதலிய தருணங்களில் பிராட்டி கூட இருந்தது ஸபலமாகப் பெற்றதைப் பெருமாள் நன்கறிந்தவர். அப்படிப்பட்ட பிராட்டியைப் பிரிந்த துக்கம் ஒன்று; பரம பாகவதர்களோடு கூடிவாழலாமென்கிற குதூகலத்தோடே காடேறவந்தவர்க்கு மகா பாகவத உத்தமர் ஆன ஜடாயுமகா ராஜரை இழந்த துக்கம் மற்ருென்று இதுவே மிகப்பெரிய துயராம். இவ் விரண்டு துக்கங்களினுலும் திருவுள்ளம் உடைகுலைப்படவே காட்டுக்கு வந்தது விபலமாகவும் விபரீதபலமாகவுமாயிற்றே என்கிற துக்கத்தினுல் 'ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸ:' என்கிற ச்லோகம் ஆவிர்ப வித்ததில் பிசகொன்றுமில்லை; இதனை "வநவாஸோ மஹோதய:'என்று முன்னம் சொன்னது பொய்யாக நினைக்க வொண் ணுததே.

யமே இல்லை'' என்றருளிச்செய்தார். முதலிகளில் சிலர் 'ஆகில் ஸ்வாமி, இருக்கும் நாளையில் காலக்ஷேபமிருக்கும்படி என்னவோ? என்று விநயத்தோடு வினவினர். உடையவர் அவர்களை நோக்கிப் பிற உபாயங்களில் மனம்பற்றுவையாது பகவத் பாகவத கைங்கர்யத்திலே ஈடுபடுங்கள். பகவத்கைங்கர்யம் ஸ்ரீ பாஷ்யத்தைக் கற்றுப் பிறருக்கும் கற்பித்தல்; அது மாட்டாஞகில் ஆழ்வார்களது அருளிச் செயல்களில் ஈடுபடலும் பிறரை ஈடுபடுத்தலும் செய்தல், அதுவும் மாட்டாஞகில் பெருமாள் உகந்தருளின திவ்யதேசங்களிலே அமுதுபடி, சாத்துபடி, திருமாலை, திருவிளக்கு முதலியன நிர்மாணித்தல்; அதுவும் மாட்டாஞகில் திருநாராயணபுரத்திலே ஒரு குடிசை கட்டியேனும் வாழ்தல்; அதுவும் முடியாதவஞகில் எப்போதும் த்வயத்தை அநுசந்தானம் செய்துபோதல்; அதுவும் மாட்டாஞகில் என்னுடையவன் என்று அபிமானித்திருக்கும் ஒரு உண்மை ஞான அதிகாரியின் அபிமானத்தில் ஒதுங்கிவாழ்தல்; இதில் ஏதேனும் இயலாமலா போய்விடும்?

இப்படி வாழும் ஒருவன் தான் செல்லும் வழியில் முன்னெச்சரிக்கையோடிருக்க வேண்டும். அவனைச் சுற்றியுள்ளார் மூன்று வகைப்படுவர். அநுகூலர், ப்ரதிகூலர், இரண்டுங் கெட்டானுயுள்ளார். அநுகூலராவார் ஸ்ரீ வைஷ்ணவர்கள்; ப்ரதி கூலராவார் பகவானை வெறுப்பவர்; இரண்டுங் கெட்டானுயிருப்பார் ஸம்ஸாரிகள். அநுகூலரைக் கண்டால், சந்தன புஷ்ப தாம்பூலாதிகளைக் கண்டாற்போன்றும், நிலாத் தென்றல்களைக் கண்டாற்போன்றும், உமது காதற்பொருளைக் கண்டாற் போன்றும் அகமகிழ்ந்து வாழுங்கள். ப்ரதிகூலரைக் கண்டால் நெருப்பையும் பாம்பையும் கண்டாற்போன்று அஞ்சி நடுங்கி விலகுங்கள். இரண்டும் கெட்டானைக் கண்டால் கட்டை கல் இவற்றைக்கண்டாற்போல அவர்களை ஒருபொருட்டாகஎண்ணுதீர்கள். அவர்கள் அநுகூலராய் வந்தால் அவர்களுக்கு ஆத்மஞானத்தை உண்டாக்கி நல்லுபதேசம் செய்யுங்கள். அவர்கள் அநுகூலமாகியிராவிட்டால் 'ஐயோ இப்படி வாழ்நாளை வீணே போக்குகிருனே' என்று அவன் பால் இரக்கம் செலுத்துங்கள். இப்படி ஒருவனைச் செய்யவொட்டாது தடுப்பது, செல்வம் காமம் இவற்றின் மேலுள்ள ஆசைமிகுதியே. இவ்வாசையடிப்படையாக ஸ்ரீ வைஷ்ணவர்களை அவமதித்தால், ஒரு சக்ரவர்த்தியின் திருமுன்பே அவனது அருமைப் புதல்வனைத் துன்புறுத்திஞல், அச்சக்கரவர்த்தி எத்துணை வெறுப்படைவானே அதேபோன்று எம்பெருமான் திருவுள்ளம் அவனை மிகவும் வெறுத்திருக்கும். ப்ரதிகூலரை அர்த்த காம இச்சையால் ஆதரிப்பின் அந்த அரசனின் பத்னி கேவலமான தன் பந்துக்களிடத்திலே மடிபிச்சை புக்கால் அது அரசனின் பெருமைக்கு இழுக்காகையாலே அவன் அவளை வெறுக்குமாபோலே, எம்பெருமானும் இவனை வெறுத்திருக்கும். அர்த்த காமம் அடியாக ஸம்ஸாரிகளை ஆதரித்தால், மாணிக்கத்துக்கும் மண் கட்டிக்கும் பேதம் தெரியாதவனைப்போலே இவனுக்குக் கிடைத்த ஞானம் கார்யகரமானதில்லை என்று பெருமாள் இவனை ஆதரியா தொழிவர், இக்குறிப்புக்களையுணர்ந்து ஒழுகுவீராக'' என உபதேசித்தருளினர்.

பின்பு எம்பெருமானர் பட்டரை நம்பெருமாள் ஸந்நிதிக்கு அழைத்துச் சென்றார். அங்கே பெரியபெருமாளை ஸேவித்து, முதலில் பட்டருக்கு தீர்த்தப்ரஸாதங்கள் அருளிச் செய்து, பின்பு தாமும் பெற்றார். கூடியிருந்த முதலிகள் அனைவரையும் குளிரநோக்கி 'இனியிவரே முன்னுக்கு தர்சனப்ரவர்த்தகர் ஆவார்' என்று ப்ரகடனம் செய்து, பட்டரை அனைவருக்கும் சுட்டிக்காட்டியருளினர். பின்னர் பட்டரை நோக்கி 'வாரீர் பட்டரே! மேல் நாட்டில் வேதாந்தி என்று ஒரு பெரிய வித்வான் இருப்பதாகக் கேள்வியுறுகின்றோம். நீர் அங்கேறச் சென்று அவனை நம் தர்சனப்ரவர்த்தகனும்படி திருத்திப்பணி கொள்ளும்' என்ற ஆசி கலந்த நியமனம் அருளினர். பின்னர் பட்டருடனும் முதலிகளுடனும் மடத்துக்கு எழுந்தருளினர். உடையவரின் செய்கை ஒவ்வொன்றின் மூலமாகவும், தங்களைவிட்டு உடையவர் ஒவ்வொரு அடியாகப் பிரிந்து செல்கிரூர் என்பதை முதலிகள் உணர்ந்தனர். ஆனுல் ஒன்றும் பேச வழியின்றித் திகைப்புடனிருந்தனர். எனினும் அவர்கள் உள்ளத்திலே பொங்கிய சோகம் கண்களில் நீராகத் தேங்கி நிற்பது கண்டார் உடையவர். அவர்களனைவரையும் நோக்கி 'நம்முடைய பிரிவாலே துயரமடையக் கூடாது. நம்முடைய சம்பந்தம் இவ்வளவு நாள் பெற்றும், இத்தகைய அறிவுகேடான செயலை நீங்கள் செய்வீர்களா

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

(திரு. கே. பட்சிராஜன், பி.ஏ., பி.எல்., திருநெல்வேலி)

(முற்றொடர்ச்சி)

இங்ஙனம் திருவிடை கொள்வார் போன்று கூடியிருந்த முதலிகளுக்குத்தான் தன்னுள்ளே தேக்கி வைத்திருந்த அர்த்த விசேஷங்களையெல்லாம் அருளிச்செய்த உடையவர் "கூவிக்கொள்ளும் காலம் இன்னும் குறுகாதோ" என்றபடி தம்மைத் திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளும்படி பெருமானைப் பிரார்த்தித்துக் கொண்டு அதே சிந்தனையில் எழுந்தருளியிருந்தார்.

அவ்வளவிலே ஸ்ரீ ரங்கராஜபட்டர், பெரிய பெருமாள் பட்டர் முதலானோர், பெரிய பெருமாள் உடுத்துக் களைந்த பீதக ஆடையையும் சூடிக்களைந்த மாலை முதலியவற்றையும் எடுப்பித்துக்கொண்டு வந்தனர். உடையவர் பெருமாள் நியமிக்கிறார் என்று உள்ளம் களித்தவராய், அந்தப் பிரஸாதங்களைத் தலைவணங்கி ஏற்று அணிந்து கொண்டார். தமது வைகுண்ட யாத்திரைக்கு அங்கமாக அனைவரையும் த்வயத்தை ஸேவிக்க நியமித்தார். நடாதூர் ஆழ்வானை நோக்கி ஸ்ரீ பாஷ்யத்தை வளர்த்து வாரும் என நியமித்தார். கந்தாடை ஆண்டானை அழைத்துத் தமது சரம விக்கிரகக் கைங்கர்யங்களை நடத்தும்படி பணித்தார். திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலானவர்களை நோக்கி 'பட்டரிடம் நம்மிடத்திருந்தது போலவே இஷ்டமாயிருங்கோள். அவர் வயதிலிளையார் என்னும் உதாஸீனம் தோன்றவிடாது காப்பாற்றிக் கொள்ளுங்கோள்'' என்று எச்சரித்தார்.

பின்னர் அனைவரையும் அழைத்து, மீண்டும் தாம் அவர்கள் பால் அறிந்தோ அறியாமலோ ஏதேனும் பிழையுற்றிருந்தாலும், அதனைப் பொருட்படுத்தாது தம்மை மன்னிக்கும்படி கைகூப்பி வேண்டிக் கொண்டார். அனைவரும் தேவரீருக்கு ஒரு அபராதம் உண்டோ? உலகனைத்துக்கும் ஒருயிர் போல நிலவிய தேவரீரைப் பிரிந்து எங்ஙனம் அடியோங்கள் தரிப்போம் என்று கண்பனிசோரப் பொருமலும் விம்மலுமாக விண்ணப்பித்துத் துயரமே உருவாய்ச் சோர்ந்தனர். உடையவர் அவர்களை மலர்ந்த முகத்தோடு நோக்கி "அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கன்'' இருக்கும்போது உங்களுக்குத் தாழ்வு ஏது? பெரிய பெருமாள் கைங்கர்யங்களை விசாரிக்கும் போது ஸ்ரீ பட்டரை முன்னிட்டு ஆராய்வீராக. பெரிய பெருமாள் கைங்கர்யங்களைக் குறைவின்றி நடத்திக் கொண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பேணி வாழ்வீர்களாக'' என்று உபதேசங் கலந்த ஆசி மொழிந்து, அவர்களனைவரையும் பட்டர் கையிலே ஒப்புவித்து, பட்டரை நோக்கி "உமக்குத் தாயும் தந்தையும் ஆவாராய், பிரமேயத்தில் எல்லையான பெரிய பெருமாள் திருவாராதனத்தைப் பெருக்க நடத்திக் கொண்டு, நமது தர்சனத்தையும் வளர்த்துவாரும்'' என்று நியமித்தருளினர்.

பின்னர் ஸ்ரீவைஷ்ணவ சமூகத்தினை நோக்கி "ஒருவன் ப்ரபன்னனானால் அவனது ஆன்ம யாத்திரை ஈச்சுவராதீனமாகையாலே, அதற்கு நீங்கள் மனம் கரையவேண்டியதில்லை. கரைந்தீராயின் ஆத்மஸமர்ப்பணம் பொய்யாகும் என்பதை உணர வேண்டும். அவனது தேக யாத்திரையோ கர்மாதீனம், எனவே அதற்கும் மனம் இடியவேண்டாம். கரைந்தானாகில் நாஸ்திகனாகிறான். எனவே இரண்டு யாத்திரைகளுக்கும் இரங்க வேண்டிய அவசி

யமே இல்லை'' என்றருளிச்செய்தார். முதலிகளில் சிலர் 'ஆகில் ஸ்வாமி, இருக்கும் நாளையில் காலக்ஷேபமிருக்கும்படி என்னவோ? என்று விநயத்தோடு வினவினர். உடையவர் அவர்களை நோக்கிப் பிற உபாயங்களில் மனம்பற்றுவையாது பகவத் பாகவத கைங்கர்யத்திலே ஈடுபடுங்கள். பகவத்கைங்கர்யம் ஸ்ரீ பாஷ்யத்தைக் கற்றுப் பிறருக்கும் கற்பித்தல்; அது மாட்டாளுகில் ஆழ்வார்களது அருளிச் செயல் களில் ஈடுபடலும் பிறரை ஈடுபடுத்தலும் செய்தல், அதுவும் மாட்டாளுகில் பெருமாள் உகந்தருளின திவ்யதேசங்களிலே அமுதுபடி, சாத்துபடி, திருமாலை, திருவிளக்கு முதலியன நிர்மாணித்தல்; அதுவும் மாட்டாளுகில் திருநாராயணபுரத்திலே ஒரு குடிசை கட்டியேனும் வாழ்தல்; அதுவும் முடியாதவளுகில் எப்போதும் த்வயத்தை அநுசந்தானம் செய்துபோதல்; அதுவும் மாட்டாளுகில் என்னுடையவன் என்று அபிமானித்திருக்கும் ஒரு உண்மை ஞான அதிகாரியின் அபிமானத்தில் ஒதுங்கிவாழ்தல்; இதில் ஏதேனும் இயலாமலா போய்விடும்?

இப்படி வாழும் ஒருவன் தான் செல்லும் வழியில் முன்னெச்சரிக்கையோடிருக்க வேண்டும். அவனைச் சுற்றியுள்ளார் மூன்று வகைப்படுவர். அநுகூலர், ப்ரதிகூலர், இரண்டுங் கெட்டானுயுள்ளார். அநுகூலராவார் ஸ்ரீ வைஷ்ணவர்கள்; ப்ரதி கூலராவார் பகவானை வெறுப்பவர்; இரண்டுங் கெட்டானுயிருப்பார் ஸம்ஸாரிகள். அநுகூலரைக் கண்டால், சந்தன புஷ்ப தாம்பூலாதிகளைக் கண்டாற்போன்றும், நிலாத் தென்றல்களைக் கண்டாற்போன்றும், உமது காதற்பொருளைக் கண்டாற் போன்றும் அகமகிழ்ந்து வாழுங்கள். ப்ரதிகூலரைக் கண்டால் நெருப்பையும் பாம்பையும் கண்டாற்போன்று அஞ்சி நடுங்கி விலகுங்கள். இரண்டும் கெட்டானைக் கண்டால் கட்டை கல் இவற்றைக்கண்டாற்போல அவர்களை ஒருபொருட்டாகஎண்ணுதீர்கள். அவர்கள் அநுகூலராய் வந்தால் அவர்களுக்கு ஆத்மஞானத்தை உண்டாக்கி நல்லுபதேசம் செய்யுங்கள். அவர்கள் அநுகூலமாகியிராவிட்டால் 'ஐயோ இப்படி வாழ்நாளை வீணே போக்குகிருனே' என்று அவன் பால் இரக்கம் செலுத்துங்கள். இப்படி ஒருவனைச் செய்யவொட்டாது தடுப்பது, செல்வம் காமம் இவற்றின் மேலுள்ள ஆசைமிகுதியே. இவ்வாசையடிப்படையாக ஸ்ரீ வைஷ்ணவர்களை அவமதித்தால், ஒரு சக்ரவர்த்தியின் திருமுன்பே அவனது அருமைப் புதல்வனைத் துன்புறுத்திஞல், அச்சக்கரவர்த்தி எத்துணை வெறுப்படைவானே அதேபோன்று எம்பெருமான் திருவுள்ளம் அவனை மிகவும் வெறுத்திருக்கும். ப்ரதிகூலரை அர்த்த காம இச்சையால் ஆதரிப்பின் அந்த அரசனின் பத்னி கேவலமான தன் பந்துக்களிடத்திலே மடிபிச்சை புக்கால் அது அரசனின் பெருமைக்கு இழுக்காகையாலே அவன் அவளை வெறுக்குமாபோலே, எம்பெருமானும் இவனை வெறுத்திருக்கும். அர்த்த காமம் அடியாக ஸம்ஸாரிகளை ஆதரித்தால், மாணிக்கத்துக்கும் மண் கட்டிக்கும் பேதம் தெரியாதவனைப்போலே இவனுக்குக் கிடைத்த ஞானம் கார்யகரமானதில்லை என்று பெருமாள் இவனை ஆதரியா தொழிவர், இக்குறிப்புக்களையுணர்ந்து ஒழுகுவீராக'' என உபதேசித்தருளினர்.

பின்பு எம்பெருமானுர் பட்டரை நம்பெருமாள் ஸந்நிதிக்கு அழைத்துச் சென்றுர். அங்கே பெரியபெருமாளை ஸேவித்து, முதலில் பட்டருக்கு தீர்த்தப்ரஸாதங்கள் அருளிச் செய்து, பின்பு தாமும் பெற்றுர். கூடியிருந்த முதலிகள் அனைவரையும் குளிரநோக்கி 'இனியிவரே முன்னுக்கு தர்சனப்ரவர்த்தகர் ஆவார்' என்று ப்ரகடனம் செய்து, பட்டரை அனைவருக்கும் சுட்டிக்காட்டியருளினர். பின்னர் பட்டரை நோக்கி 'வாரீர் பட்டரே! மேல் நாட்டில் வேதாந்தி என்று ஒரு பெரிய வித்வான் இருப்பதாகக் கேள்வியுறுகின்றேம். நீர் அங்கேறச் சென்று அவனை நம் தர்சனப்ரவர்த்தகனும்படி திருத்திப்பணி கொள்ளும்' என்ற ஆசி கலந்த நியமனம் அருளினர். பின்னர் பட்டருடனும் முதலிகளுடனும் மடத்துக்கு எழுந்தருளினர். உடையவரின் செய்கை ஒவ்வொன்றின் மூலமாகவும், தங்களைவிட்டு உடையவர் ஒவ்வொரு அடியாகப் பிரிந்து செல்கிருர் என்பதை முதலிகள் உணர்ந்தனர். ஆனல் ஒன்றும் பேச வழியின்றித் திகைப்புடனிருந்தனர். எனினும் அவர்கள் உள்ளத்திலே பொங்கிய சோகம் கண்களில் நீராகத் தேங்கி நிற்பது கண்டார் உடையவர். அவர்களனைவரையும் நோக்கி 'நம்முடைய பிரிவாலே துயரமடையக் கூடாது. நம்முடைய சம்பந்தம் இவ்வளவு நாள் பெற்றும், இத்தகைய அறிவுகேடான செயலை நீங்கள் செய்வீர்களா

யின் அது நம் உள்ளத்தைப் புண்படுத்திய தேயாகும்' எனக்கூறி, அச்செயல் செய்ய மாட்டோம் என்று ஒவ்வொருவரும் தமது திருவடிகளைத் தொட்டுச் சூளுரைக்கச் செய்தார். பின் அனைவருக்கும் ஸ்ரீ பாத தீர்த்தம் அளித்து அனைவரையும் அமுது செய்யப் பண்ணினார்.

அப்பால் பிள்ளைப் பிள்ளையாழ்வான், உக்கலாழ்வான், கோமடத்தாழ்வான், சேட்டலூர்ச் சிறியாழ்வான், வேதாந்தி யாழ்வான் முதலானோரைக் கந்தாடையாண்டான் கையிலே ஒப்புவித்தார்; எச்சான், அநந்தாழ்வான், தொண்டனூர் நம்பி, மருதூர் நம்பி யிவர்களை அருளாளப் பெருபெருமா ளெம்பெருமானார் கையிலே காட்டியருளினார்; பட்டர், கணியனூர்ச் சிறியாச்சான், சட்டம் பள்ளிச்சீயர், பெரியாணடான், சிறியாண்டான் முதலானோரை எம்பாரிடம் காட்டியருளினார்; கிடாம்பியாச்சான், கிடாம்பிப்பெருமான் எங்களாழ்வான், நடாதூராழ்வான் முதலானோரைத் திருக்குருகைப்பிரான் பிள்ளானிடம் ஒப்புவித்தார். மாருதிப் பெரியாண்டான், மாறொன்றில்லாச் சிறியாண்டான், அரணபுரத்தாழ்வான், ஆசூரிப்பெருமாள், முனிப்பெருமாள், அம்மங்கிப் பெருமாள் முதலானோரை நடுவிலாழ்வான் வசம் ஒப்புவித்தார். இன்னும் அங்குள்ள மற்ற முதலிகளை, அவர்களில் சிலரைத் தாம் குறித்து அவர்களிடத்தே ஒப்புவித்து அருளினார்.

(தொடரும்)

## மதிப்புரை

**திருவள்ளுவர் :**

உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராகத் திகழும் ஆசிரியர் திருவள்ளுவர் பெருமானைப் பற்றிய தமிழ் வரலாற்று நாடக நூல் இது. திருவள்ளுவரைப் பற்றி அறிஞர்கள் பற்பலர் எழுதியுள்ள ஆராய்ச்சி நூல்கள் பலவற்றையும் தொகுத்துப் படித்து, அவற்றை அடிப்படையாகக் கொண்டு, நாடகமுறையில் 37 காட்சிகளில், நன்கினிது இயற்றப் பெற்றுள்ளது. பழைய கதைகளில் இருந்து ஏற்றுக் கொள்ளப் படாத நிகழ்ச்சிகளையும், அவைகளில் மாற்றி அமைக்கப்பட்ட நிகழ்ச்சிகளையும், ஆசிரியர் நூலின் இறுதியில் தொகுத்துச் சுட்டியிருப்பதுடன், அங்ஙனம் செய்தமைக்குரிய அமைதிகளையும் கூறியிருப்பது, பெரிதும் போற்றுதற்குரியது. நாடகம் முழுவதும் குறட்பாக்களின் தெளிவுரையாகவே அமைந்திருத்தல், இந்நூலின் ஆசிரியர் ஆகிய திரு. மா. **வழித்துணைவன்** அவர்களின் சிறந்த புலமைக்குச் சான்று பகர்கின்றது. வரலாற்றுராய்ச்சிகட்கு முரண்படாமல், பெரும்பாலும் திருக்குறளின் அடிப்படையிலேயே இந்நாடகத்தினை ஆசிரியர் இனிது கற்பனை செய்திருத்தல், மிகவும் பாராட்டி மகிழ்தற்குரியது. தவத்திரு குன்றக்குடி அடிகளார், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கா. அப்பாத் துரையார், ப. இராமநாதனார், அவ்வை டி. கே. சண்முகம் ஆகிய அறிஞர் பெருமக்கள், இந்நூலுக்கு அணிந்துரை அளித்துச் சிறப்பித்துள்ளனர். 200 பக்கங்கள்; விலை ரூபா நான்கு. **கிடைக்குமிடம் : பாரி நிலையம்,** 59, பிராட்வே, சென்னை-1.

—ஆசிரியர்.

# அர்ச்சை யுருவத்தின் சிறப்பு

(திருமலை நல்லான் இராமகிருஷ்ணையங்கார், சென்னை.)

திருமகள்கேள்வனுக்கு ஐந்து நிலைகள் உண்டு என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை பரத்வம், வ்யூகம், விபவம், அந்தர் யாமித்வம், அர்ச்சாவதாரம் என்பனவாம். பரத்வமாவது வீட்டுலகின்கண் தன்மாட்டு அன்புகொண்ட முத்தரும் நித்தியரும் சூழ்ந்திருந்து ஏத்த எழுந்தருளியிருக்கும் நிலை. வியூகமாவது உலகைக்காக்கும் வழிகளைப் பாற்கடலில் ஆராய்ந்து கொண்டிருக்கும் நிலை. அந்தர் யாமித்வமாவது எங்நிலையிலும் மறைந்து துணையாய் உறைவதோடமையாது, உள்ளுவார் உள்ளிற் றெல்லாம் உடனிருந்து அறிந்து காக்க, இதயகமலத்தில் எழிலுருவோடு எழுந்தருளியிருக்கும் நிலை. விபவமாவது எங்நின்ற யோனியுமாய்ப் பிறந்து மண்மீது உழன்று உயிர்களைக் காக்கும் நிலை. அர்ச்சாவதாரமாவது அங்ஙனம் காத்தவிடாய்தீரத் திருவரங்கம் முதலிய திவ்ய தேசங்களில் இனிது வாழ்ந்து கொண்டிருக்கும் நிலை. இவ்வைந்து நிலைகளும் "விண்மீதிருப்பாய், மலைமேல் நிற்பாய், கடல் சேர்ப்பாய், மண்மீதுழல்வாய் இவற்று ளெங்கும் மறைந்துறைவாய்" (திருவாய்மொழி 6—9—5) என்று நம்மாழ்வாராலும் அருளிச் செய்யப் பட்டு உள்ளன.

என்றும் கண்டு கொண்டிருப்பாருக்குக் காட்சி கொடுப்பதற்குப் பரத்வநிலை. துயருற்ற பிரமன் முதலியவர்களின் கூக்குரல் கேட்பதற்கு வியூகநிலை. அவர்களைப் போல் சென்று கூக்குரலிடவும் மாட்டாத ஸம்ஸாரிகளைக் காப்பதற்கு விபவநிலை. யோகியர்க்கு உள்ளத்தில் காட்சி கொடுப்பதற்கு அந்தர்யாமித்வ நிலை. ஸம்ஸாரிகளைக் காக்க வந்த விபவநிலைக்கும் எட்டாது அப்பாற்பட்டு, வழி கெட்டுத் தவிக்கும் நமக்குக் காட்சி கொடுப்பதற்கு அர்ச்சாவதாரநிலை என்று உணர்க.

அறிவாலும் காலத்தாலும் பின்னுனராகிய நமக்கு முகம் கொடுக்கைக்காகவே ஏற்பட்டது அர்ச்சாவதாரம் என்க: "அடியோமுக்கே எம்பெருமானல்லீரோ நீர் இந்தளூரீரே" (பெரியதிருமொழி 4–9–5) என்ற திருமங்கைமன்னன் திருமொழியும் காண்க.

நமக்கு முகங்காட்ட எம்பெருமான் கொண்டுள்ள வடிவத்தையே "அர்ச்சை" என்கிறோம். அர்ச்சை யென்றால் பிம்பம், அதாவது பொம்மை (பதுமை) என்பது பொருள். நாம் அமைத்த பதுமையைத் தனது அப்ராகிருத வடிவமாகவே தன் ஸங்கற்பத்தால் கொள்ளுகிறான் எல்லாம் வல்ல எம்பெருமான்: பிம்பத்தில் தனது அப்ராகிருத வடிவத்துடன் எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான் என்பது சிலர் கருத்து.

எம்பெருமானுடைய ஏனைய வடிவங்கள் அவனது சொந்த விருப்பத்தினலெடுத்துக் கொள்ளப்பட்டவைகள். அர்ச்சையுருவமோ அங்ஙனன்று. அடியார்களுடைய விருப்பத்தின்படி அவனால் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே" (முதல் திருவந்தாதி 44) என்று பொய்கையாழ்வார் அருளிச்செய்கின்றார்.

இன்னார்இனையார் என்றில்லை; தங்கம் வெள்ளி என்கிற நியதியில்லை. இங்ஙனந்தான் என்கிற முறையுமில்லை. எவரேனும்,

எப்பொருளையேனும், எவ்விதமேனும் திருமேனியாக நீ கொள்ளவேண்டு மென்றால் அங்ஙனமே கொள்ளுகின்றான் எம்பெருமான். ஸ்ரீ ராமாநுஜர் மாதுகரத் திற்கு (பிட்சைக்கு) எழுந்தருளும் போது, ஸ்ரீரங்கத்திற் சில பிள்ளைகள் தெரு மணலிற் காலாலே கீறி 'இதுதான் உம் முடைய எம்பெருமான் திருமேனி' என்று தமக்குக் காட்டியதும், தமது பிட்சைப் பாத்திரத்தைக் கீழே வைத்துத் தண்டம் ஸமர்ப்பித்தாராம்.

மற்றுமோர் ஐதிகம். திருவரங்கத்தில் சில பிள்ளைகள் தெருவிலே பெருமாளும், நாச்சிமாரும், பெரிய திருமண்டபமும், கற்பித்து விளையாடுகிறார்கள். பெருந் திருப்பாவாடை அமுது செய்வித்து விநி யோகம் செய்கிற ஸந்தர்ப்பம். எம்பெரு மானார் பிட்சைக்கு எழுந்தருளிக் கொண் டிருக்கிறார். விரிக்கப்பட்டிருந்ததொரு துணியில் ப்ரஸாதமாகக் குவிக்கப் பட்டிருந்த மணலைக் கையாலே முகந் தெடுத்து "எம்பெருமானாரே பிரஸாதம் வாங்கிக் கொள்ளும்" என்றதும், எம்பெரு மானார் தண்டனிட்டு அவர்கள் கொடுத்த மணல் ப்ரஸாதத்வதைப் பிட்சைப் பாத் திரத்தில் ஏற்றுக்கொண்டார். குழந்தைகள் விளையாட்டிற்காக அமைத்த உருவமும் எம்பெருமானார்க்குத் தோற்றுகிறது இறை வனுகவே.

எம்பெருமான் தனது இச்சையினால் எடுத்துக்கொள்ளும் திருமேனிகள் அவனது ஆத்மஸ்வரூபத்தையும் விட மிகவும் இனியவை. மேனியினால் அவனுக்கு யாதொரு பயனுமில்லை. அடியார்களுக்காகவே அவன் மேனிகளை விரும்புகிறான். அடியவர்பால் கொண்ட அருள், அந்தந்த நிலைமைக் கேற்றதொரு திருமேனியைக் கொள்ளும் விருப்பத்தை எம்பெருமானுக்கு உண்டாக்குகிறது. இங்ஙனம் அடியவர்க்காகத் தன் விருப்பப் படி எடுக்கும் திருமேனிகள் அவனது ஆத்மஸ்வரூபத்தைப் பார்க்கிலும் இனியவையாயின. அடியார்க்காகத் தனது விருப்பத்தினால் எடுத்துக் கொள்ளும் ஏனைய திருமேனிகளைவிட, அடியார்களது விருப்பத்தினாலேயே அவர் களுக்காக எடுத்துக்கொள்ளும் அர்ச்சைத் திருமேனி மிகவும் இனியனவாம். இனி ஏனைய மேனிகளை எம்பெருமான் எடுத்துக் கொள்வதற்கு மூலமாய் அமைந்த அருளைக் காட்டிலும் அர்ச்சாரூபம் எடுப் பதற்கு மூலமாய் அமைந்த அருள்மிகச் சீரியதாம். பிரம்மாதியர்களை விட மிகக் கீழ்ப்பட்ட நம்போன்றவரிடம் எம் பெருமானுக்கு உண்டாகும் அருள் மிக்கிருக்குமன்றோ? குருட்டுப் பிள்ளை யினிடம் தாயின் அருள் தனிச் சிறப்புறு மன்றோ? எனவே சிறந்த அருளின் விளைவே அர்ச்சாவதாரத்திருமேனி என்க. கடைந்த பாற்கடலிலிருந்து அமுதம் பிறந்தது போல, ஸங்கற்பத்தால் கடையப் பட்ட அருட்கடலிலிருந்து பிறந்த அமுதமே, திருவேங்கட முடையான் திரு மேனி என்பர் வேதாந்த தேசிகர். (தயா சதகம் 22). ஆக இச்சையின் மாட்சி யாலும் அருளின் பெருமையாலும் எம் பெருமானுடைய ஏனைய வடிவங்களிலும் அச்சாவதாரத் திருமேனியே சீரிய தென்ற தாயிற்று.

இனி, பயன்படும் முறையிலும் எம்பெரு மானுடைய ஏனைய வடிவங்களிலும் அர்ச்சா விக்கிரகமே சிறந்தது. நெஞ்சு நிரந்தரம் நினைப்பதற்குப் பற்றுக்கோடா யிருப்பன அவனுடைய திவ்யமங்கள விக்கிரகங்களே. எம்பெருமானது ஆத்மஸ் வரூபத்திற்கும் இல்லாததோர் ஏற்றம் இது. வடிவிலாத ஆத்மஸ்வரூபத்தை எங்ஙனம் நினைக்க இயலும்? மனத்துக்குப்பற்றுக் கோடாயிருக்கும் திருமேனிகள் "சுபாச் ரயம்" என்று வழங்கப்படுகின்றன. சுபம் என்றால் ஸம்ஸார துக்கத்தைப் போக்கி வீட்டின்பம் தருவது; ஆச்ரயம் என்றால் மனத்திற்குப் பற்றுக்கோடாய் அமைவது. எம்பெருமானது ஆத்மஸ்வரூபம் சுபமே யாயினும் ஆச்ரயமாக மாட்டாது. நம் போன்றவர்கள் ஆச்ரயமாயினும், சுபரல் லர். நித்யசூரிகளுக்கும் முக்தர்களுக்கும் கூடப் பேரின்பம் தரும் அதிகாரம் இல் லாமையாலே சுபராதல் இயலாதென்க.

இங்ஙனம் "சுபாச்ரயம்" என்னும் சிறப் புடைய மேனிகளில் அர்ச்சா விக்கிரகம் இருவகைகளிலும் சிறப்புடையது

அதாவது சுபமாயிருந்தலிலும், ஆச்ரயமா யிருத்தலிலும் தனிச்சிறப்புடையது; புலன் வென்ற நலம் மிக்கோருக்கே பேரின்பம் தருவன ஏனைய வடிவங்கள். கட் கண்ணால் காணாத அவ்வுருவங்கள், நெஞ் சென்னும் உட்கண்ணால் காண்பவர்களுக் கன்றோ பேரின்பம் தரவல்லன. அர்ச்சா விக்கிரகங்களோ புலன் வழிச்செல்லும் நம்வழிவந்து முந்துறநின்று, நம் புறக் கண்ணுக்கும் தோன்றிப், பண்டை நம் வினை கெடலால் இக்காட்சியையே பேரின் பக்காட்சியாக மாற்றி விடுகின்றன. பீடத் திலிருந்து திருமுகம் முடிய அர்ச்சாவிக் கிரகத்தைக் காண்பவர்களுக்கு உடனே பாதகங்கள் நாசம்அடைந்து விடுகின்றன என்று சாஸ்திரம் கூறும்.

கண்ணாற்கண்ட விஷயங்களிலேயே மண்டிக் கண்டவா திரிதந்த திருமங்கை யாழ்வார், ஏனைய விஷயங்கள்போல அர்ச் சாரூபத்தையும் கண்டு, அவ்வழகிலேயே துவக்குண்டு மண்டி, அலகிலாத பேரின் பத்தை இந்நிலவுலகிலேயே பெற்றமை நாடறிந்த தொன்று.

தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் "மாத ரார் கயற்கண் என்னும் வலையுள்பட்டு அழுந்து வேனைப் போதேரே என்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால், ஆதரம் பெருகவைத்த அழகன்" என்று அர்ச்சாவிக்கிரகத்தின் அழகு, காம பரவசனான தனக்கு ஸ்ரீ ரங்கநாதனிடம் ஆதரத்தைப் பெருக வைத்ததாகக் கூறு கின்றார்.

இங்ஙனமே எம்பெருமானார்காண்பிக்கப் பெரிய பெருமாள் கண்ணழகிலீடுபட்ட பிள்ளையுறங்காவில்லிதாஸர், தன் மனை யாள்கண்ணே புனையா அழகு பெற்ற தெனக் கொண்ட மதிமயக்கத்தை விட்டுப் பெருமாள் மீது பெரும் பரிவுகொண்டு மகிழ்ந்ததும் அறிந்து கொள்ளத்தக்கது.

இனி மனத்துக்குப் பற்றுக் கோடாயிருக் கும் நிலையிலும் அர்ச்சாவிக்கிரகம் தனிச் சீர்மை உடைத்தே; பிற்பட்ட நம்போலி யர்க்குப் படியும் தன்மையது இது. ஏனைய வடிவங்களோ யோகியர்க்கே மனத்திலிடம் பெறும். விபவத் திருமேனிகள் அக்காலத் தவர்க்கே பயன்படுவன. செம்பொனே நிகழும் அர்ச்சா மூர்த்திகளே மறப்பற மனத்தே மன்னிநிற்பன.

இங்ஙனம் விஷயாந்தரங்களிலே மண்டி னோர்க்கும் தன் அழகைக் காண்பித்து, எளிதில் மறப்பற மனத்தே மன்னிக்கண்ட கண்மாற வைக்கமாட்டாதபடி பண்ணும் தன்மையன அர்ச்சா விக்கிரகங்களே. அழகார்ந்த அத்தகைய திருமேனியை நித்யாநுபவம் பண்ணப் பெற வேணும் என்ற ருசி பிறந்ததும் "ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்றபடி ஸம்ஸாரதுக்கத்தைப் போக்கி, தன் அநுபவம் ஆகிய பேரின்பத்தை அவ்வர்ச்சாவிக்கிரகங்கள் அளிக்கின்றன.

அர்ச்சையில் பகவானது அழகை உள்ளபடியே காணும்பேறு எப்பொழு தேனும் சிலருக்குத்தான் கிடைக்கிறது. அவன் காட்டவேண்டும். காணும் கண் கிடைக்கவேண்டும். அர்ச்சுநன் பகவானைக் கண்டது போல நாமும் காணலாம். திரு வரங்கன் காட்டவே கண்டு வாழ்ந்தார் திருப்பாணாழ்வார்.


கோயிலில் நாம் ஸேவிப்பதற்கும், காட்டக்கண்ட திருப்பாணாழ்வார் ஸேவிப் பதற்கும் வித்யாஸம் உண்டு. நமக்குப் பள்ளி கொண்டிருக்கும் பெரிய பெருமாள் இரண்டு திருக்கரங்களுடையவராகவே ஸேவை தருகிறார். திருப்பாணாழ்வாரோ சங்கு சக்கரங்களுடன் ஸேவிப்பதாகக் கூறுகின்றார். "கையினார் சுரி சங்கன லாழியார்" என்ற அவரது திருவாக்கை நோக்குக. "அரவினணைமிசைமேய மாயனார்" என்று ஆதி சேஷன்மீது எழுந் தருளியிருப்பதாக அப்பாட்டிலேயே கூறப் பட்டிருத்தலின், சங்கு சக்கரமேந்திய நம் பெருமாளை (உத்ஸவமூர்த்தியைப்) பற்றியது இப்பாடல் என்பது இயலாது. இவ்விஷயம் "நம்மளவன்றியே தெரியக் கண்டவர்கள் கையினார் சுரிசங்கனலாழி யார் என்றார்களிறே பெரிய பெருமாளை" என்று 3. 7. 2 பகவத் விஷயத்திற் காணத் தக்கது.

இனி ஒருவஸ்து ஒருவருக்கு ஒருவித மாகவும், மற்றொருவருக்கு வேறு விதமாக வும் தோற்றுமோ எனின், கூறுவாம். காண்பவரின் காண்டலிலுள்ள கோளாறினால் ஒரு வஸ்து இரண்டாகத் தோற்றுவதும், இரண்டு வஸ்துக்கள் ஒன்றாகத் தோற்றுவதும் உண்டு. அங்ஙனமே இயற்கையில் நான்கு கைகள் உடைய கண்ணன், கம்ஸன் முதலி யோருக்குக் காண்டலில் உள்ள கோளாறினால் இரண்டு கையினனாகத் தோற்றமளிக்கின்றான். அதே வேளையிற் கோபியருக்கு, இயற்கையான நான்கு திருக்கரங்களுடன் சங்கொடு சக்கரமேந் தும் தடக்கையனாய்ப் பிரகாசிக்கிறான். பெற்றோரின் கூற்றுக் கேற்பக் கம்ஸவதம் வரையிலும் இங்ஙனம் வெவ்வேறுவித மாகத் தோன்றிய கண்ணன், அன்பினர் அஃதில்லாதார் என்கிற வேறுபாடின்றித் தன்கரைகடந்த கருணையாற் கம்ஸவதத் திற்குப் பிறகு எல்லோருக்கும் ஸேவை தந்தது வேறு விஷயம். அவனைத் தன்னைக் காட்டும்போது ஏன் என்று யார் கேட்பது?

அர்ச்சாமூர்த்தியாகிய பெரியபெருமாள் எல்லோருக்கும் தன்னை உள்ளபடி காண் பிப்பதில்லை. தெரியக்காணும் திருப் பாணருக்கு நான்கு திருக்கரத்துடனும், ஏனையோருக்கு இரண்டு திருக்கரங் களுடனும் ஸேவை தருகிறார். உத்ஸவ மூர்த்தியாகிய நம்பெருமாளோ வரை யறையின்றி எல்லாருக்கும் நான்கு திருக் கரங்களுடன் ஸேவை தருகின்றார். கம்ச வதத்திற்கு முந்தைய கண்ணன் நிலை பெரிய பெருமாளது. பிந்தைய நிலை நம் பெருமாளது என்க.

இனி அர்ச்சாமூர்த்தியின் தோற்றத்தில் மாத்திரமன்றி அங்கிலையில் எம்பெரு மானது எழிலை மாந்தி மகிழ்வதும், என்றேனும் பாணர் போன்றோருக்கே வாய்ப்ப தொன்றும். 'கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடிய அப் பெரியவாய கண்கள்' நமக்குத் தெரி வதில்லையே! பச்சை மாமலைபோல் மேனி யும் பவளவாயும் கமலச் செங்கண்ணும் நம் கண்ணிற் படவில்லையே. பொய்யில் பாடல்கள் முன்னோரின் அநுபவத்தை விளக்குவன அல்லவா?

இங்ஙனம் ஏனைய திருமேனிகளை விட எவ்வாற்றானும் சிறப்புடைமை பற்றியே, மயர்வறமதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார் கள் அர்ச்சா மூர்த்தியைத் தங்களுக்குத் தஞ்சமாகக் கொண்டு போற்றி வீட்டின்பம் எய்தினர். "திருவேங்கடத்தானே உன் னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்று சரணடைந்து வழுவிலாவடிமை செய்ய வேண்டும் எனப் பாரித்த நம்மாழ்வார் 'அவாவற்று வீடுபெற்றதாகத்' தாமேகூறிக் கொள்வது காண்க. இதனால் முத்தியின் பத்தையும் தரவல்லது அர்ச்சா மூர்த்தி என்பதைக் கண்டறிந்த நாம், ஏனைய நலன் களையும் நமக்கு அது நல்கவல்லது எனத் துணிதற்குத் தடை உண்டோ?



இந்திரதீர்த்தத்தில் தெப்போற்ஸவம்
(திருவண்ணாமலை)

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ., பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8.)

முன் கட்டுரையில் கண்களில் வரும் வியாதிகளைப்பற்றியும், அவைகளுக்கு இயக்க வேண்டிய மருந்துகளைப்பற்றியும் எழுதினேம்.

மூக்கு: இப்பொழுது மூக்குக்குள் வரும் வியாதிகளைப் பற்றியும், அதற்குரிய எளிய மருந்துகளைப் பற்றியும் இங்கு ஆராய்வோம். லௌகிகத்திற்குக் கண்கள் எவ்வளவு அவசியமோ, அந்த அளவுக்குப் பல மடங்குகள் அதிகமாய்ப் பராபரத்தை யடையும் மார்க்கத்திற்கும் உடலை வன்மையாய் வைத்திருப்பதற்கும், மூக்கு வெகுவெகு முக்கியத்துவம் வாய்ந்தது. நம் உடலிலுள்ள தசநாடிகள், வாத, பித்த, சிலேத்துமமென்னும் மூன்று நாடிகளாகப் பரிணமித்துள்ளன. இந்த மூன்று நாடிகளுக்கும் ஆதாரம் இடகலை, பிங்கலை, சுழுமுனை என்பனவேயாகும். பூதங்களாலான இந்த உடலில் வாயுவின் சக்தியில்லையேல் ஒரு நொடியில் உயிர் போய்விடும். சுவாசங்களை நாம் மூக்கிஞலேயே இயக்குகிறேம். இந்த சுவாசங்கள் முறையோடு இயங்கவேண்டும். இவ்விதம் இயக்கப் பழகுதலும் அவசியமாகும்.

உடலில் உண்டாகும் கணக்கற்ற நோய்கள், இந்த சுவாசங்களிற் கோளாறு உண்டாகும் போது உண்டாகின்றன. பிராணவாயுவை நாம் எந்த அளவுக்கு உட்கொள்ளுகிறேமோ, அந்த அளவுக்கு நம் இரத்தம் பரிசுத்தமாகிறது. இரத்த ஓட்டமும் அளவுடன் இயங்குகிறது. மூச்சு இரண்டு வழிகளால் இயங்கும்படி நம் உடல் அமைந்துள்ளது. ஒன்று மூக்கிஞல்; மற்றென்று வாயிஞல். இந்த இரண்டினுள் வாயிஞல் சுவாசிப்பவர்களின் உடல் பலவீனப்படும்; பலவித வியாதிகளைக் கிரகிக்கும் தன்மையை உண்டாக்கும். மூக்கிஞல் சுவாசிப்பதஞல் பலவித அணுக்கள் மூக்கினுள்ளிருக்கும் வடிப்பு முடிகளால் தடங்கலாகி, சுத்தமான காற்று உள்ளே செல்லும். ஆஞல் வாயிஞல் சுவாசிப்பது மேற்சொன்ன நன்மைக்கு மாறுபாடாகும். ஆயுளும் குறையும். மனிதன் சுவாசிக்கும் காலத்தில் பன்னிரண்டு அங்குலம் சுவாசம் உள்ளிருந்து வெளியே போய்விடுகிறது. இந்த அளவை நாம் எந்த அளவுக்குக் குறைக்கின்றேமோ அந்த அளவுக்கு ஆயுள் பெருகும்.

போகர் என்னும் சித்தர் சொல்வதைப் பாருங்கள் :—

"பார்க்கையிலே அகத்தியமா முனியே கேளு !
பன்னிரண்டு அங்குலந்தான் பாயும் போது,
ஏர்க்கையிலே் சந்திரன்தான் நாலும் போச்சு !
என்மகனே தேகமுந்தான் இறந்து போகும்;
கார்க்கையிலே நாலையுந்தான் எட்டில் சேரு !
கங்குல் பகலொன்ருக் கலந்து போகும் ;
மார்க்கமதை அறியாமல் மனிதர் தாமும்
மாண்டிறந்து போவதற்கு வருந்து வாரே !

இந்தச் சுவாசங்களைத் தன்வயப்படுத்தி ஆயுளைப் பெருக்கத் தவயோகிகளின் அருள் வேண்டும். பிராணுயாமம் முதலிய யோகங்களைச் செய்யக் குருமகான்களின் உபதேசம் வேண்டும். அதைக்காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தது வாசிப்பழக்கம். "வாசி" என்ற சொல்லைத் திருப்பிப் படித்தோமாஞல் "சிவா" என்றுகிறது. அதையே சரப்பயிற்சி யென்றும் சாதாரண மக்கள் கூறுவர். "வாசி" "சரம்" என்னும் பழக்கங்கள் எல்லோருக்கும் கிட்டுதல் அரிது. உத்தமர்களுக்குத்தான் உண்மை வாசி இன்னதென்று குருமுகமாய்த் தெரிவிக்கப்படும். சரப்பழக்கமும் அப்படியேதான். அதஞலேயே பெரியோர்கள் 'சரம்பார்ப்போன் பரம் பார்க்கக் கூடும்' என்றனர்.

ஒரு நிமிடத்திற்கு மனிதன் 15 மூச்சுக்கள் விடுகிறுனென்றும், ஒரு நாளைக்கு (15 × 60 × 24) 21,600 சுவாசங்கள் செலவழிவிடுகிற தென்றும், இந்தக் கணக்கின்படி மனிதன்

120 வருடங்கள் உயிர் வாழுகிறுனென்றும் நிர்ணயித்தனர். ஆகவே, எந்த அளவுக்கு நாம் சுவாசத்தை ஒருமுகப்படுத்துகிருேமோ, அந்த அளவுக்கு நம் ஆயுளும் பெருகும்; மெய்ஞ்ஞானம் அடைய வாய்ப்பும் உண்டாகு மென்பது மேலோர் கருத்து. இதற்குத் திரு மூலர் திருமந்திரத்தில் பல ஆதாரங்கள் உள்ளன. அவைகளை இங்கு எழுதுவதானல் பல பக்கங்கள் பெருகிவிடும்.

சுவாசங்கள் செலவாகும் வழிகள் பல. சாப்பிடும்போதும், வாந்தி செய்யும்போதும், சுவாசம் 18 அங்குலங்கள் வெளியே தள்ளப் படுகின்றன. நடக்கும்போது 24 அங்குலங் கள்; ஓடும்போது 42 அங்குலங்கள், பெண் புணர்ச்சிக் காலத்தில் 50 அங்குலங்கள் சுவாசத்தில் வீணுகிவிடுகின்றன.

இந்தச் சுவாசங்களை வீணுக்காமலிருப் பதற்கே யோகிகள் மௌனம் சாதித்து இருந்த இடத்திலேயே அமைதியை யெய்தினர். இப் பழக்கங்களின் காரணமாய்ச் சுவாசம் தாணுகவே பந்தித்துப் பல சித்திகளையும் பெற்றனர். ஆனல் சுவாசத்தைச் செயற்கை மூலமாய்ப் பந்திப்பதோ, உள்ளும் புறமும் இழுத்து விடுவதோ அறவே கூடாது. சிலர் ''கர், கிர்'' என்று ஒலி எழுப்பி வாசியோகம் பயில்கின்றனர். இது தவறென்று சித்தர்கள் கண்டிக்கின்றனர். வாசிப்பழக்கமென்பது தாணுகவே சுவாசம் லயிப்பது. இப்பழக்கத் தைக் குரு மூலமாகவே பெறவேண்டுமென் பதை மேலே வற்புறுத்தியுள்ளோம். ரேசகம், பூரகம், கும்பகமென்னும் இம்மூன்றும், இயற்கையாகவே அமைதல் வேண்டும்.

ஆகவே, நாம் ஞானம் பெறவும், பரத்தை அறியவும், நமக்கு மூக்கும், அதனுள் இயங் கும் சுவாசமும், எந்த அளவுக்கு முக்கியம் வாய்ந்த தென்பதை நாம் அறியலாம். மூக்கினுள் சுவாசம் பல காரணங்களால் அடைபெறும். சிலருக்கு அடிக்கடி மூக் கடைத்து விடும். சிலருக்கு மூக்கினுள் தசை வளர்ந்து சீழும் இரத்தமும் வரும். மற்றும் சிலருக்கு மூக்குப் பொடிபோடு வதால், ஒருவித சொல்லமுடியாத துன்பம் உண்டாகும். இவைகளுக்காக ஆங்கில மருத்துவர்கள், நம் மூக்குக்குக் கொடு மையை விளைவிக்கின்றனர். மூக்கினுள் (Puncture) பழுத்த மின்சாரக் கம்பிகளினல் சுடுகின்றனர். ஆனல் பலன் கிடையாது. மறுபடியும் பழையபடி மூக்கடைப்பும், சதை வளர்ச்சியும் உண்டாகின்றன. ஒரு செடி வளரவேண்டுமானல் வேரில் தண்ணீர் ஊற்றவேண்டும். அதன் இலைகளில் தண்ணீர் தெளித்து வந்தால், அச்செடியின் கதி என்ன வாகுமோ அதேபோலவேதான் ஆங்கில மருத்துவமும் நடைபெறுகிறது. மூக்கினுள் அவ்வித வியாதிகள் வருவதற்கு மூல காரணங் களை, அவர்கள் ஆராய்ந்தாரில்லை. வயிற்று வலி யென்றவுடனே கத்தி முதலிய பயங்கரக் கருவிகளை எடுத்துக்கொண்டு, ஆடம்பரமான உடைகளை உடுத்திக் கொண்டு வயிற்றை இரண்டாகப் பிளந்துவிட்டு, உள்ளே ஒரு குற்றமுமில்லையென்று அறிந்து திருப்பி மூடி விடுகிருர்களென்பதை, நாம் கேட்டும் பார்த்துமிருக்கிருேம். வயிற்றைத் திறந்து விட்டோமே என்னும் காரணத்தால் சிலர் சிறுகுடல், பெருங்குடல் சந்தியிலிருக்கும் ஓர் முக்கியமான அவயவத்தை (Appendix) வெட்டிப் பிறகு மூடிவிடுவதை ஒருவித சிகிச்சையாகக் கையாளுகின்றனர். அம் மருத்துவர்களை நான் குறை கூறவில்லை. அவர்கள் மருத்துவமே அந்த அளவுக்குத்தான் மேலோங்கியுள்ளது. ஆனல், மக்கள் அம் மருத்துவத்தை விஞ்ஞான மருத்துவம் (Advanced Science) என்று சொல்லும்போது, நரக வேதனையை அனுபவித்த நோயாளிகள் கண்ணீர் விடுகின்றனர்.

ஆகவே நாம் செய்யவேண்டியதென்ன? மூக்கில் அடைப்பு வந்ததற்குக் காரண மென்ன? தசையினலென்ருல், ஏன் அந்தத் தசை அங்கு வளர்ந்தது என்னும் ஆராய்ச்சி யை, நாம் நடத்துதல் வேண்டும். தசையை அந்த நேரத்துக்கு அறுத்துத் தள்ளிவிட்டால், தசை வளருவதற்குரிய மூல காரணங்களை நாம் அறுக்கவில்லை! கழுத்தின்மேல் வருகிற வியாதிகளெல்லாவற்றிற்கும் உச்சிதான் மூல காரணமென்று நம்சித்தர்கள் சொல்லலாயினர். அந்த உச்சியைப்பற்றி நாம் இதற்குமுன் இந்த இதழ்களில் எழுதியுள்ளோம். உச்சியின் பேதங்களால் எப்படி மூக்கினுள் வியாதிகள் உண்டாகின்றன வென்பதை வரும் கட்டுரையில் ஆராய்வோம்.

(தொடரும்)

# திருக்குறட் சிறப்புரை நயம்

கவியோகி மகரிஷி திரு சுத்தானந்த பாரதியார்.

[கவியோகி திரு.சுத்தானந்த பாரதியார், 1952-ஆம் ஆண்டு பேங்காக்கில்(Bankok) ஒரு மாதம் தங்கிக் கம்பராமாயணம் பற்றியும், திருக்குறள் பற்றியும் அஸ்ஸாமியப் புலவர் சங்கத்தில் பேசினுர். அஸ்ஸாமிய அமைச்சர் தமிழில் ஈடுபட்டவர்; திருக்குறள் அன்பர்! அவருக்குத் திருக்குறளின் சிறப்பினிமையைச் சுத்தானந்தர் விளக்கி மகிழ்வித்தார். அந்த விளக்கத்தின் சில பகுதிகளைத் 'திருக்கோயில்' இதழின் அன்பர்களுக்குத் தந்து உதவுகின்றோம். அன்பர்கள் இதனை ஊன்றிப் படித்துத் திருக்குறள் ஆர்வமும் அறிவும் பெறுவார்களாக !

— ஆசிரியர்.]

**(1) அகர விளக்கம் :**

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

(1). எழுத்து எல்லாம் என்பது தமிழை மட்டும் குறித்ததன்று. உலக மொழிகளில் எல்லாம் அகர வொலியே முதல். ஜப்பான் எழுத்திலும் முதலில் அ. உருதிலும் அலிஃப் முதல் எழுத்து. தமிழ் அகரம் ஒலிக்கு முதல் மட்டுமன்று, பன்மொழிகளின் வரிவடிவங்களையும் தன்னுட்கொண்டது. இதை விளக்குகிறேம்.

தமிழ் அகர எழுத்தின் வடிவ அமைப்பையே, வடமொழி இந்தி தெலுங்கு உருது வங்கம் ஜப்பானியம் ஆங்கிலம் ஆகிய மொழிகளின் முதலெழுத்துக்களின் வடிவ அமைப்புக்களும் பெரிதும் ஒத்திருத்தலை, அறிஞர்கள் நுணுகி நோக்கி உணரலாம். இவ்வாற்ருல் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று திருவள்ளுவர் அருளிச் செய்ததன் பொருத்தம் புலனுகும்.

(2). 'அட்சராணும் அகாரோஸ்மி' என்பது கீதை. ஜரதுட்டிரர் கடவுளை அகரன் என்பர், (அகரமசதன்). அகரம் என்பது அழியாப் பொருள். தமிழில் அகரத் தொடக்கமான சொற்கள் மிக இனியன— அன்பு, அறம், அருள், அம்மா, அப்பா அண்ணு, அழகு, அமைதி, அறிவு—முதலியன காண்க.

(3) குழந்தை பிறந்ததும் அ ஆ என்றே அழுகிறது. இறுதி மூச்சுப் போம்போதும் 'அ' தான் ஒலிக்கின்றது. ஒரு வியப்பைக் குறிக்கவும் 'அ' என்கிறேம். உணர்வுகளுக்கு முன்னிற்பது அகரம்.

(4) ஓம் என்பது மறையொலி. அ+உ+ம்=ஓம். ஓமின் தாய் ஒலியும் அகரம். ஜப்பானியர் அஓ என்றே ஓலமிடுவர். முதற் குறளில் அ+உ+ம்=ஓம் அடங்கியுள்ளது. 'அகர மு(ம்+உ)தல எழுத்தெல்லாம்' என்பதில் ஓம் அடங்கும்.

**2. ஒருமை எழுமை :**

"ஒருமையுள் ஆமைபோல்
ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

**(1). இதே கருத்து கீதையில்,**

"யாதாஸம் ஹரதே சாயம்
கூர்மோங்கானீ வஸர்வஸ,"

என்ற பாட்டில் உள்ளது. ஆமைபோற் புலன் ஐந்தும் அடக்குவது இதன் பொருள். (2). எழுமை என்பதை ஏழ் பிறப்பு என்று பலர் பொருள் செய்வர்; புலனடக்கிய முனிவருக்குப் பிறவியில்லை. எழுமை என்பதற்கு இயல்பான பொருளைக் குறிப்போம்.

(3). 'ஒருமை'—புலனை—மனதை ஒருகூருக்குதல். ஒருமை என்பதே ஓகம் - உகம்-யோகம் என வரும். யோகம் என்பது ஓகம் என்று தமிழ்மொழியில் வழங்கும்: ஓகம் உகுதல். உயிரும் இறையும் இரண்டறக் கலத்தல் என்னலாம். ஒருமை என்பது உள்ளடங்கிய யோக நிலை.

(4). எழுமை என்பது மனமும் புலனும் எழுந்து உலகில் திரியும் நிலை. ஐம்புலனும் ஆமையின் ஐந்துறுப்பென அடங்கினுல், மனம் எழுந்து (எழுமை) உலகில் பல வினைகளில் ஈடுபட்டாலும் உள்ளம் கலங்காமல் ஏமாப்புடன்—மகிழ்ச்சியுடன் இருக்கும். ஒருமைக்கும் எழுமைக்கும் ஐந்தடக்கலே முதன்மை. அடங்கிய யோகி, யாங்கும் அமைதி காண்பான்.

'ஆற்றின்' என்பது ஐம்புலனடக்கம் அரிது, அப்படி அடக்க முடிந்தால் ஒருமை-எழுமை அனைத்திலும் இன்பமாகும் என்பதாம்.

**(3) உள்ளம் உள்ளது :**

ஓர்த்துள்ளம் உள்ளது
உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

இக்குறளில் யோகப் பயிற்சி முழுதும் அடங்கியுள்ளது. யோக நிலையம் உள்ளம். உள்ளம் பெருங்கோயில். உள்ளமே திருப்பெருந்துறை—உள்ளம் என்பது Psychic மெய்யுணர்வின் நிலையம் - உள்ளத்தனையது உயர்வு; உள்ளம் உடைமை உடைமை என்பதன் பொருள் (Psychic-consciousness is real worth of man) உள்ளுணர்வே சிறந்த செல்வம் என்பதாம். உள்ளத்தையே இறைவனுகவும்; இறைவனை உறையுளாகவும் அப்பரும், ஆழ்வாரும் கூறுவர்.

"உள்ளமே, உள்ளத்தின் உள்ளேயுள்ள கருவே"
(அப்பர்)

"வெள்ளத்தில் உள்ளானும் வேங்கடத்தில்
உள்ளானும்
உள்ளத்தில் உள்ளானென்றோர்—"
(ஆழ்வார்)

"உள்ளம் உள்ளதுன் உண்மை—அதுநீ"
—சங்கரர்

"நான் ஆன்மாவாக அனைவர் உள்ளத்தும்
உள்ளேன்"
—கண்ணன்.

இந்த உள்ள பொருளை உணர்வதுதான் யோகம்.

அதை உணர ஒருதலையான சமாதி நிலை வேண்டும்.

சமாதி என்றால் சீவனும் சிவனும் இரண்டறக் கலந்து ஒருதலையாயிருக்கும் ஒருமை நிலையாம்.

இந்த ஒருதலை நிலைமை பெறும் வழியே ஓர்ப்பு - ஓர்தல். ஓர்தல் என்பது உள்ளே நான் யார் - என் உள்ளம் யார் — ஞானங்கள் யார் என்று ஆராய்தல் - ஆத்ம விசாரம் செய்தல் அல்லது தியானித்தல்.

'ஓர்தல்' ஒருதலை உறுதிதரும். ஓர்தல் என்பது, புலன்களை அடக்கி, மனதை ஒருகூருக்கித் தியானித்தலாம். பேர்த்தல் என்பது, மனம் தனது நிலைமை விட்டுப் புலன் வழியே திரிதலாம். அப்படி மனம் திரிந்தால் சங்கற்பவிகற்பங்களும் இருவினைப் பாசங்களும் உள்ளே குவிந்த உள்ளத்தை மாசுறுத்திப் பிறவிக்கு வித்தாகும். இக்குறளில் இராசயோகமும், சித்தாந்த சாதனமும் தெளிவாகக் கூறப்படுகின்றன.

(1) 'உள்ளம்' ஆன்ம நிலையம்—உயிரின் இருக்கை.

(2) 'உள்ளது' அதில் என்றும் காந்தமும் ஊசியும் பொன்னும் மணியும் போல ஆன்மாவுடன் கலந்து நிற்கும் உண்மைப் பொருளான, மெய்ப்பொருளான இறைவன்.

(3) அதை உணர்வது—சத்தினிபாதம் பெற்றுச்சீவசைதன்யம் சிவசைதன்யமாக உணர்வதாகும். உணர்வது—அதே அறிவாக நிற்பது.

(4) ஓர்த்து—அவ்வாறு உள்ளுணர்வில் தோய்ந்து நிற்கப் பயிற்சியாவது—உள்ளாராய்ச்சி—தியானம். நானுர்? சீவன் ஏது? சிவம் எது? என்று உள்ளே விசாரிப்பதாகும்.

(5) இவ்வாறு உள்ளுணர்வில் ஒருங்கித் தன்னையும் தலைவனையும் அறிதலே பிறப்பிறப்பற்ற சீவன் முத்திக்கு வித்தாகும்.

(6) அவ்வாறின்றி மனம் உள்ளுறுதியின்றிப் பெயர்ந்து, நிலைவிட்டு அலைந்தால் பிறவிக்குப் பிறவி நாமும் அலைவோம்.

**(4) அன்பின் வழி, (பக்தியோகம்) :**

"அன்பின் வழிஅது; உயிர்நிலை;
அஃது இலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

இதில் ஆழ்ந்த பக்தியோகக்கருத்து அடங்கியுள்ளது.

(1) அன்பின் வழி—பதியன்பின் வழியைப் பின்பற்றிஞல்.

(2) அது—அது (தத்) என்று வேதாந்த சித்தாந்த தத்துவங்கள் குறிக்கும் சிவத்தை—கடவுளை அடையலாம்.

(3) உயிர்நிலை — அதுவே உயிருக்கு நிலைக்களமாகும். உயிரும் உயிர்ப்பும் உள்ளுணர்வின் எழுச்சி. உள்ளத்தில் உள்ளபொருள் அது — சிவம். அதை அடையும் வழியும் அன்பு; அதுவும் அன்பு. 'இன்பமே என்பெரும் அன்பே' என்ருர் மாணிக்கவாசகர்.

(4) அஃது இல்லார்க்கு—அந்தப் பதியன்பு இல்லாதவருக்கு—

(5) 'என்பு தோல் போர்த்த உடம்பு' இம்மானிட உடலானது எலும்பும் தோலும் போர்த்த வெறும் சடம்ஆகும்—சவமாகும்; மூச்சுப்பிணமாகும். உடம்பு-சவம்; அதில் உள்ளது சிவம்; அதனுல் அஃது உயிர்க்கிறது. இந்தச் சவத்திற்கும் சிவத்திற்கும் தொடர்பூட்டுவது அன்பு.

**(6) அன்பிலது :**

"என்பில் அதனை வெயில்போலக் காயுமே,
அன்பில் அதனை அறம்"

'அறம்' என்பது அறு + அம்; பாசத்தை அறுத்துப் பதியை உணர்த்தும் அருட்சக்தியாகும். அந்தச் சக்தியைத்தருவது அன்பு — அன்பினுல் சீவன் சிவமணம் பெறும். அன்பில்லாத மனிதன் என்பில்லாத புழுப்போல்வான். அவன் உடம்பும் மனமும் உறுதி பெருவாம். அன்பு வழியே அறநெறி, இறைநெறி. அன்பற்ற சீவன் எலும்பில்லாப் புழுப்போலும். அதனை ஆணவம், மாயை, கன்மம் ஆகிய (மாயை — வெய்யில். வெம்மைக்கு இல்லானது — மாயை) பிறவித் துயரில் போட்டுவாட்டும் — அன்பு இல்லாதவன் புழுப்போல்வான். அன்புதான் உயிரும், உயிரின் நிலைக்களமும் ஆகும்.

**(6) கற்ற கல்வி :**

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

(1) இங்கே ஒருமை—எழுமை என்ற இரண்டு நிலைகள் உள்ளன. ஒருமை நிலை யோகம். எழுமைநிலை மனம் எழுந்து உலக வாழ்வில் புகுவது.

(2) 'ஒருமைக்கண்' மனம் ஒரு கூருகி யோகத்தால், உள்ளொருமையால்,

(3) தான் கற்ற கல்வி : உள்ளார உணர்ந்து கற்ற பதியறிவு

(4) உள்ளே கற்ற கல்வியையே அப்பர்,

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்" என்கிருர்.

(5) இந்த உட்கல்வியையே சுந்தரர்

"கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூர்"
என்கின்ருர்.

இந்தக் கல்வியினுற் பெறும் பயன் என்னே ?

"மற்றுப் பற்று எனக்கின்றி நின்
திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்
பிறவாத தன்மை வந்தெய்தினேன்"

என்பதாம்.

பிறவாநெறியில் உய்ப்பதே உட்கல்வி; இதையே பரவித்தை; அத்யாத்மஞானம் என்பர் — "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி" எனத் திருவள்ளுவர் பிறிதோர் இடத்திற் கூறுதல் காணலாம். இந்த உட்கல்வியாளருக்கு மனம்எழுந்து உலக வாழ்வில் ஈடுபட்டாலும் உள்ளின்பம் மாரு திருக்கும். ஏமம் என்பது உள்ளின்பம். ஈமத்திற்கு ஏகாத ஏமசித்து.

## (7) வாழ்வாங்கு வாழ்தல்:

"வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

(1) வள்ளுவரின் உட்கருத்து மிக வுயர்ந்தது. அது மனிதனே இவ்வுலகில், இவ்வுடலுடன் இறைநிலை, தெய்வத் தன்மை பெற்று வாழச் செய்வதாகும். அதற்கு உள்வாழ்வு வேண்டும்.

(2) வையத்து — உலகத்தில்; உள் வாழ்வு ஆங்கு வாழ்பவன்—உள்ளத்தில் உள்ள இறைவனுடன் உயிர் கலந்து வாழும் யோகி, ஞானி, சீவன்முத்தன்.

(3) வான் உறையும் — சிதாகாசத்தில் ஒளிர்ந்திலகும்.

(4) தெய்வத்து உள் வைக்கப்படும்— உள்ளம் கலந்து சிவங்கலந்து பதிவாழ்வு வாழும் சீவனே—சிதாகாசப் பெருமானுன சிவபிரான் தன் உள்ளத்தில் என்றும் வைத்து இனிது அருள்புரிவான். ஆன்மா உள்வாழ்வுடன் இங்கே-இதயங்கூடிவாழ்ந் தால் சிதாகாசத்தில் விளங்கும் சிவம் தன் உள்ளத்தில் அச்சீவனே வைத்து—விஞ் ஞானுகலனுக்கி மெய்யறிவின்பம் அளிப் பான்—என்பதாம்.

## (8) தோன்றல் தோன்ருமை:

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை நன்று."

'தோன்றின்' என்பதைப் பிறப்பெடுத்தல் என்று பலர்பொருள் செய்கின்றனர்.

தோன்ருமை என்ருல் பிறவாமை என் கின்றனர். பிறவி அல்லது பிறவாமைக்குச் செல்ல வேண்டியதில்லை—கருத்து எளிது.

(1) தோன்றில் — ஒரு பணிநலத்தைப் புரிய முன்வந்து தோன்றினுல்—

(2) புகழொடு–உலகம் புகழும்படியான தயாரிப்புடன், மனத்தில் முழுப்பயிற்சி யுடன் புலமைபெற்று—

(3) தோன்றுக — வினைத்திட்பத்துடன் செயலாற்ற முனைக.

(4) அஃது இலார்—உலகம் புகழ்ந்து போற்றத்தக்க பக்குவமோ, பயிற்சியோ, புலமையோ, திறமையோ, மனத்திட்பமோ, வினைத்திட்பமோ இல்லாத அரைகுறை ஆட்கள்

(5) தோன்றலின் — பலர்முன் "யாம் செய்வோம்" என்று மார்புதட்டி வருவதை விட

(6) தோன்ருமை — அடக்கமாக, உள்ளடங்கி நான் என்ற முனைப்பில்லாமல் ஒடுங்கியிருத்தல்(தமது குறைகளை அறிந்து பயிற்சி பெற்றுவருதல்),

(7) நன்று–அவர்களுக்கும் நல்லது; உலகுக்கும் நல்லது.

'அடக்கம்அமரருள் உய்க்கும்'; 'பணியு மாம் என்றும் பெருமை'; 'என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு நன்றி பயவாவினை'; 'அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்ரு கெடும்'. அளவறிந்து, அறிவறிந்து, திறனறிந்து உலகிற் புலமையுடன் தோன்றினுல் புகழும் உண்டாகும்.

## (9) பெய் எனப் பெய்யும் மழை:

தெய்வந் தொழா அள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை—

இதற்குத் தெய்வத்தைத் தொழாது கணவனையே வணங்கி எழுவாள் என்று பலர் உரைகோலினர்.

வள்ளுவர் ஆதிபகவன்முதற்றே உலகு-வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்—என்று கடவுளுக்கே முதன்மை தருகிறார். அத் 'தெய்வப்புலவர்' தெய்வந்தொழுகையை ஒருக்காலும் மறுத்திருக்க முடியாது. ஆதலால் இக்குறளுக்குப் பொருள் இவ்வாறும்: கற்புடைய மனைவி கணவனுக்கு முன்பே துயிலெழுந்ததும் ("பின் தூங்கி முன்னெழுந்த பேதையே") கணவனை வணங்குவாள்—பிறகு தனது நாட்கடனைச்செய்ய எழுந்திருப்பாள். பிறகு குளித்து, மடியுடுத்தே தெய்வத்தைத் தொழுவாள் — முதலில் கணவனைத் தொழுது, பிறகு ஆசாரமாகக் கடவுளைத் தொழுவாள். எழுந்ததும் விழிப்புடன் தெய்வத்தை வணங்க மாட்டாள். தனது கணவனைத் தொட்டுக்கும்பிட்டே, நாட்-கடனைத்தொடங்குவாள். தூயபண்புடன், உணவு தயாரித்து வழிபாடு நடத்தும் போது, பூசை செய்யும்போது, தெய்வந் தொழுவாள் என்பது கருத்து.

"மாதர் தம் கற்பின் நின்றது கால மாரியே" என்கிறார் கம்பர். மாதர் கற்பொழுக்கத்தால் அறம் வளரும். அருள் ஒளிரும், வானம் இரங்கி மழை பொழியும். இதுவும் பொருளாகும். எனினும் இந்த இடத்தில் வேறு பொருத்தமான பொருள் உண்டு. "பெய்" என்றதும் மழை பெய்தால் உலகு எவ்வளவு வளம் பெறும்—அதற்கே 'தருண மழை' என்பர்—கணவனைத் தொழுதே அவன் 'பூசெய்' நடத்தும்போது தெய்வம் தொழும் கற்பரசி தருண மழைக்குச் சமானமாவாள். அவள் இல்லறத்தையும், கணவன் வாழ்வையும் வளஞ்செய்வாள்—என்பதே கருத்தாகும்.

இவ்வாறு ஒவ்வொரு குறளுக்கும் 'உட் கருத்து' உண்டு. *

## மதிப்புரை

தமிழ், அன்றும், இன்றும் ;


இந்நூல், மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர் திரு மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தில், டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில், ஆற்றிய சொற்பொழிவுகளின் (4, 5—4.66) தொகுப்பாக அமைந்ததாகும். மக்களும் மொழியும், சங்கம் வளர்த்த தமிழ், இலக்கியங்களைப் பற்றிய புனைந்துரைகள், தொல்காப்பியம், ஏடும் எழுத்தாணியும், மறைந்த புதையல்கள், மொழிமரபுகளுட் சில என்னும் பல உட்டலைப்புக்கள், இந்நூலை அணி செய்கின்றன. சுவைமிக்க சிறந்த நல்ல நூல். தமிழ்அன்பர்கள் பலரும் படித்துப் பயன் கொள்ளத் தக்கது. 80 பக்கங்கள்: விலைரூபா 1-25/- கிடைக்குமிடம்: தமிழியல் மன்றம், 244—245 அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

## மாசி மகப் பெருவிழா.

1. திருக்கடம்பந்துறை, ஸ்ரீ கடம்பவனேசுவரர் கோயில், (4—3—68—15—3—68)
2. திருவல்லம், ஸ்ரீவில்வநாதேசுவரர் கோயில். (2—3—68—23—3—68)
3. கருவூர், தான்தோன்றி ஸ்ரீ கல்யாண வேங்கடரமணசுவாமி கோயில். (4—3—68—17—3—68)
4. திருத்தணிகை, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் (3—3—68—14—3—68)
5. சிவகங்கை தேவஸ்தானம், மதுரை இம்மையிலும் நன்மை தருவார் கோயில். (1—3—68—14—3—68)
6. தாராபுரம், கொசவலசு ஸ்ரீ திருமலைசுவாமி கோயில், யுகாதிப் பெருந்திருவிழா. (25—3—68—31—3—68)
7. சென்னை, ஸ்ரீ சென்னமல்லீசுவரர் கோயில் (4—3—68—17—3—68)
8. சென்னை, ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் கோயில், (4—3—68—21—3—68)
9. சென்னை திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் (4—3—68—25—3—68)
10. அவிநாசி ஸ்ரீ கருணாம்பிகையம்மன் கோயில், தேர் வெள்ளோட்ட விழா (4—3—68)

## திருக்குடமுழுக்கு விழா.

1. இராயவேலூர், வேலப்பாடி ஸ்ரீ சித்திபுத்திசமேத வரசித்தி விநாயகர் கோயில். (3—3—68)



திருவண்ணாமலைக் கோயில் தோற்றம்.

# பக்தி யுணர்வு

மனித வாழ்க்கை உணர்வுகளாலும் எண்ணங்களாலும் உருவாகின்றது. மனிதன் பலவகை உணர்வுகளின் நிலைக் களனாக விளங்குகின்றான். மனிதனுக்குரிய உணர்வுகள் நனிமிகப் பல. அவைகள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்த ஒன்றாய்த் திகழ்வது, பக்தியுணர்வு.

வாழ்க்கையின் பலவேறு வகையான துன்பங்கள் தொல்லைகள், குற்றங்குறைகள், நிலையில்லாத தன்மை, வியத்தகு நிகழ்ச்சிகள், எதிர்பாரா விளைவுகள், பற்பல மாறுதல்கள், ஆகியவற்றை எல்லாம் கூர்ந்து நோக்கி ஓர்ந்து உணருந்தோறும், நமக்குத் தெய்வம் ஒன்று உண்டு என்னும் உணர்வும் தெளிவும் ஏற்படாமல் இருத்தல் இயலாது.

இவ்வுலகில் உள்ள சூரியன், சந்திரன், பரந்த வானப் பெருவெளி, அங்கு ஒளிரும் எண்ணற்ற விண்மீன்கள், கடல்கள், மேகங்கள், ஓங்கி உயர்ந்த மலைகள், நெருப்பும் காற்றும் போன்ற முதற்பொருள்கள், மற்றும் எத்தனையோ சரம் அசரம் என்னும் இயங்கியல் நிலையியற் பொருள்கள், என்பனவற்றின் இயல்பை எல்லாம் எண்ணிப் பார்த்தால், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்வு நமக்குத் திண்ணிதின் உதிக்கும்.

உலகப் படைப்பும் இயற்கையும் எத்துணை வியக்கத் தக்கனவாக இருக்கின்றன! சூரியன் காலையிலும், சந்திரன் மாலையிலும், விண்மீன்கள் இரவிலும், தத்தம் ஒழுங்கு முறைகள் தவறாமல் ஒளி வீசி உழன்று கொண்டு வருகின்றன. பரந்த பெருங்கடலின் நீரை முகந்து கொண்டு, பல இடங்கட்கும் பரவிச் சென்று, மேகங்கள் மழை பொழிந்து பயிர்களை வாழ்விக்கின்றன. கடல் தன் எல்லையிற் கடந்து பொங்கிவிடாமல், ஒரு வரம்பிற்குள் அடங்கி நிற்கின்றது.

காலம் என்பது, பகலும் இரவுமாக மாறி மாறி வருவதுடன், இளவேனில் முதுவேனில் கார்காலம் குளிர்காலம் முன்பனிக் காலம் பின்பனிக்காலம் எனப் பலவேறு பருவங்களாகவும் அமைந்து, அவ்வக் காலங்களுக்கு ஏற்ற செடி கொடி வகைகளை வளர்த்தும், நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்தும், காய் கனி பயிர் வகைகளை அளித்தும், உதவி புரிந்து வருகின்றது.

பாம்பு முதலிய நச்சு உயிர்கள், மந்திரம் முதலியவற்றுக்குக் கட்டுப்பட்டு வசமாகின்றன. உயிர்க்கூட்டங்கள் தம்முடைய இனவளர்ச்சியுற்றுப் பெருகி, வழிவழியே தம் பண்புகள் மாறாமல் விளங்கி வருகின்றன. இங்ஙனமே மரஞ் செடிகொடி இன வகைகளில் ஒவ்வொன்றும், தமக்கென ஒவ்வொரு தனித்தனி அமைப்பும் பண்பும் பயனும் பெற்றுத் திகழ்கின்றன.

மக்களில் சிலர், குருடு செவிடு ஊமை முடம் முதலிய குறைபாடுகள் உடையவர்களாக உள்ளனர். ஒரு சிலர் தீராப் பிணியாளராயும், மற்றும் சிலர் காண்பதற்கே அருவருப்பை விளைவிக்கும் குரூபிகளாகவும் உள்ளனர். வேறு சிலர் பெருஞ் செல்வராக விளங்குகின்றனர். ஒரு சிலர் வறுமையிலேயே வாடி வதங்குகின்றனர். ஒரு சிலர் பேரறிஞர்களாகத் திகழ்கின்றனர். மற்றுஞ் சிலரோ அறியாமையிற் கிடந்துழன்று அழிகின்றனர்! சிலர்

நல்லொழுக்கம் தலை நிற்கின்றனர். பிறர் சிலரோ, தீயொழுக்கமே கன்றிப் பெரிதும் திரிதந்து அலைகின்றனர்.

இப்பரந்த உலகத்தை இனிது நோக்கி ஊன்றி யுணருந்தோறும், இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது, நம்மனோர் அறிவிற்குப் பொருந்துவதேயாகும். அக்கடவுட் பொருளே நமக்கு உடல் கருவி உலகம் நுகர்ச்சிகள் ஆகியவற்றைக் கொடுத்து, நம்முடைய நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை நல்கி, நம்மைக் காத்து ஆட்கொண்டு வருகின்றது. இவ்வுண்மையினை யுணர்ந்து நம்பி, நல்லொழுக்கம் கடைப்பிடித்து நல்லவர்களாக வாழ்வதற்குரிய உணாவே, பக்தி யுணர்வு எனச் சுருக்கமாகக் கூறலாம்.

இத்தகைய பக்தியுணர்வினால், நமக்கு நம் உலகியல் வாழ்வில் நன்மையே ஏற்படும் என்பது திண்ணம். உலகெங்குமுள்ள பலவேறு சமயமக்களும் போற்றுகின்ற நிலையில் விளங்கிவரும் பக்திநெறிச் சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள் பலவும், இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

தேசீய கவிஞர் திரு சுப்பிரமணிய பாரதியார் அவர்களும், தமது கவிதை ஒன்றில், பக்தி யுணர்வு அல்லது பண்பினால் நமக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பலவற்றையும், ஒருங்கினிது தொகுத்து உணர்த்தியிருத்தல் காணலாம்.

பக்தியினாலே — இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடீ!
சித்தம் தெளியும்!— இங்குச்
செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும்!
வித்தைகள சேரும்! — நல்ல
வீரர் உறவு கிடைக்கும்! மனத்திடைத்
தத்துவம் உண்டாம்! — நெஞ்சிற
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்! (1)

சோர்வுகள் போகும்! — பொய்ச்
சுகத்தினைத் தள்ளிச் சுகம்பெறல் ஆகும்! நற்
பார்வைகள் தோன்றும்! — மிடிப்
பாம்பு கடித்த விடம் அகன்றே நல்ல
சேர்வைகள் சேரும்! — பல
செல்வங்கள் வந்து மகிழ்ச்சி விளைந்திடும்!
தீர்வைகள் தீரும்! — பிணி
தீரும்! பலபல இன்பங்கள் சேர்ந்திடும்! (2)

கல்வி வளரும்! — பல
காரியம் கையுறும்! வீரியம் ஓங்கிடும்!
அல்லல் ஒழியும்! நல்ல
ஆண்மை யுண்டாகும்! அறிவு தெளிந்திடும்!
சொல்லுவ தெல்லாம் மறைச்
சொல்லினைப் போலப் பயனுள தாகும்! மெய்
வல்லமை தோன்றும்! தெய்வ
வாழ்க்கை யுற்றே இங்கு வாழ்ந்திடலாம்!

தெய்வம் உண்டு எனத் தெளிந்து பணிந்து ஒழுகுதல் ஆகிய பக்தி யுணர்வு, நம் மனித வாழ்க்கை சிறப்புறுதற்குப் பல்லாற்றானும் துணைபுரியும். தெய்வ நம்பிக்கையும் பக்தி யுணர்வும், சிறந்துயர்ந்த பண்பு நலங்கள் பலப்பல வெளிப்பட்டு மேலோங்கித் திகழ்தற்குக் காரணமாக அமைகின்றன (1).

சமயவுணர்வும் பக்தியும் இல்லாத ஒருவன், வேறு பிற துறைகளில் எவ்வளவு தான் சீரும் சிறப்புமுற்று விளங்கினாலும், தெய்வ நம்பிக்கையும் பக்தியுணர்வும் உடைய ஒருவனின் முன்னிலையில் சிறிது தாழ்ந்தே நிற்பான். முன்னையவனிடம் இல்லாததாய், ஏதோ ஒரு சிறந்த தனிப்பெரும் சிறப்பு, பின்னையவனிடம் அமைந்து விளங்குதலை எவரும் காணலாம் (2).

எனவே, நாம் அனைவரும் இத்தகைய சிறந்த பக்தியுணர்வு வாய்ந்தவர்களாய், வையத்து வாழ்வாங்கு நலமுற வாழ முற்படுவோமாக!

— ஆசிரியர்.

---

(1) "The highest flights of Charity, devotion, trust, patience, bravery etc, to which the wings of human nature have spread have been for religious ideals"

—Prof. William James.

(2) "When one compares the deeply religious and spiritual person with the best and bravest of those who are not religious, one sees, it must be confessed, that the former possesses something which others lack".

—Prof. J. B. Pratt

# உலகத் தமிழ்மாநாடு விழாமலர்

மதிப்புரை :

அண்மையில் சென்னையில் மிகப் பெருஞ்சிறப்பாக, வரலாறு காணாத வகையில் நடைபெற்ற உலகத் தமிழ்மாநாட்டை ஒட்டி வெளியிடப்பெற்றுள்ள விழாமலர், கலை நலஞ்சான்ற கவின்மிகு பதிப்பாக, எழில் நிறைந்து ஒளிவீசித் திகழ்கின்றது. இலக்கியம் – மொழி – கலை – பண்பாடு – சமயம் – மருத்துவம் ஆகிய துறைகளைப்பற்றி, அவற்றில் தேர்ச்சி வாய்ந்து விளங்கும் அறிஞர் பெருமக்கள் பற்பலர் எழுதிய அரிய பெரிய ஆராய்ச்சிக்கட்டுரைகள், இதன்கண் இனிது தொகுத்து நனிமிகச் சிறந்த முறையில், வெளியிடப் பெற்றிருக்கின்றன. இவ்விழா மலரில் வெளிவந்துள்ள கட்டுரைகளின் தலைப்புக்கள் பின் வருவன ஆகும்:—

பொற்காலம்காண, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பூம்புகார்க் காட்சிகள், திருப்புழனை, ஆத்திசூடியின் பெருமை, தமிழ்ச் சொற்சிறப்பு, தமிழ் வரிவடிவங்கள், தமிழ்மொழி - ஐரோப்பியர் காலம், சங்ககாலத் தமிழ், தமிழ் மொழியில் அணியியல், தமிழில் உரைநடை, அரியணையில் அழகு தமிழ், பாண்டிய நாட்டுக்காசுகள், பல்லவர் காலம், நாயக்கர்காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், தமிழகத்தின் தொன்மை, சிந்து வெளி நாகரிகம், நாட்டியக்கலை, நாடகக்கலை, படிமக்கலை, சங்ககால இசை, நுண் கலைகள், இடைக்கால இசை, நன்னடைநல்கல், பண்டைத் தமிழர் பண்பாடு, தமிழ் நூற்றொகை, தமிழில் செய்தி இதழ்கள், தமிழும் சமயமும், பக்தி இலக்கியங்கள், தமிழகத்தின் திருக்கோயில்கள், சமணர் வளர்த்த தமிழ் பௌத்தர் வளர்த்த தமிழ், நாயன்மார் கண்ட மெய்ந்நெறி, சைனர்கள் கண்ட மெய்ந்நெறி, இராமாநுசர் நெறி, சங்க இலக்கியத்தில் சித்த மருத்துவம், திருமூலர் அருளிய மருத்துவத் திருமந்திரம் எண்ணாயிரம், என்னும் கட்டுரைகள் இம்மலரை அணிசெய்கின்றன.

ஐரோப்பிய ஊழியர்களும் - தென்மொழிகளின் ஆராய்ச்சியும், இருபெரும் திராவிடக் கல்வியாளர்கள்-கால்டுவெல்லும் போப்பும், தமிழும் திராவிடமும், பழந் தமிழர்களின் வாழ்க்கைத் தத்துவம், தமிழில் நூலகக்கலை என்னும் தலைப்புக்களில், ஆங்கிலக் கட்டுரைகள் சிலவும், இம்மலரின் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன.

விழாமலரின் முகப்பு அட்டையில், தமிழகத்தின் ஐந்திணை வளக் காட்சிகளின் வண்ண ஓவியம், கண்ணைக் கவரும் முறையில் அமைந்துள்ளது. இதனைத் திறந்ததும், இனியதொரு நறும் பொய்கையினின்று செஞ்ஞாயிறுகண்டு நகைபொலிந்து முகை அவிழும் முறையில், எழில்மிகு செந்தாமரை மலர் ஒன்று இனிது புனைந்து இணைக்கப் பட்டுள்ளது. மற்றும் சங்கின் முழக்கம், மாதவியின் கானற்பாணி, கோவலன் கண்ணகி ('மாறிவருவேன்'), கோவில் எடுத்த காவலனும் பாவலனும், வள்ளுவர் வீரம் (5) அகத்திணைக் காட்சிகள் (6) என்னும் எழில்மிக்க வண்ண ஓவியங்கள் பலவும், இதழின் இடையிடையே சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இதழின் இறுதியில், பாண்டிய மன்னனின் அவையில் கண்ணகி வழக்கு உரைத்த காட்சி, நாடகப்பாங்கில்நலங்கனிய வியக்கத்தக்க விழுமியவகையில் சித்திரித்துக் காட்டப்பெற்றுள்ளது.

விழாமலர், மிகவும் உயர்ந்த வழவழப்பான கலைத் தாளில், திருத்தமாக மிகச் சிறந்த முறையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. மலரின் பக்கங்கள் ஒவ்வொன்றும், அச்சு வேலையின் அழகிய நுண்கலைத் திறமெலாம் அமைந்து மின்னித் திகழ்கின்றது. தமிழன்பர்கள் அனைவரும், வாங்கிப் போற்றிப் பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டிய சிறந்த இனிய மலர்! விலை ரூபா 30–00

—ஆசிரியர்.

கிடைக்கும் இடம் :—

**கதர் கைத் தொழில் அங்காடி,** (குறளகம்),

இராஜா அண்ணாமலை மன்றம் (அருகில்), சென்னை–1.

# மதிப்புரைகள்.

**(1) கோவல் ஆதீனக் குருமணி :**

தமிழகத்தில் உள்ள திருமடங்கள் பலவற்றுள், திருக்கோவலூர் ஆதீனம் என்பதும் குறிப்பிடத்தக்க சிறப்புடையது. இந்நூற்றாண்டின் முதற் பகுதியில், செந்தமிழும் சிவநெறியும் செழித்தோங்குதற்குப் பல்லாற்றானும் தொண்டாற்றிய பெருமக்கள் பலருள், சீலத்திரு. சிவசண்முக மெஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் (1873-1942) என்னும் ஞானியார் அடிகள், தலை சிறந்த ஒருவர் ஆவார்.

ஞானியார் அடிகள் தென்சொற் கடல் கடந்தவர்; வடசொற்கு எல்லை தேர்ந்தவர். தெலுங்கு, கன்னட மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். ஆங்கிலமும் நன்கு அறிந்தவர். தமிழ்நாடு முழுவதும், மூலை முடுக்கர் எங்கணும் திருவுலாச் சென்று, ஆயிரக்கணக்கான தம் அரும்பெரும் சொற்பொழிவுகளால் ஞானஒளி பரப்பி, அரை நூற்றாண்டுக்கும் மேலாக, நாட்டிற்குப் பெருந் தொண்டாற்றியவர் ஞானியாரடிகள்.

அத்தகைய அரும்பெருஞ்சிறப்பு வாய்ந்த ஞானியாரடிகள், ஐந்தாம் முறை அருட்பெருங் குரவராக அமர்ந்து அணி செய்யப்பெற்றது, திருக்கோவலூர் ஆதீனம்! அதனை ஏறத்தாழ 300 ஆண்டுகட்கு முன்னர் நிறுவிய முதற்பெருங்குரவர், சிவத்திரு ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள்! அவ்வருளாளரின் வரலாற்றை விரித்துரைப்பதே, இந்நூல். இதனை எளிய இனிய தெளிவான நடையில், புலவர் திரு. க. பா. வேல்முருகனார் எழுதியுள்ளார். இந்நூல், பல சிறந்த பட இணைப்புகளும், பாடல்களும், குறிப்புரைகளும் கொண்டு திகழ்கின்றது. பெரும் புலவர்கள் பலர் அணிந்துரை அளித்துள்ளனர். 200 பக்கங்கள்: விலை குறிக்கப்படவில்லை. கிடைக்குமிடம் : ஸ்ரீமத் ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர்.

**(2) சுப்பிரமணிய வியாசம் :**

இந்நூல், முருகன் அருள்பெற்ற அண்மைக்காலச் சான்றோர்களுள் ஒருவரும், தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் போன்ற செந்தமிழ்ப் பெருஞ் சான்றோர்களால் பெரிதும் மதித்துப் போற்றப் பெற்றவரும், தகராலய இரகசியம், குமாரசுவாமியம் முதலிய பெரு நூல்களை இயற்றியருளியவரும், ஆகிய பாம்பன் குமரகுருபர அடிகளார் இயற்றியருளியது. முருகனைப் பற்றிய பல வரலாறுகளையும், தத்துவ நுட்பங்களையும் விளக்குவதாக, வினாவிடை முறையில், எளிய இனிய தெளிவான நடையில் இயன்றுள்ளது. முருகன் அடியார்களுக்கு மிகவும் பயன்படும் நூல். 200 பக்கங்கள், விலை ரூபா 2-50. கிடைக்குமிடம் : திருப்புகழமிர்தம் அலுவலகம், 89, சிங்கண்ணச் செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

# மகாமகத்தில் அதிருத்திர ஹோமமும் அன்னதானமும்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரியசுவாமிகளின் ஆக்ஞைப்படி கும்பகோணம் மடத்தில் பிப். 4 உயிலிருந்து மக்களின் நன்மைக்காகவும், குறிப்பாக நாட்டில் நிலவும் பஞ்சமும் குழப்பங்களும் நீங்கவும், பரமசிவனைத் திருப்தி செய்யும் பொருட்டு அதிருத்ரம் என்னும் ஓர்புனிதயாகம் தொடங்கப்பெற்றது. இந்த ருத்திரயாகம் 11 வேதபண்டிதர்களைக் கொண்டு 11 முறை யஜுர்வேதத்தில் உள்ள மகந்நியாசம், ருத்ரம், சமகம், என்னும் மந்திரங்களை 11 தடவை ஒரேநாளில் ஜபித்து, ஜபித்த எண்ணிக்கையில் பத்தில் (10ல்) ஒரு மடங்கை, ஹோமகுண்டத்தில் நெய்யினுல் ஆகுதி செய்தல் ஏகாதசருத்ரம் எனப்படும். மேலும் 11 கலசங்களில் புனிதநதியின் தண்ணீரை நிரப்பி அதற்கென நிர்மாணிக்கப்பெற்ற வேதிகையில் (மேடை) மந்திரங்கள் மூலம் ஸ்தாபனம் செய்யப்படும். இவ்விதமாகவே 11 பேர்கள் 11 நாட்கள் ஜபித்து ஹோமம் செய்தால் அதை மஹாருத்திரம் என விதிக்கப்பட்டுள்ளது. அதுபோலவே, 121 வேத பண்டிதர்கள் 11 நாட்கள் தொடர்ந்து இந்த யாகத்தை நடத்தினுல் அதற்கு "அதிருத்திரம்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த யாகத்திற்கெனத் தஞ்சை, திருச்சி முதலான மாவட்டங்களிலுள்ள ஸ்ரீசுவாமிகளது பக்தர்கள், சுமார் ரூ 75,000/- வசூலித்துச் சிறந்தமுறையில் இதை நடத்தி வைத்தார்கள். இந்தத் தொகையில் பாதிக்குமேல், இதில் பங்கெடுத்துக்கொண்ட வேதவிற்பன்னர்களுக்குத் தட்சிணையாகக் கொடுக்கப்பட்டது.

யாத்திரீகர்களுக்காக இவ்விடம் மடத்தின் பின்புறம் தோட்டத்தில் பெரிய கொட்டகை அமைத்து 12 நாட்கள் தொடர்ந்து ஆயிரக்கணக்கானவர்களுக்கு அன்ன தானம் சந்தர்ப்பணை நடைபெற்றது. மேலும் ஸ்ரீமடத்தின் பொறுப்பில் ஸ்ரீராமஸ்வாமி கோவிலிலும், ஸ்ரீ சாரங்கபாணி கோவிலிலும் மூன்று நாட்களில் நாள் ஒன்றுக்கு ஆயிரக் கணக்கானவர்களுக்கு அன்னதானம் செய்விக்கப்பட்டது. ஸ்ரீ சுவாமிகளின் ஆக்ஞைப் படி அந்தந்தக் கோயில்களின் டிரஸ்டிகள் அவற்றைக் கவனித்துக்கொண்டார்கள்.

கும்பகோணம் மகாமகம் சமயம் ஸ்ரீமடத்தின் சமீபம் பொம்மலாட்டமும், கரக ஆட்டமும், திருச்சி ஜெ. சடகோபன் அவர்களால் சமயத்திரைப் படக்காட்சிகளும், காண்பிக்கப் பட்டன.

மற்றும் "கும்பகோண க்ஷேத்திரம், தீர்த்தம்" இவைகள் அடங்கிய பிரசுரங்கள் ஸ்ரீமடத்தின் சார்பில் அச்சடித்துச் சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு ஏ. ராதாகிருஷ்ணன் அவர்களிடம் வழங்கப்பட்டு, மகாமகத்தன்று ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் திருக்கோயிலில் அன்பர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

கும்பகோணத்தில் அதிருத்ர ஜப ஹோமமும், அன்னம் பாலிப்பும் நடத்திய குழுவின் சார்பில், ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின்அபிப்ராயப்படி, வரும் மார்ச் மாதம் 3 ஆம் தேதி முதல், காஞ்சீபுரம் ஸ்ரீமடத்தில் சகஸ்ரசண்டிஹோமம் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்து வருகிருர்கள். மார்ச் 13ம் தேதி மகத்தன்று பூர்ண ஆகுதி நிகழும். அன்று ஸ்ரீகாமாட்சியம்மன் கோயிலில் பிரம்மோற்சவம்பூர்த்தியாகிறது.

—செய்திச் சுருக்கம்.

# மாய நன்றுடன்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) அவர்கள்,
தேவகோட்டை.

அநாதி நித்தியப் பொருள்களாகிய பதி, பசு, பாசங்களுள் பாசம், மூவகைப் பட்டிருட்பது. ஆணவம், கன்மம், மாயை யாகிய அம்மூவகைப் பாசங்களுள் மாயை, சுத்த மாயை என்றும், அசுத்தமாயை என்றும் இரண்டு வகைப்பட்டிருக்கும். சுத்த மாயையில் நாதம், விந்து, சாதாக் கியம், ஈச்சுரம், சுத்தவித்தை ஆகிய சிவ தத்துவங்கள் ஐந்தும் தோன்றும்.

அசுத்த மாயையில் தத்துவமாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் ஆகிய வித்தியா தத்துவங்கள் ஏழும், பிரகிருதி, புத்தி, அகங்காரம், மனம், செவி, தோல், கண், நாக்கு, மூக்கு, வாய், கால், கை, குதம், குறி, ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம், வெளி, வளி, தீ, நீர், மண் ஆகிய ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும் தோன்றும்.

அநாதி கேவலத்தில் ஆணவத்தோடு அத்துவிதமாகி அறிவிச்சை செயல் களின்றிக்கிடந்த உயிர்களின் உய்தியில் திருவுளங்கொண்டு, பரம கருணாநிதி யாகிய சிவபெருமான் அவற்றுடன் சேர்தத மலங்கள் கன்மம், மாயை என்னும் இரண்டு மாகும். மாயையில் ஒருவகையாகிய சுத்த மாயை, மற்றொரு வகையாகிய அசுத்த மாயையிலிருந்து தநு கரண புவன போகங் களைப் பெற்று வாழும் உயிர்களுக்கு, அத் தநு கரண புவன போகங்களின் சார்பை யும் நீக்கத்தையும் வழங்கும் பொருட்டுச் சிவபெருமான் தங்கியிருக்கும் நிலைக்கள மாயிருக்கும்.

சொரூப நிலையில் சிவமாயிருக்கும் பரம் பொருள் தடத்த நிலையில் பதியாக வரும் பொழுது அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளைக் கொண் டருளும். அருவத் திருமேனி, சுத்த மாயையில் நாதம், விந்து என்னும் தத்து வங்களை நிலைக்களங்களாகக் கொண்டு சிவமும் சத்தியுமாகவும், அருவுருவத் திரு மேனி சாதாக்கியம் என்னும் தத்துவத்தை நிலைக்களமாகக் கொண்டு சதாசிவ மாகவும், உருவத் திருமேனி ஈச்சுரம், சுத்தவித்தை என்னும் தத்துவங்களை நிலைக் களங்களாகக் கொண்டு மகேசுவரனும் உருத்திரனுமாகவும் எழுந்தருளியிருக்கும்.

சிவபெருமான் உயிர்களின் உய்தியின் பொருட்டுத் தமது திருவுள்ளத்தில் ஞான மொன்றே கொண்டு எழுந்தருளி இருக் கும்பொழுது நாத தத்துவத்திலும், கிரியை யொன்றே கொண்டு எழுந்தருளியிருக்கும் பொழுது விந்து தத்துவத்திலும், ஞானம் கிரியைகளை ஒப்பகொண்டு எழுந்தருளி யிருக்கும்பொழுது சாதாக்கிய தத்துவத் திலும், கிரியை மிகுந்து ஞானங்குறைய எழுந்தருளியிருக்கும்பொழுது ஈச்சுர தத்து வத்திலும், ஞானம் மிகுந்து கிரியை குறைய எழுந்தருளியிருக்கும்பொழுது சுத்த வித்தியா தத்துவத்திலும் வீற்றிருப் பார். இதனை

> "ஞானமே யான போது சிவன்;ரெழில் ஞான
> மொக்கின்
> ஈனமில் சதாசிவன்;பே ரீசனுந் தொழில
> தேறின்;
> ஊனமேற் கிரியை வித்தை"

என்று சிவஞான சித்தியார் உணர்த்தி யிருக்கின்றது.

அசுத்த மாயையினும் பிரகிருதி மாயையினும் உயிர்கள் தொழிற்படுவதற்குச் சிவபெருமான் சுத்தமாயா தத்துவங்களை நிலைக்களங்களாகக் கொண்டு இயக்குவாராதலின், அச்சுத்த மாயை அவரது சுதந்தரத் தானமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. சிவபெருமானையல்லாத மற்றைத் தெய்வங்களெல்லாம் அசுத்த மாயா தத்துவங்கள், பிரகிருதி மாயா தத்துவங்கள் ஆகியவற்றையே தத்தமக்குரிய நிலைக்களங்களாகக் கொண்டு தொழில் ஆற்றுபவை. சிவபெருமான் ஒருவரே தடத்த நிலையில் சுத்த மாயா தத்துவங்களையும், சொரூப நிலையில் அவற்றைக்கடந்த பரவெளியையும் நிலைக்களங்களாகக் கொண்டு வீற்றிருந்தருளுவார். இதனாலேயே சுதந்தரமில்லாத மற்றைத் தெய்வங்கள் எல்லாவற்றிலும் மேலான சுதந்தரராகச் சிவபெருமான் வேதமாகிய அருள் நூல்களில் குறிக்கப்பெற்று இருக்கின்றார்.

இங்ஙனம் தடத்தத்தில் சுத்த மாயா தத்துவங்களில் எழுந்தருளியிருக்கும் பெருமானே; நம்போன்ற சாதகர்களின் தியானப் பொருளாயிருப்பவர். தத்துவங்களைக்கடந்து அகண்டாகார ஒளிப்பொருளாய் விளங்கும் சிவத்தை நமது தியானத்தில் நாம் எந்தக் காலத்திலும் பற்றிப்பிடிக்க முடியவே முடியாது. நமது உள்ளம் உருவமுடைய பொருளைக்கூட இடையீடின்றிப் பற்றி நிற்கும் இயல்புடையதன்று. அங்ஙனமாகவும் நிட்களமும், நிர்க்குணமும், நிரஞ்சனமும் உடைய பரம்பொருளை உள்ளத்தில் வைத்துத் தியானிக்கிறோமென்று போலி நாடகம் நடிப்பவர்களைப்பற்றி என்ன சொல்ல இருக்கிறது ?

தடத்தத் திருமேனி கொண்டு எழுந்தருளிவரும் சிவபெருமானே, சாதகர்களின் தியானத்திற்குரியவர் என்பது முதலாகிய உண்மைகளைத் திருமூல தேவநாயனார் தமது திருமந்திரமாலைக் கடவுள் வாழ்த்து இருபத்திரண்டாம் திருப்பாடலில் உணர்த்தியருளுகின்றார். அத்திருப்பாட்டு

> "மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
> நினைத்த தறிவன் எனில்தான் நினைக்கிலர்
> எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
> பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே"

என்பதாகும்.

இந்தத் திருமந்திரத்தில் "மனத்தில் எழுகின்ற மாய நன்னாடன்" என்பது, மெய்யடியார்களின் தியானப் பொருளாக எழுந்தருளும் சிவபெருமான், சுத்த மாயா தத்துவங்களை நிலைக்களங்களாகக் கொண்டவன் என்பதை விளக்குகின்றது.

கடவுளும் உயிர்களும், சித்துக்கள் என்னும் வகையில் ஒற்றுமையுடையனவாயிருப்பினும், கடவுள், தானே எல்லாவற்றையும் அறியும் பேரறிவுடையவர். உயிர்கள், எவற்றையும் அறிவித்தாலன்றி அறியமாட்டாத சிற்றறிவுடையன என்னும் வகையில், மலைக்கும் மடுவுக்குமுள்ள ஏற்றத்தாழ்வான வேற்றுமையையும் உடையனவாயிருக்கின்றன. உயிர்கள் தோறும் ஒளித்து நின்ற கள்வனாகிய இறைவன், அவ்வுயிர்களது மனநிலைகளுக்கேற்ப அறக்கருணை, மறக்கருணைகளைப் புரிந்து, அவற்றை ஆட்கொள்ளும் பேருதவியை இடையீடின்றிச் செய்து கொண்டிருக்கின்றான்.

இங்ஙனம் இறைவன் ஒழிவின்றிச் செய்துவரும் உதவிகளை எண்ணி அவனை நினைந்து துதிப்பவர் எத்தனை பேர் உள்ளனர் ? ஆசிரியர் திருமூல தேவநாயனார், இவ்வினாவுக்கு விடை காண்பதில் சிறிதும் தயக்கம் கொள்ளவில்லை. "நினைத்த தறிவன் எனில்தான் நினைக்கிலர்" என்று கூறி, நினைப்பவர் இலர் என்ற முடிவுக்கே வந்து விடுகின்றார்.

மேலும் "இறைவனுக்கு என்பால் அன்பில்லை" என்று சொல்லுபவர்களையே பெரும்பான்மையாக நாம் காண்கின்றோம். உலகியல் துன்பத்தில் உழலுகின்ற வேதனையால் அவர்கள் அப்படிச் சொல்லுகின்றார்கள். தாம் நுகரும் துன்பத்திற்குத் தமது தீவினையே காரணம் என்று தெரிந்து கொள்ளாத அறியாமையே, அவர்களைக் கடவுள் அன்பில்லாதவர் என்று சொல்லும்படி செய்து விடுகின்றது.

உயிர்களின் மாட்டுக் கடவுளது அன்புண்மையை, அவரை வேண்டாது தப்ப நின்றவர்களுக்கும், அவர் செய்து வரும் உதவிகளைக் கொண்டு நன்கு அறிந்து கொள்ளலாம். இதனை "எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன், பிழைக்க நின்றார் பக்கம் பேணிநின் றானே" என்ற இறுதிப் பகுதியில் இத்திருமந்திரம் உணர்த்தியருளுகின்றது.

*

The following particulars regarding the ownership of "THIRUKOIL" the monthly newspaper published, as called for, by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

## FORM IV

(See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. Place of Publication. | ... | Nungambakkam, Madras-34. |
| 2. Periodicity of Publication. | ... | Monthly. |
| 3. Printer's name. | ... | P. G. Natarajan and N. Sarangapani, Partners, 10 & 11, Bunder Street, Madras-1. |
| Nationality. | .... | Indian. |
| Address. | ... | 10 & 11, Bunder Street, Madras-1. |
| 4. Publisher's name. | ... | Thiru A. Radhakrishnan, M.A., B.L., Commissioner, H.R. & C.E. (Admn) Department. (Ex-Officio) |
| Nationality. | .... | Indian. |
| Address. | ... | Nungambakkam, Madras-34. |
| 5. Editor's name. | ... | Thiru A. Radhakrishnan, Commissioner, H.R. & C.E. (Admn) Department, (Ex-Officio) Madras-34. |
| Address. | ... | Nungambakkam, Madras-34. |
| Nationality. | | Indian. |
| 6. Name and Addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | | Thiru A. Radhakrishnan, M.A., B.L., Commissioner, H.R. & C.E. (Admn) Department, Madras-34. (Ex-Officio.) |

I, A. Radhakrishnan, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

**(Sd) A. RADHAKRISHNAN,**
Publisher.

Dated: 1—3—68.